வெளியீடு 31-8-2002 Issued 31-8-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 14, 2002 – தொகுதி 15 – எண் 1

**Thursday the 14th March, 2002 – Volume 15 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

**14-3-2002**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் iii-vii

Governor and Council of Ministers ix-xii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xiii-xvi

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xvii-xxvii

1. வினாக்கள்-விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 1-40

(ஆ) குறுகிய கால வினா 40-42

2. சிறப்புக் கவன ஈர்ப்பு—

கோவை மாவட்டம், திருப்பூர் ஒன்றியம், இடுவாய் ஊராட்சி மன்றத் தலைவர் கொலை செய்யப்பட்டுள்ளது குறித்து 42-46

திரு. கே. சி. கருணாகரன் 42-44

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 44-46

3. தகவல் கோரல்—

சட்டக் கல்லூரி மாணவர்கள் பிரச்சினை குறித்து 46

4. அறிக்கைகள் அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு 47

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 5. | ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்-தொடர்ச்சி | 47-117 |
| | டாக்டர் க. பொன்முடி | 51-67 |
| | திரு. பி.எம். நரசிம்மன் | 67-74 |
| | திரு. லா. சந்தானம் | 74-84 |
| | திரு. கே.என். இலட்சுமணன் | 84-86 |
| | *திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 87-103 |
| | *திருமதி டி. யசோதா | 103-117 |
| 6. | அரசினர் தீர்மானம்— | |
| | விதி 32-ஐத் தளர்த்தல் | 118-119 |
| 7. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 119-121 |


தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223756.
சென்னை-600 008
நூலகம்



## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர்—திரு. பெ. ஸ்ரீ. ராமமோகன் ராவ்**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :**
   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள்துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :**
   பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

3. **நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :**
   நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

4. **கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை :**
   கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

5. சட்டத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :**
சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :**
இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை :**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலன்.

8. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :**
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. தனபால் :**
கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

10. வருவாய்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :**
வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.



11. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

12. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :**
ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

14. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மின் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :**
மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :**
தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரிகள்.

17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**
வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

18. **ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் :**
குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர்-கிராமத் தொழில் வாரியம்.

19. **வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி சம்பத் :**
வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

20. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :**
கால்நடை பராமரிப்பு.

21. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :**
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

22. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :**
தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

23. **பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :**
பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

24. **செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்பிரமணியன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு.



25. **கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :**
கைத்தறி மற்றும் துணித் தொழில்.

26. **மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :**
மீன்வளம்

27. **சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare.

2. **Minister for Public Works and Prohibition and Excise** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

   Public Works, Highways, Irrigation including Minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption and Prisons.

3. **Minister for Finance and Information Technology** .. **The Hon. Thiru C. Ponnaiyan:**

   Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies and Information Technology.

4. **Minister for Education** .. **The Hon. Dr. M. Thambidurai:**

   Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

5. **Minister for Law** .. **The Hon. Thiru D. Jayakumar:**

   Law and Courts.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:** Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

9. **Minister for Co-operation, Food and Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:** Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

10. **Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan and Passports.

11. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.



12. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

13. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

14. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. **Minister for Electricity** .. **The Hon. Thiru Nainar Nagendran:** Electricity, Non-conventional Energy Development.

16. **Minister for Industries and Commercial Taxes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:** Industries, Iron and Steel Control, Mines and Minerals, Electronics and Commercial Taxes.

17. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:** Forests and Environment and Pollution Control.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vilwanathan:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

19. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru M.C. Sampath:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

| | | |
|---|---|---|
| 20. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Animal Husbandry. |
| 21. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru K. Sudarsanam:** Backward classes, Most Backward Classes and De-notified Communities. |
| 22. **Minister for Labour** | .. | **The Hon. Thiru Va.Thu. Natarajan:** Labour, Employment and Training Urban and Rural Employment, Census and Wakfs. |
| 23. **Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |
| 24. **Minister for Information and Publicity** | .. | **The Hon. Thiru K.K. Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control. |
| 25. **Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundram:** Handlooms and Textiles. |
| 26. **Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| 27. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள் *

திரு. பி.ஆர். சுந்தரம்

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. எம்.ஏ. ஹக்கீம்

திரு செ.கு. தமிழரசன்

திரு. லா. சந்தானம்

### முதன்மைச் செயலாளர்

திரு. செ.சு. ஜானகிராமன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

*12-3-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ.,பி.எல். | .. | துணைச் செயலாளர் |



| | | |
|---|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச. இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ. கு. சீ | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்

22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்

23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்

24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி

25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்

26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி

27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை

28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி

29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்

30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்

31. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்

32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)

34. இராஜசேகர், திரு. பா. .. ராஜபாளையம் (செ.வ.)

35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)

36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்

37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்

38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்

39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்

40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்

41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)

42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி

45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்

47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு

48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி

49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)

50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி

51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி

52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)

53. கந்தசாமி, திரு. கு.ரா. .. சத்தியமங்கலம்

54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)

55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்

56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்

57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி

59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ .. குளத்தூர் (செ.வ.)

60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)

62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)

63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்

64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்

65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2
66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஒசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. எ. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம். எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம். சி. .. நெல்லிக்குப்பம்



88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு. பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி. என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ். எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி. ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி. எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி. ஏ. .. மருங்காபுரி

111. செல்வம், திரு. எஸ். கே. .. வீரபாண்டி

112. செல்வராஜ், திரு. ஏ. கே. .. மேட்டுப்பாளையம்.

113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்

114. சேகரன், திரு. கே. என். .. திருவெறும்பூர்

115. சேகர்பாபு, திரு. பி. கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்

117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

118. ஞானமூர்த்தி, திரு. கே. ஜி. பி. .. திருநாவலூர்

119. தமிழரசன், திரு. செ. கு. .. நன்னிலம் (செ.வ.)

120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்

121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்

122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்

123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி

124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)

125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்

126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு

127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்

128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி

129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்

130. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)

131. துரைமுருகன், திரு. .. காட்பாடி

132. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி



133. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு

134. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்

135. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி

136. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்

137. நடராஜன், திரு. வது. .. இளையான்குடி

138. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி

139. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு

140. நளினி மனோகரன், திருமதி .. போளூர்

141. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு

142. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு

143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்

144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்

145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்

146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1

147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)

149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை

150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்

152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்

154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு

155. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை

156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ். எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பெருமாள், திரு. என். கே. .. விளாத்திக்குளம்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ். எஸ். .. சாத்தான்குளம்



179. மலையப்பசாமி, திரு. அ. இரா. .. கபிலர்மலை
180. மல்லிகா, திருமதி சி. .. முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. .. கூடலூர்
183. முரளிதரன், திரு. கே. வி. .. தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆ. கு. .. ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா. பூ. .. காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி. பி. எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என். ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ். எஸ். .. கோபிசெட்டிபாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
194. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
195. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
196. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
197. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
198. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
199. ராஜாங்கம், திரு. வி. ஆர். .. சோழவந்தான்
200. ராஜு, திரு. எச். எம். .. உதகமண்டலம்
201. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்

| | | |
|---|---|---|
| 202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா. ப. | .. | பேரூர் |
| 203. லட்சுமணன், திரு. வி. கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 204. லியாவுதீன் சேட், திரு. இ. ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 205. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 206. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 208. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 209. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 210. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 211. வினாயகமூர்த்தி, திரு. எஸ். ஜி. | .. | பூங்காநகர் |
| 212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 213. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 214. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 215. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 216. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-I |
| 217. வேதரத்தினம், திரு. எஸ். கே. | .. | வேதாரண்யம் |
| 218. வேலுசாமி, திரு. செ. ம. | .. | பல்லடம் |
| 219. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 220. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 221. வைதியலிங்கம், திரு. மீ. அ. | .. | தாம்பரம் |
| 222. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 223. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |
| 225. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 226. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 227. ஜெயராமன், திரு. வி. | .. | பொள்ளாச்சி |
| 228. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 229. ஸ்டாலின், திரு. மு. க. | .. | ஆயிரம் விளக்கு |
| 230. ஹக்கீம், திரு. எம். ஏ. | .. | மதுரை மத்தி |
| 231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |
| 233. (வெற்றிடம்) | .. | சைதாப்பேட்டை |
| 234. (வெற்றிடம்) | .. | வாணியம்பாடி |
| 235. (வெற்றிடம்) | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மாசி 30, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2033

## 2002 மார்ச் 14, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

குடிமக்களை அன்போடு அரவணைத்துக் கொண்டு ஆட்சிபுரிபவரின் அடியொற்றி மாநிலமே அவரது பின்னால் நிற்கும்.

## 1. வினாக்கள் - விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 21. திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**21—**

### பெற்றோர் - ஆசிரியர் சங்கம்

***2223—திரு. பி.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மார்ச் 14

(அ) கல்விக் கூடங்களில் அமைக்கப்படும் பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களில் பெற்றோர் மட்டுமே உறுப்பினராகவோ, நிர்வாகியாகவோ இருக்க வேண்டும் என விதி ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கல்விக் கூடங்களில் அமைக்கப்படும் பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களில், பெற்றோர் மட்டுமல்லாமல் பள்ளியில் பணியாற்றும் தலைமை ஆசிரியர், ஆசிரியர்களும் உறுப்பினர்கள் ஆவார்கள். பள்ளி உள்ள இடத்தில் வசிக்கும் ஓய்வு பெற்ற கல்வித் துறை அலுவலர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், மாணவ, மாணவியரின் பெற்றோர் இருவரும் உயிருடன் இல்லாத நிலையில் மாணவ, மாணவியர் பள்ளியில் சேர்க்கையின்போது விண்ணப்பத்தில் கையொப்பம் இட்ட பாதுகாவலர் ஆகியோர் உறுப்பினராக, சந்தா செலுத்துவதன் மூலமாகப் பணியாற்றலாம் என்ற விதி உள்ளது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கூடங்களில் அமைக்கப்படுகின்ற பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களில் பெற்றோர் மட்டுமே உறுப்பினராக இருக்க வேண்டும் என்று இருந்த நிலையில், பெற்றோர் அல்லாதவர்களும், அதாவது சமூக சேவையில் ஈடுபடாதவர்கள், சேவை மனப்பான்மையில் நாட்டம் இல்லாதவர்கள், இப்படிப்பட்டவர்களெல்லாம் இன்றைக்கு பெற்றோர்-ஆசிரியர் கழகத்தில் தலைவராக இருக்கின்றார்கள். பெற்றோர்-ஆசிரியர் கழகத்தைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கின்றவர்களெல்லாம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்படாமல்—மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்வு செய்யப்பட வேண்டுமென்று விதி இருந்தும், அவர்கள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்படாமல்—இன்றைக்குப் பதவியிலே இருக்கின்றார்கள். அந்தப் பெற்றோர்-ஆசிரியர் கழகங்களின் தலைவர்கள் பள்ளியினுடைய ஆண்டு விழாவிற்கோ, வேறு எந்த நிகழ்ச்சிக்கோ தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களை அழைப்பதில்லை என்ற தகவல் அரசுக்குத் தெரியுமா; அதுபோல் செயல்படுகின்ற பெற்றோர்-ஆசிரியர் கழகங்களின் தலைவர்களை மாற்றியமைப்பதற்கு அரசு உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



2002 மார்ச் 14]

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கல்விக் கூடங்களில் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வரும் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் மிக முக்கியமான ஒன்றாகும். ஏனென்றால், அந்தப் பகுதியினுடைய மாணவ, மாணவியர்களுக்கு நல்ல கல்வியைத் தரவேண்டுமென்றால், அந்தப் பெற்றோர்களின் ஈடுபாடும் அதில் இருந்தால்தான் அந்தக் கல்வி நிலையம் சிறப்பாகச் செயல்பட முடியும் என்பதை அறிந்த பிறகுதான், நம்முடைய அரசானது இத்தகைய சங்கங்களை அமைத்து, சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று ஆணையைப் பிறப்பித்திருக்கிறது. அந்த விதிமுறைகளில் சொன்னதுபோல, பெற்றோர்கள்தான் சந்தா கட்டி உறுப்பினராக வேண்டுமென்று விதி இருக்கிறது. அதோடு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்களும் அதில் இருக்கின்றார்கள். சில ஓய்வுபெற்ற கல்வி ஆசிரியர்களும் இருக்கின்றார்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இவ்வாறு அமைக்கப்பட்ட இந்தச் சங்கத்தில் சிலர், பொதுத் தொண்டில் ஆர்வம் இல்லாதவர்களும், மாணவ, மாணவியரின் பெற்றோர்கள் அல்லாத சிலரும் தொடர்ந்து பதவியில் இருப்பதன் மூலமாக செயல்பாட்டில் குந்தகம் இருப்பதாகச் சொல்கிறார்கள். எனக்கும் சில முறையீடுகள் நம்முடைய உறுப்பினர்களிடமிருந்து வந்திருக்கின்றன, ஒருவரே பல ஆண்டு காலமாகத் தொடர்ந்து பெற்றோர்-ஆசிரியர் சங்கத் தலைவராக இருக்கின்றார்கள் என்று. இது உண்மையிலேயே சில இடங்களிலே இருக்கின்றது. காரணம், சில சூழ்நிலைகளுக்கு ஏற்ப அந்தக் கிராமப்புறங்களிலே தாராள உள்ளம் கொண்ட, பொது நலத்தில் ஆர்வம் கொண்ட சிலர், அங்கே அவர்களுடைய பிள்ளைகள் படிக்காவிட்டாலும் கூட, அந்தப் பள்ளியின் வளர்ச்சிக்காகப் பல்வேறு உதவிகளைச் செய்வதன் மூலமாக எல்லோரும் சேர்ந்து அவரைத் தலைவராக வைத்திருக்கின்றார்கள் என்ற செய்தியும் எனக்குக் கிடைத்திருக்கின்றது. ஆனால் விதிமுறைப்படி, அங்கே படிக்கின்ற மாணவ, மாணவியர்களின் பெற்றோர்கள்தான் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆகவே, இந்த விதிமுறையை மீறியிருந்தால், மீண்டும் அதைப் பரிசீலனை செய்து, அங்கு படிக்கும், மாணவ, மாணவியர்களின் பெற்றோர்களில் யார் சிறப்பாகச் செயல்படுகிறார்களோ, அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். இது ஒன்று.

இரண்டாவது, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடக்க வேண்டுமென்ற விதியும் இருக்கிறது. ஆகவே, அந்த விதிக்கு உட்பட்டுத் தேர்தல் நடைபெறாமல் இருந்தால், தேர்தலை நடத்துவதற்கான எல்லா

[2002 மார்ச் 14

முயற்சிகளையும் இந்த அரசு எடுக்கும். காரணம், 'அனைவருக்கும் கல்வி' என்ற திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக—10 ஆண்டு காலத்திற்குள் செயல்படுத்துவதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அதன்படி, அந்தப் பெற்றோர்-ஆசிரியர் சங்கம்தான் முக்கியமான பங்கை ஏற்கிறது. ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்றால்கூட, இனிமேல் அரசானது நேரடியாக அந்தப் பணத்தை பெற்றோர்-ஆசிரியர் சங்கத்திற்கே தர இருக்கிறது. இதிலே இடையிலே தருவதற்கு, P.W.D-க்கோ, மற்றவர்களுக்கோ அதற்கு உரிமையில்லாத அந்த நிலைமை ஏற்பட்டு இருக்கிறது.

*முற்பகல் 10-05*

ஆகவே பெற்றோர்-ஆசிரியர் கழகம் என்பது மிகவும் முக்கியமானது. பல கட்டடங்களைக் கட்ட வேண்டும். கழிப்பிடங்களை அமைக்க வேண்டும். குடிநீரைத் தர வேண்டும். ஆசிரியர்கள் பணியாற்றுவதற்குச் சரியாகப் பள்ளிக்கு வர வேண்டும். பள்ளிகளினுடைய தரத்தை உயர்த்துவதற்கு அந்தச் சங்கங்கள் இருக்க வேண்டும். அந்தச் சங்கங்களின் மூலமாகத்தான் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்கின்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. அவர்களும் சிறந்த முறையில் செயல்படுவார்கள் என்கின்ற நம்பிக்கையும் அரசுக்கு இருக்கிறது. ஆகவே, இந்தச் சங்கங்கள் சிறப்பாகச் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியைத் தருகிறேன். நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொன்னபோது, சில நிகழ்ச்சிகளுக்கு எம்.எல்.ஏ.-க்களை—நம் உறுப்பினர்களை—சரியாக அழைப்பதில்லை என்று சொல்லி இருக்கின்றார்கள். தவறுதான். ஏனென்றால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உறுப்பினர்கள், அவர்களுக்குண்டான மரியாதையைத் தர வேண்டும். ஏனென்றால், எந்த ஒரு வளர்ச்சிக்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குத் தகுந்த மரியாதையைத் தராவிட்டால் அந்த வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படும். ஆகவே, இவ்வாறு ஏதாவது தவறு ஏற்பட்டிருந்தால் அவற்றைப் போக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய சங்கங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெற வேண்டும் என்கின்ற விதி இருக்கிறது. ஆனால், நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னபடி, சில பள்ளிகளில் அந்தத் தலைவர்கள் செயல்படாமல், செயலிழந்து, எந்தவிதமான நிகழ்ச்சிகளிலுமே கலந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். அப்படிச் செயலிழந்து இருக்கும்



2002 மார்ச் 14]

அத்தகைய பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களையெல்லாம் கலைத்துவிட்டு, புதிதாகத் தேர்தல் நடத்தி, முறைப்படி அந்தப் பெற்றோர்-ஆசிரியர் கழகத் தலைவர்களை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அதேபோல, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் என்று இருக்கும்போது, தேர்தலே நடத்தாமல், அந்தப் பள்ளிகளினுடைய தலைமை ஆசிரியர் அங்கே குறிப்பிட்டு அவர்களே புதிதாகப் பெயர்களையெல்லாம் அவர்களுடைய இஷ்டத்திற்கு எழுதியிருக்கின்ற நடைமுறை அரசுக்குத் தெரியுமா? இதையெல்லாம் களைந்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்ட அத்தகைய குறைபாடுகளைப் போக்குவதற்காக, நம்முடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை முன்பே குறிப்பிட்டேன். அதன்படி, இனிமேல் எல்லா பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களும் தங்களுடைய நடவடிக்கைகளை 'Minutes Book'-ல் குறிப்பிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். பிறகு, உறுப்பினர்களிடம் அவர்களுடைய கையெழுத்தையும் வாங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கின்றோம். செயற்குழுவானது மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும். பொதுக் குழுவை வருடத்திற்கு இரண்டு முறையாவது அல்லது அதற்கு மேற்பட்டும் கூட்டலாம். ஆகவே, அவற்றையும் கூட்டி, அதற்கு வேண்டிய அந்தக் குறிப்பேடுகளையெல்லாம் குறிப்பிட்டிருக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கின்றோம். இதில் அவ்வாறு தவறு செய்கிறார்கள் என்றால், அந்தச் சங்கங்களின்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்-ஆசிரியர் கழகமா அல்லது சங்கமா என்பதைத் தாங்கள் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் பேசும்போது, பெற்றோர்-ஆசிரியர் கழகம் என்றே சொன்னார். அதற்கு சங்கம் என்று பெயரிடப்பட்டிருக்கிறதா, அல்லது கழகம் என்று பெயரிடப்பட்டிருக்கிறதா? ஒரு வேளை, இப்போது நிறையப் பள்ளிகளில் இருக்கக்கூடிய இதுபோன்ற சங்கங்களிலேகூட அரசியல் சாயங்கள் பூசப்பட்டு, சில இடங்களிலே பெரிய போராட்டங்கள் எல்லாம்கூட வந்துவிடுகின்றன. குறிப்பாக, வாலாஜாப்பேட்டை மேல்நிலைப பள்ளியிலே, இலட்சக்கணக்கான ரூபாய், பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின்

[2002 மார்ச் 14

மூலமாகச் சேர்க்கப்பட்ட பணம் கையாடப்பட்டு, தலைமை ஆசிரியர் மீதும், மற்றவர்கள் மீதும் புகார்கள் எல்லாம் கொடுக்கப்பட்டு, சாலை மறியல் போன்ற பல போராட்டங்கள் நடந்தும்கூட, ஒன்றரை ஆண்டு காலமாகியும் இன்றுவரை அதற்கான நீதி இன்னும் கிடைக்காமல் வாலாஜாப்பேட்டை மக்கள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்; இதிலே அரசியல் தலையீடு என்பது எள்ளளவும் இல்லாமல், ஒரு நியாயமான நிர்வாகம் நடப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி பெற்றோர்-ஆசிரியர் கழகம் என்றுதான் இருக்கிறது; சங்கம் என்பது கிடையாது. இது ஒரு Organisation. சொசைட்டி என்பதின் கீழ் இது வருவதில்லை. இருந்தாலும் நாம் முறைப்படி மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தவேண்டுமென்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கழகம் என்பது நல்ல சொல்தானே, அதிலே என்ன இருக்கிறது?

**திரு. சி. ஞானசேகரன்:** இரண்டு கழகங்களும் மாறி, மாறி..

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** அடுத்ததாக, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல, வாலாஜாப்பேட்டையிலே பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் மூலமாகச் சில பிரச்சினைகள் இருப்பது உண்மைதான். இதுகுறித்து அந்தப் பகுதி மக்கள் முறையீடுகளைச் செய்திருக்கிறார்கள். அந்த முறையீடுகளின்மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

*முற்பகல் 10-10*

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிற விளக்கத்தையொட்டி நான் கேட்கக்கூடியது; அமைச்சர் அவர்களுடைய விளக்கம் சரியாக இருக்கிறது; இது அனைத்துப் பள்ளிகளுக்கும் பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2002 மார்ச் 14]

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அனைத்துப் பள்ளிகளுக்கும் பொருந்தும். Matriculation பள்ளிகளுக்கும்கூட இது பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தைக் கொடுத்தார்கள். இருந்தாலும்கூட, சட்டமன்ற உறுப்பினர்களே கௌரவ உறுப்பினர்களாக அந்தந்தச் சட்டமன்றத் தொகுதியிலே உள்ள பள்ளிக்கூடங்களுக்கு இருந்தால் மிகவும் நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். இதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து, ஏற்கக்கூடிய ஒரு கருத்தாகும். ஆகவே, அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்-ஆசிரியர் கழகங்களுக்கு, அரசு ஒவ்வோராண்டும் மானியம் ஏதாவது வழங்குகிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசானது தனியாக ஒரு மானியம் தருவது கிடையாது. உறுப்பினர்கள் ஆகும்போது, அவர்களிடமிருந்து சந்தா வசூலிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பள்ளிகள் வளர்ச்சி பெறுவதற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதைப் பொறுத்தவரை, குறிப்பாக, கட்டடங்கள் கட்டுதல், மற்ற வளர்ச்சிப் பணிகளையெல்லாம் செயல்படுத்துவதற்காக, பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் மூலமாகத்தான் அனைத்துப் பணத்தையும் செலவிட அரசாங்கம் தருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்-ஆசிரியர் கழகங்களுக்கு என்னென்ன பணிகள் என்று அரசு வரையறுத்திருக்கின்றதா அப்படியென்றால் அவற்றிற்கு வரையறுக்கப்பட்டிருக்கின்ற பணிகள் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2002 மார்ச் 14

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் கழகங்களுக்கு என்னென்ன பணிகள் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக, அங்குள்ள பள்ளிகளை வளர்ச்சி செய்வதற்கு என்னென்ன திட்டங்கள் தேவையோ, அவற்றையெல்லாம் பெற்றோர்-ஆசிரியர் கழகம் செயல்படுத்தலாம். அதற்குப் பணம் நன்கொடையாகப் பெறுவது போன்றவற்றையும், சில நேரங்களில், ஆசிரியர்கள் இல்லாத ஒரு பிரச்சினை இருந்தால் அந்த நேரத்தில் தற்காலிகமாக ஆசிரியர்களை Consolidated Pay-லே நியமனம் செய்துகொள்வதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. பிறகு, ஆசிரியர்கள் சரியான முறையில் செயல்படாமல் இருந்தால், அவர்கள் குறிமீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்வதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகவேதான், நான் பல இடங்களுக்குச் செல்லும்போது, அங்கே இருக்கும் பெற்றோர்-ஆசிரியர் கழகத்தினரைச் சந்திக்கும்போது சில இடங்களில் பள்ளிகள் சரியாக நடைபெறுவதில்லை; சில வசதிகள் இல்லாமல் இருக்கின்றன என்கின்ற குறைபாடுகளைச் சொல்கிறார்கள்; இவற்றைப் போக்குவதற்கு என்னென்ன வழிமுறைகள் வேண்டுமோ, அவற்றையெல்லாம் நீங்கள் தரவேண்டுமென்று கேட்டிருக்கின்றோம். அதோடு, பள்ளியினுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் பெற்றோர்-ஆசிரியர் கழகமானது செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். இத்தகைய அனைத்து வளர்ச்சிகளுக்கும் அவர்களுக்கு உரிமை உண்டு. ஏனென்றால், ஒரு கிராமத்திலே நடைபெறும் பள்ளியை நேரடியாக அமைச்சரோ, மற்ற அதிகாரிகளோ பார்க்க முடியாது. அங்கு இருக்கும் பெற்றோர்களுடைய, அந்தப் பொதுமக்களுடைய involvement இருந்தால்தான், அது சிறப்படையும் என்பது இந்த ஜனநாயக நாட்டில் தெரிந்த ஓர் உண்மையாகும். ஆகவேதான், அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தில் முக்கியமான பங்கு அந்தப் பெற்றோர்-ஆசிரியர் கழகத்திற்குத்தான் இருக்கிறது. ஆசிரியர்கள் பயிற்சி பெறுவதற்காகப் பெரும் பணத்தை நாம் செலவு செய்தாலும், அந்தப் பள்ளியின் வளர்ச்சிக்கு அனைத்து உதவிகளும் செய்யப்பட வேண்டுமென்றால், பெற்றோர்-ஆசிரியர் கழகம்தான் அதைச் செயல்படுத்தும. படுத்த வேண்டும். அதற்கு அவ்வளவு உரிமைகளையும் இந்த அரசு தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.



2002 மார்ச் 14]

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்-ஆசிரியர் கழகத்திலே, பள்ளிகளிலே படிக்கின்ற பிள்ளைகளினுடைய பெற்றோர்கள்தான் அந்தப் பதிவேட்டிலே அல்லது அப்ளிகேஷனிலே கையெழுத்துப் போடுகிறவர்கள் மட்டும்தான் தலைவராகவும், உறுப்பினராகவும் இருக்க முடியும் என்று சொல்லி இருக்கிறார்கள், நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள். ஆனால் பொது நல விரும்பிகள், பள்ளி வளர்ச்சியினுடைய விரும்பிகள், அந்தப் பகுதியிலே இருக்கிற தனவந்தர்கள் ஒரு சிலர்--ஒரு சில பகுதிகளிலே இதுபோன்ற பெற்றோர்-ஆசிரியர் கழகத்திலே--தங்கள் பிள்ளைகள் படிக்காவிட்டாலும், அந்தப் பள்ளிக்கூடம் மிகச் சிறப்பாக வளர வேண்டுமென்று விரும்புகிறவர்கள் எல்லாம் இன்றைக்குத் தலைவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், திருக்கழுக்குன்றம், சிங்கப்பெருமாள்கோவில், கூடுவாஞ்சேரி போன்ற ஊர்களில் உள்ள பள்ளிகளிலேயுள்ள பெற்றோர்—ஆசிரியர் கழகங்களிலே இருப்பவர்களுடைய பிள்ளைகள் அங்கே படிக்கவில்லை; இருந்தாலும், அந்தப் பள்ளிகளுக்கெல்லாம் பல்வேறு கட்டடங்கள், அதற்கான வளர்ச்சிப் பணிகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபோன்று சிறப்பாகப் பணியாற்றுகிறவர்களுக்கும் குறைந்தபட்சம் ஒரு சொற்ப சதவிகிதமாவது, அதிலே விதியைத் தளர்த்தி, கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதர உறுப்பினர்கள் என்ற நிலையில் அவர்கள் இருக்கலாம். அவர்கள் புரவலர்களாகவும், கௌரவ உறுப்பினர்களாகவும் இருப்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால், நீங்கள் சொல்வதுபோல, சிலர் உறுப்பினர்களாக பெற்றோர்-ஆசிரியர் கழகத்தில் இருக்க வேண்டுமென்று கொண்டுவந்து விட்டால், சில நேரங்களில், உண்மையான அந்த மாணவ, மாணவியர்களுடைய பெற்றோர்கள் பொறுப்புக்கு வர முடியாத நிலை ஏற்பட்டுவிடும்; அத்தகைய நடைமுறைகள் ஏற்பட்டுவிடும். ஆகவே, இதுபோன்ற தாராள மனம் படைத்தவர்களுக்கும், நல்ல உள்ளம் படைத்தவர்களுக்கும் வாய்ப்புத் தருவதற்காக, புரவலர்கள் என்ற பெயரிலும், கௌரவ உறுப்பினர்கள் என்ற பெயரிலும் தரப்பட்டிருக்கிறது.

அதோடு, சில நேரங்களில் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்றால், சில வளர்ச்சித் திட்டங்களைச் செய்யவேண்டுமென்றால் அதற்கு சிறப்புக் குழுவை ஏற்படுத்த உரிமை இருக்கிறது. அந்த சிறப்புக் குழுவின் உறுப்பினராக, தலைவராக, கௌரவத் தலைவராக அவர்களைச் செயல்பட

[2002 மார்ச் 14

வைக்கலாம். அத்தகைய செயல்பாடுகளில், நீங்கள் சொன்னதுபோல கௌரவிப்பதற்கு வேண்டிய வழிமுறைகள், வரைமுறைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**22—**

**உயர்நிலைப் பள்ளி**

***7093—செல்வி சி. கனகதாரா:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பேரணாம்பட்டு தொகுதிக்குட்பட்ட பாலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2001-2002ஆம் கல்வியாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தி நம்முடைய புரட்சித் தலைவி அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. மீண்டும், வருகிற ஆண்டிற்கும் சில கோரிக்கைகள் நம்முடைய உறுப்பினர்களிடமிருந்து வந்து இருக்கின்றன. அவற்றை எல்லாம் செயல்படுத்துவதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அரசு உரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதையெல்லாம், இப்போதுள்ள நிதிநிலையைப் பொறுத்துத்தான் செயல்படுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றோம். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, எந்த அளவுக்குச் செயல்படுத்த முடியுமோ, அந்த அளவுக்குச் செயல்படுத்த இந்த அரசு தயாராக இருக்கிறது.



2002 மார்ச் 14]

**செல்வி சி. கனகதாரா:**

*"தக்கார் தகவிலர் என்பது அவரவர்*
*எச்சத்தாற் காணப் படும்"*

என்ற எழிலார்ந்த குறளுக்கு எடுத்துக்காட்டாய் அமர்ந்திருக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி.

*"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"*

என்று புலவர் பாடி இருக்கின்றார்; புறநானூற்றுச் செய்தியும் கூறுகின்றது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, பெண் கல்வி வளர உயர்நிலைப் பள்ளிகள் வேண்டும். பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் உயர்நிலைப் பள்ளிகளில் மட்டுமே படிப்பதை விரும்புகின்றார்கள். அதோடு மட்டுமல்லாமல், உயர்நிலைப் பள்ளிகளில் மட்டுமே நூலக வசதிகள், கணினி மையங்கள் உள்ளன. அனைவருக்கும் கல்வி, சீரான கல்வி, ஒருங்கிணைந்த ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கனகதாரா, பாலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொடுப்பார்களா என்று கேட்டிருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள், அதை மாற்றிக் கொடுத்து விடுகிறீர்கள் அல்லவா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** பரிசீலிக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிசீலிக்கிறோம் என்று அமைச்சர் சொல்கிறார்.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை மட்டும் சொல்லிவிட்டு அமர்கிறேன். இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிக் காட்டுவேன் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சூளுரைத்து இருக்கின்றார்கள். ஒன்றை மட்டும் கூறுகின்றேன். என் தொகுதிக்கு வந்துவிடுகின்றேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்--எனது தொகுதி பின்தங்கிய தொகுதியாக இருப்பதால் பேரணாம்பட்டு தொகுதியில், சின்னதாமல் செருவு நடுநிலைப் பள்ளி, பேரணாம்பட்டு பேரூராட்சிக்கு உட்பட்ட பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பாலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி—இது மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியாகும்--ஆகவே, இந்த 3 பள்ளிகளையும்

[2002 மார்ச் 14

உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக உறுதிமொழி அளிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். என் தொகுதியைச் சார்ந்த மக்கள், குறிப்பாக நான் சட்டமன்றத்தில் அடிக்கடி பேசுவதில்லை என்று கூறுகின்றார்கள். ஆகவே, இனிவரும் காலங்களில் எங்களுக்கு, அவ்வப்போது வாய்ப்பு இல்லை என்று சொன்னாலும், சிற்சில சமயங்களிலாவது எங்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கூறுகின்றேன்; நன்றி, விடைபெற விழைகின்றேன்; அமர்கின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசுவதற்கு உரிமை தருவது உங்கள் கையில் இருக்கிறது. என்னிடம் கிடையாது. என்னைப் பொறுத்தவரையில், அவர்கள் கேட்டிருப்பது, அவருடைய பகுதியில் இருக்கின்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் என்பது. அரசானது அவருடைய கோரிக்கைகளை ஏற்று, நிதிநிலைக்கு ஏற்ப அவருடைய கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

23—

### ஆயிரங்கால் மண்டபம்

***2785—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாடல் பெற்ற திருத்தலங்களான திருநாவலூர், பக்தஜனேஸ்வரர் ஆலயத்திலும், திருவெண்ணெய்நல்லூர், மங்களாம்பிகை சமேத கிருபாபுரீஸ்வரர் கோயிலிலும் ஆயிரங்கால் மண்டப்பம் அமைக்கும் திருப்பணி செய்து தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2002 மார்ச் 14]

திருநாவலூர் அருள்மிகு பக்தஜனேஸ்வரர் திருக்கோயிலில் ஆயிரங்கால் மண்டபம் அமைக்கப் போதுமான இடமும், அதற்கான நிதியும் இத்திருக்கோயிலில் இல்லை என்பதால், ஆயிரங்கால் மண்டபம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை. திருவெண்ணெய்நல்லூர் அருள்மிகு கிருபாபுரீஸ்வரர் திருக்கோயிலில் உள்ள நூற்றுக்கால் மண்டபம் பழுதடைந்துள்ளது. இதனைச் செப்பனிட ரூ.10 இலட்சம் செலவாகும். இதனையே செய்ய நிதி வசதி இல்லாத நிலையில், புதிதாக ஆயிரங்கால் மண்டபம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருநாவலூர் தொகுதியில் திருநாவலூரில் அமைந்துள்ள பாடல்பெற்ற திருத்தலமான பக்தஜனேஸ்வரர் ஆலயமும் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் திருவெண்ணெய் நல்லூரில் அமைந்திருக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க மங்களாம்பிகை சமேத கிருபாபுரீஸ்வரர் ஆலயமும் பல்வேறு சிறப்பு அம்சங்களைப் பெற்ற கோயில்கள். சிவபெருமானுடைய திருவடியார்களாகிய 63 நாயன்மார்களில் சிறந்து விளங்கிய அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர் ஆகிய நால்வரில் சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த ஊர் திருநாவலூர் ஆகும். எனவே, இப்பேர்ப்பட்ட சிறப்புத் தலமான இந்தத் திருத்தலத்தில் உள்ள கோயில்கள் பல ஆண்டு காலமாக மிகவும் மோசமான நிலையில் இருந்து வருகின்றன. அந்தப் பகுதியில் வசிக்கின்ற மக்கள் ஒவ்வொரு திருமணத் தேதியிலும் கிட்டத்தட்ட 20, 30 திருமணங்களுக்கு மேல் இந்தக் கோயில்களில் நடத்துகின்றார்கள். இந்தக் கோயில்களிலே பல்வேறு வசதிகள் இல்லாத காரணத்தாலும், மண்டபங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கிற காரணத்தாலும், அந்த மண்டபங்களைச் சீர்செய்து கொடுத்தால் அந்தப் பகுதியிலே வசிக்கின்ற மக்கள் பயன்பெறுகின்ற வகையில் இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், அங்கே ஆயிரங்கால் மண்டபத்திற்கு நிதியைக் கொடுக்க முடியாத நிலையிருக்கின்ற காரணத்தால், அங்கேயிருக்கின்ற நூற்றுக்கால் மண்டபத்தையாவது செப்பனிட்டு நல்ல முறையில் சீர்செய்து கொடுத்தால் அந்தப் பகுதி வாழ் மக்களுக்கும், அந்தத் திருத்தலத்திற்கும் நன்மையாக இருக்கும் என்பதைக் கூறி மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2002 மார்ச் 14

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு பக்தஜனேஸ்வரர் திருக்கோயில், திருநாவலூர், உளுந்தூர்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம்; இத்திருக்கோயில் பட்டியலில் சேராத திருக்கோயில் ஆகும். பசலி 1409-க்கு உதவித் தொகை நிர்ணய வருவாய் ரூ.21,366 ஆகும். இத்திருக்கோயில் அமைந்துள்ள திருநாவலூர், சமயக் குறவர்களில் ஒருவரான திரு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்த தலமாகும்.

இத்திருக்கோயிலில் ஆயிரங்கால் மண்டபம் ஏதும் இல்லை. இதனைக் கட்ட சுமார் ரூ.15.00 இலட்சம் செலவாகும் என உத்தேசிக்கப்பட்டு உள்ளது. ஆயிரங்கால் மண்டபம் அமைக்கப் போதுமான இடம் திருக்கோயிலில் இல்லை. எனவே, ஆயிரங்கால் மண்டபம் அமைக்க இத்திருக்கோயிலில் இட வசதி மற்றும் நிதி வசதி இல்லை என்பதால், இத்திருக்கோயிலில் ஆயிரங்கால் மண்டபம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் துறையின் பரிசீலனையில் இல்லை.

(1) திருக்கோயில் நிலை--பட்டியலைச் சேராத திருக்கோயில்;

(2) திருக்கோயில் நிர்வாகம்-நிலை-4 செயல் அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது.

(3) உதவித் தொகை நிர்ணய வருவாய்-பசலி ஒன்றுக்கு, 1409-க்கு ரூ.21,366

(4) சொத்துக்கள்-40 ஏக்கர் நிலம்.

(5) பூசை முறைகள்-மூன்று கால பூசை நடைபெறுகிறது. காலசந்தி, உச்சிக்காலம் மற்றும் சாயரட்சை.

(6) குடமுழுக்கு நடைபெற்ற விவரம்-கடைசியாக 1987 ஆம் ஆண்டு குடமுழுக்குச் செய்யப்பட்டது;

(7) திருக்கோயில் சிறப்பு-சமயக் குறவர்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்த தலம்.

அடுத்து, அருள்மிகு கிருபாபுரீஸ்வரர் திருக்கோயில்-திருவெண்ணெய்நல்லூர், திருக்கோயிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம், இத்திருக்கோயில் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில் ஆகும். பசலி 1410-க்கு உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ.1,54,965 ஆகும்.



2002 மார்ச் 14]

இத்திருக்கோயிலில் ஆயிரங்கால் மண்டபம் ஏதும் இல்லை. 'வழக்கு வென்ற அம்பலம்' என்று அழைக்கக்கூடிய நூற்றுக்கால் மண்டபம் ஒன்று உள்ளது. பழுதடைந்துள்ள இந்த நூற்றுக்கால் மண்டபத்தினைச் சீர்செய்ய, உத்தேசமாக ரூ.10.00 இலட்சம் வரை செலவாகும். அதனைப் பழுதுபார்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு கூடிய விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கோரிக்கை இந்த நூற்றுக்கால் மண்டபத்திற்குச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, இத்திருக்கோயிலில் ஏற்கெனவே உள்ள நூற்றுக்கால் மண்டபத்தைச் சீரமைக்கவே போதிய நிதியாதாரம் இல்லாத நிலையில் புதிதாக ஆயிரங்கால் மண்டபம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லாத நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில் நிலை--பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்;

திருக்கோயில் நிர்வாகம்-நிலை-4 செயல் அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது;

உதவித் தொகை நிர்ணய வருவாய்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், அவ்வளவு விளக்கம் தேவையில்லை.

வினா எண் 24, திரு. அன்பில் பெரியசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**24—**

## இழுவை இரயில்

***2920—திரு. அன்பில் பெரியசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி-மலைக்கோட்டை கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் வசதிக்காக, மலைக்கோட்டை கோயிலில் இழுவை இரயில் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2002 மார்ச் 14

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானவ சுவாமி திருக்கோயில், உச்சிப் பிள்ளையார் சன்னதிக்கு இழுவை இரயில் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

**திரு. அன்பில் பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாநகரம் என்றாலே மலைக்கோட்டைதான் மக்கள் மனதிலே நிற்கும். வெளிநாட்டுப் பயணிகளும், வடமாநிலங்களிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளும் உச்சிப் பிள்ளையாரைத் தரிசிக்கின்ற வகையில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, இழுவை இரயிலை அமைத்துத் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை உச்சி மலையில் அருள்மிகு விநாயகர் சன்னதி அமைந்துள்ளது. அடிவாரத்திலிருந்து மலையின் உயரம் 83 மீட்டர் அல்லது 273 அடியாகும். மலை அடிவாரத்தில் இருந்து உச்சிமலை வரை 417 கருங்கல் படிக்கட்டுகள் உள்ளன. இத்திருக்கோயிலில் இழுவை இரயில் அமைப்பது சம்பந்தமாக டெல்லியில் உள்ள Rails India Technical and Economical Services Limited நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம் 10-4-1997-ல் ஒரு திட்டம் தயாரித்துக் கொடுத்தது. மேற்படி நிறுவனம் இரண்டு கட்டமாக சேவார்த்திகளை மலைக்கு ஏற்றிச் செல்ல பின்வரும் திட்டம் தீட்டியது:

1. இழுவை இரயில் திட்டம் (முதல் 276 படிக்கட்டுகளுக்கு)

2. நகரும் படிக்கட்டுகள் திட்டம் (மீதமுள்ள 141 படிக்கட்டுகளுக்கு)

முற்பகல் 10-25

இழுவை இரயில் அமைக்க ரூ.2.90 கோடி ஆகும். நகரும் படிகள் அமைக்க ரூ.3.70 கோடி ஆகும். ஆக, மொத்தம் ரூ.6.60 கோடி செலவாகும். இத்திருக்கோயிலில் உபரி முதலீடு சுமார் ரூ.1.40 கோடிதான் உள்ளது. எனவே, மேற்படி மொத்தச் செலவு ரூ.6.60 கோடியை ஈடுகட்ட இத்திருக்கோயிலில் நிதி வசதியில்லை.



2002 மார்ச் 14]

திருக்கோயிலில் செலவிடப்படுவதற்கு ரூ.6.60 கோடிக்கு வருவாய் ஏதும் இராது. வரவினைக் காட்டிலும் செலவே அதிகமாக இருக்கும். தற்போது மேற்கண்டவாறு ரூ.6.60 கோடி செலவில் இழுவை இரயில் மற்றும் நகரும் படிக்கட்டுகள் அமைக்கும் திட்டம் இத்திருக்கோயிலில் பெரும் செலவில் நிறைவேற்றப்பட்டால் இத்திருக்கோயில் வளர்ச்சிக்கும் சுமையாக அமையலாம் எனவும் கருதப்படுகிறது. இழுவை இரயில் மட்டும் ரூ.2.90 கோடி செலவில் அமைத்தால் சேவார்த்திகள் உச்சிப் பிள்ளையார் சன்னதிக்குச் செல்ல 141 படிகள் ஏற வேண்டியிருக்கும். அருள்மிகு தாயுமானவ சுவாமி சன்னதிக்கு இழுவை இரயில் நிலையத்திலிருந்து 68 படிகள் கீழே இறங்கி வந்து, மேற்கே 30 படிகள் ஏற வேண்டியிருக்கும். இதன்படி இழுவை இரயில் மட்டும் அமைத்தால் சேவார்த்திகள் முழுப்பயன் பெறமாட்டார்கள். எனவே, இத்திட்டம் சேவார்த்திகளுக்கும், திருக்கோயிலுக்கும் பயன்தரத்தக்கதல்ல என்று கைவிடப்பட்டுள்ளது.

**திரு. அன்பில் பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவஸ்தானத்தில் அதிக வருமானம் இல்லாத காரணத்தாலும், அரசாங்கம் இன்று இருக்கின்ற நிதி நெருக்கடியில் அதிக நிதி ஒதுக்க முடியாத காரணத்தாலும், தனியார் துறையிடம் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** வசதி படைத்தவர்கள், பொருளாதாரத்தில் மிகுந்தவர்கள் யாராவது முன்வந்து இதைச் செய்ய வேண்டும் என்று சொன்னால் அரசு அதற்கு அனுமதி கொடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பில் பெரியசாமி, ஆளைத் தயார் பண்ணுங்கள்.

வினா எண் 25, திரு. டி. மணி மற்றும் திரு. தா. பச்சைமால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**25—**

**மருத்துவக் கல்லூரி**

***820—திரு. டி. மணி:**

**திரு. தா. பச்சைமால்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 மார்ச் 14

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்தில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) அரசு மருத்துவக் கல்லூரி தொடங்க மெடிக்கல் கவுன்சிலின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்தில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு 23-8-2001 அன்று மைய அரசு மற்றும் இந்திய மருத்துவக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் இதுவரை வரவில்லை. இந்திய மருத்துவக் குழுவின் சாதகமான பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் எநத அரசுக் கல்லூரியும் இல்லாத சூழ்நிலையில், அந்த மாவட்ட மக்களின் நீண்ட கால அபிலாஷை என்ற முறையில், கடந்த 5 ஆண்டு காலம் இந்த மாமன்றத்திலே, முன்னால் ஆட்சி செய்தவர்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்திப் பல்வேறு கட்டங்களிலே பேசி, ஏற்கெனவே அந்த ஆட்சி முடிவுறுகின்ற நேரத்தில், அன்றைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் அங்கே வந்தார்கள். அடிக்கல் நாட்டு விழாவும் நடந்தது. அனுமதி கிடைத்துவிடும் என்ற தகவலையும் சொன்னார்கள். ஆனால், இன்னும் இந்தியன் மெடிக்கல் கவுன்சிலினுடைய அனுமதி கிடைக்கவில்லை. அதற்காக, இந்த அரசு அனுமதி கோரியுள்ளதற்காக நான் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அந்த வகையிலே, அந்தக் கல்லூரியை அமைப்பதற்கு அந்த மாவட்டத்திலே இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சற்று நிதியை ஒதுக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டு நிதியிலிருந்தும் நாங்கள் கொஞ்சம் நிதியைத் தருவதாகச் சொல்லி இருக்கிறோம். அந்த வகையிலே இந்த அரசு அங்கே மருத்துவக் கல்லூரியை உருவாக்குவதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மருத்துவக் குழு-- M.C.I.--சமீபத்திலே விதித்த புதிய நிபந்தனையின்படி, மருத்துவக் கல்லூரியும், மருத்துவமனையும் ஒரே



2002 மார்ச் 14]

வளாகத்திலே-- Unitary Campus-ல் அமைய வேண்டுமென்ற அந்த நிபந்தனையை விதித்ததன் காரணமாக, இப்போது ஆசாரிப்பள்ளத்தில் அரசு நெஞ்சக மருத்துவமனை வளாகத்தை அரசு தேர்ந்தெடுத்து, அங்கேயே மருத்துவமனையையும், மருத்துவக் கல்லூரிக்கான கட்டுமானப் பணிகளையும் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்துத்தான் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற மூன்று மாத காலத்தில் 23-08-2001 ஆம் தேதி விண்ணப்பத்தை அனுப்பி, அதற்கான கட்டணத்தையும் செலுத்தியிருக்கிறது. இப்பொழுது முதலாண்டு மாணவர்களைச் சேர்க்கத் தேவையான அனைத்துத் தகுதிகளும் இருக்கும் வகையில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்படும் தறுவாயில் உள்ளது. அந்த மருத்துவக் கல்லூரி அமைக்கப்படுகிற அதே வளாகத்தில் மருத்துவமனை அமையவேண்டுமென்ற அந்தப் புதிய நிபந்தனையின்படி, இப்பொழுது இருக்கிற நிதியைக் கொண்டு மருத்துவமனையைத் தொடங்குவதற்கு பூமி பூஜைகூட போட்டாகி விட்டது. எனவே, மருத்துவமனை கட்டுகிற பணி முடிக்கப்பட்டவுடன், அங்கே மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான..

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பூமி பூஜை, ரொம்ப வித்தியாசமாக இருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான பணிகள் விரைவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தா. பச்சைமால்.

**திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆசாரிப்பள்ளத்தில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்குக் கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், தேர்தல் நெருங்குவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பாக **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பச்சைமால், அந்தப் பகுதி நீக்கப்படுகிறது. எப்போது தொடங்கப்படும் என்று மட்டும் கேளுங்கள்.

**திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அடிக்கல்லை நாட்டிவிட்டு, மருத்துவக்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கல்லூரியைத் தொடங்குவதற்கு மத்திய மருத்துவக் கவுன்சிலில் விண்ணப்பிக்காமல் சென்றுவிட்டார்கள். ஆனால், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, மருத்துவக் கல்லூரி அமைவதற்கு விண்ணப்பித்ததற்குக் கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, வருகின்ற கல்வியாண்டில் மருத்துவக் கல்லூரி மாணவர்களைச் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு அறிவிப்பைச் செய்துவிட்டு, அதற்கான நிதியை ஒதுக்கவில்லை என்பது உண்மைதான். ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படவேண்டுமென்று சொன்னால், தொடர் செலவு மற்றும் தொடராச் செலவு உட்பட 67 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. எனவே, அந்த வகையிலே, அரசு கடுமையான நிதி நெருக்கடியில் இருந்தபோதிலும், கன்னியாகுமரியில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதில் அரசு உறுதியாக உள்ளது. நம்முடைய டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகமும் அங்கே கல்லூரியைத் தொடங்குவதற்கு ஒப்புதல் கடிதமும் அளித்துள்ளது. எனவே, கன்னியாகுமரியில் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படுவது மத்திய அரசும், இந்திய மருத்துவக் குழுவும் அளிக்கவிருக்கும் ஒப்புதலைப் பொறுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்ன அதே கருத்தை வலியுறுத்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும், குமரி மாவட்டத்தின் நாகர்கோவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், மரியாதைக்குரிய மத்திய அமைச்சருமான மாண்புமிகு பொன். ராதாகிருஷ்ணன் அவர்களும் ஆளுக்கு 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, அங்கே ரூபாய் 50 இலட்சத்திற்குக் கட்டுமானப் பணிகள் முடிந்திருக்கின்றன.

நான் அறிந்த வரையில், முதலாண்டு ஆரம்பித்து கல்லூரி நடத்துவதற்கு எந்தவிதமான தடங்கலும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் பெருமகனார், தனக்கே உரித்தான பாணியில்,



"ஆம், இந்த ஆண்டு அமைக்கப்படும்" என்கிற உத்தரவாதத்தை இதுவரைக்கும் சொல்லாமல், இரண்டு இடங்களிலிருந்தும் வந்தால் செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், நிச்சயமாக கழிந்த ஆண்டே வரும் என்று எதிர்பார்த்தோம். வரவில்லை. எங்களுடைய பயம் எல்லாம், இரண்டு பேரும் சண்டை போட்டு, கைக்கு எட்டியது, வாய்க்கு எட்டாமல் போய்விடக்கூடாது என்கிற பயம் ஒரு பக்கம் இருக்கிற காரணத்தால், இந்த ஆண்டே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அந்தக் கல்லூரி வரும் என்று சொன்னால், மாவட்ட மக்கள் ஒட்டுமொத்தமாக உங்களை வாழ்த்துகின்ற ஒரு வாய்ப்பு ஏற்படும். எனவே, இந்த ஆண்டே அந்தக் கல்லூரியை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன், அங்கு கல்லூரி அமைப்பதற்கு அரசு உறுதியாக இருக்கிறது. ஆனால், ஒப்புதலைக் கொடுக்க வேண்டியது இந்திய மருத்துவக் கழகம் என்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்களுக்குத் தெரியாததல்ல. எனவே, ஒப்புதலைத்தான் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, மக்களவை உறுப்பினர்கள் மாண்புமிகு திரு. சங்கரலிங்கம் அவர்களும், மாண்புமிகு மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் அவர்களும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய உறுதியளித்து, ஒவ்வொருவரும் 25 லட்சம் ரூபாயைக் கொடுத்துள்ளார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அளித்த அந்த 50 லட்சம் ரூபாய் நிதி தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பிலே இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், தொடர் செலவு, தொடராச் செலவு ஆகிய இந்தச் செலவுகள் உட்பட 67 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. எனவே, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும் கன்னியாகுமரியிலே புதிய மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதில் உறுதியாக உள்ளது. சென்ற மாதம் நான் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, மாண்புமிகு மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் அவர்கள் என்னை நேரிலே சந்தித்து, மேலும் ஒரு

கோடி ரூபாய் கொடுப்பதாக உறுதியளித்துள்ளார்கள். எனவே, இந்திய மருத்துவக் குழுவினுடைய ஒப்புதல் கிடைத்தவுடன் இதற்கான பணிகள் விரைவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் நிதியாண்டில் மருத்துவக் கல்லூரி தொடங்குவது சம்பந்தமான பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்; ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்த நேரத்திலே தலைமை மருத்துவமனைக்குச் சென்றார்கள். மிகவும் மோசமான நிலையிலே அந்த மருத்துவமனை இருந்துகொண்டிருக்கிறது என்பதையும் அவர் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறார். ஆகவே, மருத்துவக் கல்லூரியையொட்டி ஏற்படுத்த வேண்டிய மருத்துவமனையை விரைவிலே தொடங்குவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை அவர் எடுப்பாரா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மருத்துவக் குழுவினுடைய புதிய நிபந்தனையின்படி, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மருத்துவக் கல்லூரி அமைக்கப்படுகிற அதே வளாகத்திலே மருத்துவமனை கட்டாயம் இருக்க வேண்டும் என்றுதான் அவர்கள் புதிய நிபந்தனை விதித்திருக்கிறார்கள். அதற்காகத்தான் ஆசாரிப்பள்ளத்திலே உள்ள அரசு நெஞ்சக மருத்துவமனை வளாகத்தில்--அது இப்போது 100 ஏக்கர் கொண்டதாக இருக்கிறது—அதிலேயே மருத்துவமனை கட்டுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். முதலாவது ஆண்டு தொடங்க வேண்டுமென்று சொன்னால், 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டப்பட வேண்டும். அதற்காகத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். அந்தப் பணி தொடங்கப்பட்டுவிட்டது. அந்தப் பணிகள் எல்லாம் முடிக்கப்படும் தறுவாயில் இருக்கிறது. எம்.சி.ஐ. ஒப்புதலைப் பெறுவதற்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு துரிதமான நடவடிக்கையை நிச்சயமாக எடுக்கும். கன்னியாகுமரி மாவட்ட மக்கள் விரும்புகிற அந்தக் காரியம் நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசிலே நிறைவேற்றப்படும் என்ற அந்த உறுதியை இப்போது நான் சபைக்கு அளித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.





**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், படித்தவர்கள் அதிகமாக வசிக்கக்கூடிய மாவட்டம். இதுவரையும் அங்கே எந்தவிதமான Professional College-ம் இல்லை. சட்டக் கல்லூரியோ அல்லது பொறியியல் கல்லூரியோ அல்லது வேளாண்மைக் கல்லூரியோ அல்லது குறைந்தபட்சம் அரசு கலைக் கல்லூரியோகூட அங்கே இதுவரையில் நிறுவப்படவில்லை. தற்போது மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு செய்யப்பட்டிருக்கிற இடம்--தமிழ்நாட்டிலே எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவிற்கு 100 ஏக்கர் பரப்பளவிலே உள்ள இடத்திலே, நல்ல சுகாதார வசதியோடு அந்த இடம் அமைந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அந்த மாவட்டத்துக்கு ஆய்வு செய்ய வருகிறபோது, அந்த இடத்தையெல்லாம் பார்வையிட்டுப் பாராட்டினார்கள். ஓரளவு கட்டட வசதியும் அங்கே இருந்துகொண்டிருக்கின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அங்கே மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்று கடந்த ஆட்சியாளர்களால் அறிவிக்கப்பட்டு, அந்த மாவட்ட மக்கள் இன்றைக்கு மருத்துவக் கல்லூரி வருமா, வராதா என்ற ஏக்கத்திலே இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இந்திய மருத்துவக் கவுன்சிலுக்கு மீண்டும் ஒரு முறை அரசு கடிதம் எழுதி, இந்த ஆண்டுக்குள்ளே ஒப்புதலைப் பெற்று குறைந்தபட்சம் இந்த 2002ஆம் ஆண்டிலே அங்கே மாணவர்களைச் சேர்க்கக்கூடிய நிலையை அரசு ஏற்படுத்துமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியினர் செய்யாத காரியத்தை, செய்யத் தவறிய காரியத்தைச் செய்து முடிப்பதைத்தான் நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசினுடைய கடமையாகக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, கன்னியாகுமரி மாவட்ட மக்களோ, கன்னியாகுமரி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களோ நிச்சயமாகக் கவலைப்படத் தேவையில்லை. இந்திய மருத்துவக் குழுவும் நாங்கள் அனுப்பியுள்ள அந்த விண்ணப்பத்தின் அடிப்படையிலே சில விளக்கங்களைக் கேட்டிருக்கிறது. அந்த விளக்கங்களையும் நாங்கள் ஏற்கெனவே கொடுத்துவிட்டோம். அவர்கள் ஆய்வு செய்வதற்கு, inspection செய்வதற்கு 3.5 இலட்சம் ரூபாய் கட்டணத்தையும் செலுத்தியுள்ளோம். எனவே, அவர்கள் வந்து அந்த இடத்தைப் பார்வையிட வேண்டியதுதான் பாக்கி இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஆஸ்டின் அவர்கள் சொன்னதைப்போல, முதலாம்

[2002 மார்ச் 14

ஆண்டு மாணவர்கள் படிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கான தகுதியைப் பெற அனைத்துக் கட்டுமானப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. எனவே, இந்திய மருத்துவக் குழுவினுடைய ஒப்புதலைத்தான் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். வேண்டுமானால், நீங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்த மருத்துவக் குழுவினுடைய ஆய்வுத் தேதியைக் குறிப்பிட்டு, அவர்கள் இங்கே வந்து ஆய்வு செய்வதற்கான தேதியைக் குறிப்பிடச் சொல்லி அவர்களுக்கு மீண்டும் நாங்கள் அரசின் சார்பிலே கடிதம் எழுதவிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரிக்கு முந்தைய ஆண்டே, 1997 ஆம் ஆண்டே வேலூரில் அரசு மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கான....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 26, திரு. இரா.தா. இன்பத் தமிழன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**26—**

## நோயாளிகளைக் கவனித்தல்

***966—திரு. இரா.தா. இன்பத் தமிழன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் அரசு மருத்துவமனையில் அரசு மருத்துவர்கள் இருந்தும், நோயாளிகளைச் சரிவரக் கவனிக்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2002 மார்ச் 14]

(அ) திருவில்லிப்புத்தூர் அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே இருந்து வந்த நிலைமை முற்றிலுமாக மாறி, தற்போது சிகிச்சைக்கு வரும் அனைத்து நோயாளிகளுக்கும் மருத்துவர்களால் உரிய முறையில் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் அரசு மருத்துவமனையில் தினந்தோறும் 800 முதல் 1000 நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்றுக்கொண்டு சென்றுகொண்டு இருக்கிறார்கள். கடந்த தி.மு.க. ஆட்சியில் வெறும் 4 டாக்டர்கள் மட்டுமே இருந்தார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் சுகாதாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் ஆய்வு செய்ய வந்திருந்தார்கள். ஆய்வு செய்ய வந்துவிட்டுச் சென்றவுடன், அங்கு மேற்கொண்டு 5 டாக்டர்கள் போடப்பட்டு, நல்ல முறையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் 2 டாக்டர்கள் அங்கு குறைவாக உள்ள காரணத்தினால், அதாவது ஒரு ஆர்த்தோ டாக்டரும், ஒரு எம்.எஸ்.,டி.சி.எச். மற்றும் குழந்தைகள் நல மருத்துவர் ஒருவரையும் போட்டுத் தரும்படி புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், சுகாதாரத் துறை அமைச்சரையும் பணிவன்போடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் கூடுதலாக அந்த மருத்துவமனைக்கு எலும்பு முறிவு சிகிச்சை நிபுணரும், குழந்தைகள் பிரிவுக்கான மருத்துவரும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்படி அந்தப் பணியிடங்கள் இதுவரை நிரப்பப்படவில்லை என்று சொன்னால், நிச்சயமாக அந்தப் பணியிடங்கள் விரைவிலே நிரப்பப்படும். நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, டாக்டர்களின் அக்கறையின்மையின் காரணமாக அதுபோன்ற நிலைமை இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால்--நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அறிவுரையின்படி, நாங்கள் அரசு டாக்டர்களுக்கு சில அறிவுரைகளைச் சொல்லியிருக்கிறோம். அதன்படி அவர்கள் கடமையுணர்வுடனும், சேவை மனப்பான்மையுடனும் பணியாற்ற வேண்டும். அதேபோல, மருத்துவர்கள்

நீண்ட விடுப்பிலே செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், அதேபோல, அவர்கள் பணி நேரம் முழுவதும் மருத்துவமனையிலேயே இருக்க வேண்டும். அதேபோல, நோயாளிகள் திருப்திப்படும் வகையிலே சிகிச்சை அளிக்க வேண்டும். பொதுமக்களிடமிருந்து எந்தவிதப் புகாரும் வராத அளவிற்கு அவர்கள் பணியாற்ற வேண்டும். இந்த அறிவுரைகளை அவர்களுக்கு வேண்டுகோளாக வைத்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய இந்த நல்ல அறிவுரைகளை அரசு டாக்டர்கள் சங்கமும் ஏற்றுக்கொண்டு, இப்போது நிலைமைகள் மாறி, அவர்கள் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதே நிலைமை நிச்சயமாகத் தொடரும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**27—**

### குடிநீர் வசதி

***2094—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு ஒன்றியம், அதலை பஞ்சாயத்து, பட்டகுறிச்சி, பட்டகுறிச்சி புதூர் ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஒன்றியம், அதலை பஞ்சாயத்திலுள்ள பட்டகுறிச்சி கிராமத்திற்கு 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் தற்போது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தோடனேரி பஞ்சாயத்திலுள்ள பட்டகுறிச்சி புதூர் கிராமத்திற்கு 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்டப் பணிகள் விரைவில்





முடிக்கப்பட்டு, மக்களுடைய பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயை வணங்கி, தமிழ்த் தாயை வணங்கி என்னுடைய உரையை ஆரம்பிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையில்லை, கேள்வி.

**திரு. ப. பொன்னம்பலம்:** கேள்வி, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பரவை, விளாங்குடி, ஆனையூர் ஆகிய பேரூராட்சிகளுக்கும், சமயநல்லூர், நாணாகுளம், கண்ணனேந்தல், திருப்பாலை ஆகிய ஊராட்சிகளுக்கும், மதுரை கிழக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த வண்டியூர், மேலமடை, ஒத்தக்கடை, கருப்பாயூரணி, சக்கிமங்கலம் ஆகிய ஊராட்சிகளுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு விரைவில் ஏற்பாடு செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, எந்தெந்தப் பேரூராட்சிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது என்பதைத் தனிப்பட்ட முறையிலே, அவர் தனிக் கேள்வியாகப் போடட்டும், அதற்குண்டான பதில் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. எஸ்.கே. செல்வம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**28—**

### மேம்பாட்டுத் திட்ட நிதி

***7519—திரு. எஸ்.கே. செல்வம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து சமுதாய நலக்கூடம், நிழற்கூடம், கலையரங்கம், கூட்டுறவுச் சங்கக்

[2002 மார்ச் 14

கட்டடங்கள் போன்ற பணிகளை எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதிலிருந்து அரசு விதிவிலக்கு அளிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து, சமுதாய நலக்கூடம், நிழற்கூடம், கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள் போன்ற பணிகளை எடுத்துக்கொள்ளக் கூடாது என்னும் வழிகாட்டி நெறிமுறைகளுக்கு அரசு விதிவிலக்கு அளிக்காது. கலையரங்கம் கட்டும் பணிக்கு அரசு தடை ஏதும் பிறப்பிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.கே. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது புரட்சித் தலைவி அவர்கள் 1991 முதல் 1996 வரை ஏழை எளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு மிகவும் குறைந்த வாடகையிலே கிராம மக்களும் நல்ல நிகழ்ச்சிகளை அந்தச் சமுதாயக்கூடத்தில் நடத்த வேண்டுமென்ற உயரிய சிந்தனையில், அன்று, அதற்கு அனுமதி வழங்கியிருந்தார்கள். ஆகவே, மீண்டும் புரட்சித் தலைவி அவர்கள் கருணை அடிப்படையிலே இதைப் பரிசீலித்து கிராம மக்களும், அதேபோல உள்ளாட்சி அமைப்புகளின் நிதியாதாரத்தைப் பெருக்குகின்ற அந்தத் திட்டத்தினுடைய அடிப்படையிலேயும் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன். மேலும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ரேஷன் கடைகளை இதில் கட்டுவதற்கு அனுமதி அளித்தால் ரேஷன் கடைகளில் நடைபெறுகின்ற பல்வேறு முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கு இது ஏதுவாக இருக்கும். அந்த அடிப்படையிலேதான் நான் இந்தக் கேள்வியையும் கேட்டிருக்கிறேன். மேலும், நிழற்கூடம் கட்டுவதற்கு அனுமதி வழங்க நான் அனுமதி கேட்டிருக்கிறேன். காரணம், இன்று சாலைகளை விரிவுபடுத்துகிற திட்டத்தில்--பல்வேறு இடங்களிலே மழைக்காலங்களிலும், கோடைக்காலங்களிலும்கூட பொது மக்கள் திறந்தவெளியில் நிற்கின்ற அளவிற்கு இருக்கின்றார்கள்-- அவர்களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற வகையில் இதைக் கட்டித் தர புரட்சித் தலைவி அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 மார்ச் 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களிடம் மனுக்களைப் பெறுவதும், அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு, அதிகாரிகளிடம் சென்று பரிந்துரை செய்வதுமாக இருந்த ஒரு நிலையை மாற்றி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் ஒரு மரியாதை தருகின்ற விதமாக, இந்தத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தைத் கலைஞர் அவர்கள் இந்த நாட்டிற்குக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக 77 இலட்சம் ரூபாயை ஒதுக்கியபோது பள்ளிக்கூடக் கட்டடங்கள், கணினி மையக் கூடங்களை அமைப்பதற்கான வழிமுறை விதிகளை வகுத்து, மற்றபடி சட்டமன்ற உறுப்பினர்களிடம் மக்கள் தருகின்ற மனுக்கள், சாலைகள், குடிநீர் போன்ற அடிப்படைத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றுகின்ற செயல்களை, சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கேயே அறிவிக்கக்கூடிய விதமாக அந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தது. அந்தத் திட்டத்தை கொண்டு வந்ததன் மூலமாக தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் கலைஞர் அரசுக்கு நன்றி தெரிவிக்க .....

(முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன கேள்வி? கேள்விக்கு வாருங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** இந்த அரசு இப்போது வி.ஏ.ஓ. அலுவலகம் உட்பட, சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதியிலிருந்து ஒதுக்கிட வேண்டிய ஒரு நிலையை வகுத்திருக்கிறது. மக்களுக்காகச் செய்ய வேண்டிய அந்த நிதியை, அரசினுடைய கடமையாக இருக்கின்ற வி.ஏ.ஓ. அலுவலகம், பிறகு தாசில்தார் அலுவலகம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் என்று போகாமல்--விடுதிகள் கட்டுவதற்காக ஒதுக்குவதில்கூட, பல தொகுதிகளில் விடுதிகள் கட்டுவதற்கான வாய்ப்புகளே இல்லாத தொகுதிகளும் இருக்கின்றன. ஆகவே பொது மக்களுடைய நிலைகளை உணர்ந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், அவரவர்களுடைய விருப்பப்படி நேரடியாகத் திட்டங்களை அறிவிப்பதற்கு வழிவகை செய்வதற்கு இந்த அரசு வழிவகை காணுமா, உத்தரவிடுமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படி பள்ளிக் கட்டடங்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். கணினி மையங்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று கூறினாரோ, அதேபோல இந்த

[2002 மார்ச் 14

அரசு, பள்ளி மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு விடுதிக் கட்டடங்கள் கட்ட வேண்டும் என்பதற்காக முன்னுரிமை கொடுக்கின்ற அடிப்படையிலும், கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற வகையிலே பெண்களுக்கான கழிப்பறையைக் கட்டுவதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்று அடிப்படையிலும்தான் சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டு நிதியிலிருந்து திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நகராட்சிப் பகுதிகளில், வீட்டு வரி செலுத்தி வருகின்ற, அனுமதி பெறாத வீட்டுமனைப் பிரிவில் உள்ள பகுதிகளுக்குச் சாக்கடை மற்றும் சாலை வசதிகளைச் செய்து கொடுக்கலாமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, சிறப்பாக நடைபெறுகிற ஒரு தனியார் பள்ளிக்கு ஒரு பகுதி நிதியை ஒதுக்கீடு செய்து கொடுத்திருந்தேன். அப்படிக் கொடுப்பதற்கு இடம் இல்லை என்று அரசு மறுத்துவிட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வழங்குகிறார்கள். அப்படி வழங்கிய இடத்திலே கட்டடங்கள் முடிக்கப்பட்டு, அந்த விழாவுக்குச் சென்றிருந்த நேரத்திலேதான், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கொடுக்கவேண்டும் என்று ஒரு கோரிக்கை வந்தது. அந்தக் கோரிக்கையின்படி ஒதுக்கியபோது, அதை நிறைவேற்ற முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வது, பாராளுமன்ற உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். அவர்களுக்கு தனியார் பள்ளிகளுக்கு--சிறப்பாக நடைபெறுகிற தனியார் பள்ளிகளுக்கு நிதி கொடுக்கின்ற வாய்ப்பு இருக்கும்போது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த வாய்ப்பைத் தரவேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து, அரசு அதைப் பரிசீலிக்குமா



2002 மார்ச் 14]

என்று அறிய விரும்புகிறேன். அதோடு இன்னொன்று, சுகாதார வளாகம் கட்டுவதிலே மிக நல்லதொரு சிறப்பான பெயரை இந்த அரசு எடுத்திருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து அந்த வளாகம் கட்ட நிதி ஒதுக்குகிறபோது—பேரூராட்சிகளுக்கு ஒதுக்கியதற்கு—அவ்வாறு ஒதுக்குவதற்கு வசதி இல்லை என்று திருப்பிவிட்டிருக்கிறார்கள். அவர்களும் சட்டமன்றத் தேர்தலில் ஓட்டுப் போட்டவர்கள்தான். எனக்கு ஒதுக்கப்பட்ட 10 வளாகத்தில் 9 வளாகம் கிராமத்திற்குக் கொடுத்திருக்கிறேன். ஒன்றே ஒன்றுதான் நகர்ப் பகுதிக்குக் கொடுத்தேன். ஆனால், நகரப் பேரூராட்சிக்கு அதை ஒதுக்க இயலாது என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வது, கிராமப் பகுதிக்கு முன்னுரிமை கொடுத்தாலும், பேரூராட்சி என்பது, அநேகமாக கிராமம் போல இருக்கிற ஜனத்தொகை கொண்ட ஒரு பகுதி. ஆகவே, அதற்கும் வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிப் பகுதியில் கட்டக்கூடாது என்று அரசு ஆணை இல்லை. பேரூராட்சிக்கும் கட்டலாம் என்றுதான் அரசு விதிமுறை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், தனியார் பள்ளிக்கூடங்களுக்கு இந்த நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யலாமா என்பதற்கு, மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் அவ்வாறு இருக்கிறது. ஆனால், மாநில அரசு சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதியில் அந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இன்னின்ன பணிகள்தான் செய்யவேண்டுமென்று, *2002* ஆம் ஆண்டு ஒரு சுற்றறிக்கை உள்ளாட்சித் துறை மூலமாக வந்திருக்கிறது. அதாவது, *82* இலட்சம் ரூபாயில் *50* இலட்சம் ரூபாய் பணிகளை அந்தச் சுற்றறிக்கையிலே குறிப்பிட்டு வரையறுத்துக் கொடுத்துள்ளார்கள். பின்தங்கிய மாணவர்கள் நல விடுதி, பெண்கள் கழிப்பிடம் . ...

[2002 மார்ச் 14

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரங்கநாதன், சுற்றறிக்கையை வாசிக்க வேண்டாம். உங்களுடைய கோரிக்கை என்ன?

**திரு. ப. ரங்கநாதன்:** இந்த மூன்று பணிகளை, குறிப்பாக சென்னை, கோயம்புத்தூர், மதுரை போன்ற நகரங்களில் நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் இந்தப் பணிகளைத் தவிர்த்து, கடந்த ஆண்டு இருந்ததுபோல் அனைத்துப் பணிகளையும் செய்வதற்கு ஏதுவாக சுற்றறிக்கையை மாற்றி அனுப்புவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எந்தெந்தப் பணிகளை எடுத்துச் செய்ய வேண்டும் என்று முன்னுரிமை அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் பணிகள் அந்தப் பகுதிக்கு அவசியம் இல்லையென்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய, மாநகராட்சிப் பகுதியாக இருந்தால் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுடைய ஒப்புதலுக்குப் பின்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியே எந்த, எந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று எழுதிக் கொடுக்கிறார்களோ, அதற்கு அவர்களுக்கு ஒப்புதல் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஏ. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற 234 சட்டமன்றத் தொகுதிகளிலேயும் என்னுடைய மதுரை மத்திய தொகுதி ரொம்ப வித்தியாசமான தொகுதி. அன்னை அருள்மிகு மீனாட்சியம்மன் கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலைச் சுற்றி நான்கு மாசி வீதிகள்; நான்கு ஆடி வீதிகள்; நான்கு வெளி வீதிகள்; நான்கு வாசல்கள். அப்புறம் நான்கு சித்திரை வீதிகள். அதற்கு அப்புறம் அந்தக் கோவிலைச் சுற்றி இருக்கக்கூடிய இந்தத் தமிழ்கூறும் அந்த மாதங்களைக் கொண்டிருக்கக்கூடிய, எல்லாமே மெயின் ரோடுகளாகவே, முழுக்க, முழுக்க நகர்ப்புறப் பகுதிகளாக இருக்கிற காரணத்தாலே பெண்களுக்குண்டான கழிவறையைக் கட்டப் போனால் தெருவிலே கட்ட விடமாட்டேன் என்கிறார்கள். ஏற்கெனவே எங்களுக்கு வீடுகளிலே பாதாளச் சாக்கடை அடிப்படைத் திட்டத்திலே எல்லோருக்கும் கொடுக்கப்பட்டு விட்டது. இதை இங்கே கட்டாதீர்கள் என்று அங்கே ஒரு பிரச்சினை. இவை எல்லாவற்றுக்கும் மேலே வி.ஏ.ஓ-வுக்கு 10



2002 மார்ச் 14]

கட்டடங்கள் கட்டச் சொல்லியிருக்கிறீர்கள். எனக்கு ஒன்று போதும் என்று கலெக்டர் சொல்லிவிட்டார். மீதம் 9 வேண்டாம் என்று சொல்கிறார். இதுவரைக்கும் எனக்குப் பதிலும் வரவில்லை. அதற்கு அடுத்தபடியாக, மாணவர்களுக்கு என்று கட்டடங்கள் கட்டச் சொல்லியிருக்கிறீர்கள், ஹாஸ்டலுக்கு இடம்—நான்கிற்கு. நான்கு சதுர அடி—மதுரை மத்திய தொகுதியிலே, சாதாரணமாக அரசுக்குக் கேட்க வேண்டும் என்று சொன்னால்கூட, இலட்சக் கணக்கான விலை போய்க் கொண்டு இருக்கிறது; இடம் கிடையாது. நடப்பதற்கே இடம் இல்லாமல், ஜனங்கள் இலட்சக் கணக்கில் புழங்கிக் கொண்டிருக்கிற இடமாக அது இருக்கிறது. அதனாலே, அந்த விடுதிகள் கட்டுவதற்கும் இடமே இல்லை. மதுரை மத்திய தொகுதி பூராவுமே நகர்ப்புற வீதிகளாக, ரோடுகளாக இருக்கிற காரணத்தாலே இடமே இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே மதுரை மத்திய தொகுதியை ஒரு விதிவிலக்காக எடுத்துக்கொண்டு, விரைவிலே—ஏனென்றால், நான் கொடுத்ததற்குப் பிறகு 40 இலட்சம் ரூபாய் அளவிற்குச் செயல்படவே முடியாமல், வேலையே இல்லாமல், அது அப்படியே பரிதாபகரமான நிலையில் இருக்கிற காரணத்தாலே, நான் ஏற்கெனவே மனுவும் கொடுத்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும் தெரிவித்திருக்கிறேன்—அதற்கு உண்டான உத்தரவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே என்னிடம் நேரடியாகவும் கூறியிருக்கிறார். எழுத்து மூலமாகவும் கொடுத்திருக்கிறார். அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி என்பது, அந்தப் பகுதியிலே நீண்ட நாட்களாக நிறைவேற்றப்படாத பணிகள் அல்லது சூழ்நிலைக்கு ஏற்ப அப்பகுதி மக்களுடைய அவசிய, அத்தியாவசியத் தேவைகளைக் கருத்திலே கொண்டு, முக்கியத்துவம் வாய்ந்த பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட, வழங்கப்பட்ட நிதி. ஆகவே, அப்படி அந்தத் தொகுதியிலே இருக்கக்கூடிய முக்கியப் பணிகள் என்று கருதுகிற உரிமை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்புள்ள அந்தச்

[2002 மார்ச் 1

சட்டமன்ற உறுப்பினருக்கு நிச்சயமாக இருக்கிறது. ஆகவே, மக்களின் நலனில் அக்கறை கொண்ட அவர்கள் எந்தப் பணிகளை எடுத்துச் செய்வதற்கு வேண்டுமானாலும்—மக்கள் நலனைக் கருதி செய்யக்கூடிய அந்தப் பணிகளுக்கு—விதிமுறைகள் இல்லாமல், விதிகளை எல்லாப் தளர்த்தி, வழிகாட்டி நெறிமுறைகளை எல்லாம் மாற்றி, சட்டமன்ற உறுப்பினர்களே தேர்வு செய்யலாம் என்ற அந்த நிலையை உருவாக்குவதுதான் பொருத்தமுடையதாகவும் இருக்கும் என்ற காரணத்தினாலே அதை அறிவிக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதே நேரத்திலே, சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகம் தொகுதியிலே இருக்கிறது. நம்முடைய மரியாதைக்குரிய அண்ணன் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுக்குக்கூட நேற்று தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்திலேயிருந்து நோட்டீஸ் வந்திருக்கிறது. மின் கட்டணம் கட்ட வேண்டும். இல்லையென்றால் இணைப்பு துண்டிக்கப்படும் என்று. அதுபோல, குடிநீர் இணைப்பு. ஆகவே, இப்படிப்பட்ட பணிகளுக்கு அரசு முன்னுரிமை வழங்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள், 82 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்த நிதியில், அவசியம் செய்ய வேண்டும் என்ற பணிக்கு, 50 இலட்சம் ரூபாயில் முன்னுரிமை அடிப்படையிலே இன்னின்ன பணிகளைச் செய்ய வேண்டுமென்று அரசு நெறிமுறைகளை வகுத்துள்ளது. மீதிப் பணத்தில் அவர்கள் விரும்புகின்ற பணிகளைத் தேர்வு செய்யலாம். அதுபோல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகத்திற்கான மின்சாரக் கட்டணம், குடிநீர்க் கட்டணம் போன்ற கட்டணங்களை எல்லாம் செலுத்துவதற்கு, இந்த அரசு பரிசீலனை செய்து நல்ல ஒரு முடிவை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. க. பாரமலை, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.



2002 மார்ச் 14]

**29—**

## மேலாண்மைப் பட்டயப் பயிற்சி

***6274—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டியல் இனம் மற்றும் பழங்குடியினரில் கூட்டுறவு உயர்நிலை மேலாண்மைப் பட்டயப் பயிற்சி முடித்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு வேலை வழங்கப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு உடன் வேலை கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு உயர்நிலை மேலாண்மைப் பட்டயப் பயிற்சி முடித்துத் தேறியுள்ள மாணவர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர். இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரும் அடங்குவர். நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி, பதிவு மூப்பு அடிப்படையில், Registration Seniority-படி கூட்டுறவு நிறுவனங்களில் காலிப் பணியிடம் ஏற்படும்போது எல்லாம் இப்பதிவு மூப்புப் பட்டியல் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து பெறப்பட்டு, பணியிடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கூட்டுறவு உயர்நிலை மேலாண்மைப் பட்டயப் பயிற்சி முடித்துப் பதிவு செய்துள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள், பதிவு மூப்பு அடிப்படையிலே Seniority அடையும்போது அவர்களுக்கும் பணியிடம் வழங்கப்படும்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறையில், பல்வேறு சங்கங்களில் கூட்டுறவு மேலாண்மைப் பட்டயப் பயிற்சி பெற்றவர்களில் நாடுனர்கள் இல்லை என்ற கருத்தின் அடிப்படையில், அப்படிப்பட்ட பதவிகளை

[2002 மார்ச் 14

நிரப்புவதற்காக தனியாக ஒரு பயிற்சி கொடுக்கப்பட வேண்டுமென்று கூட்டுறவுத் துறை மூலமாக விளம்பரம் செய்து, அரசு சார்பிலேயே ஒரு candidate-க்கு 3 ஆயிரம் ரூபாய், மாநிலக் கூட்டுறவு இணையத்தின் சார்பிலே 3 ஆயிரம் ரூபாய் என்று, 6 ஆயிரம் ரூபாய் கொடுத்து, ஏறக்குறைய 210 பேருக்குப் பயிற்சி கொடுத்து, பயிற்சி முடிந்து 3 ஆண்டு காலம் ஆகிறது. அரசாணை எண் 216, நாள் 1-9-1998-ன்படி, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வேலைவாய்ப்பு அலுவலகத்தில், பதிவு மூப்பு அடிப்படையில் நாடுனர்கள் இருந்தால் அவர்களை நியமனம் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இதுவரையில் நியமனம் செய்யப்படவில்லை என்பதுதான் எங்களுடைய ஆதங்கம். வருகின்ற காலத்திலாவது, இப்படி விசேஷமாக அரசே பணம் செலவழித்து பயிற்சி கொடுத்து, நம்பிக்கையோடு இருக்கின்ற இந்த 210 மேலாண்மை பட்டதாரிகளுக்கு விரைவாக வேலை வழங்குவதற்கு அரசு முயற்சியை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணையின்படி, சீனியாரிட்டிபடி, பதிவு செய்திருக்கிற அத்தனை பேருக்கும் வேலைவாய்ப்பு வழங்குகின்ற பணியினை கூட்டுறவுத் துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற அந்தக் கோரிக்கைகளையும் —இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இப்போது வந்த பிறகுதான் அந்தப் பணிகளை எல்லாம் விரைவாக முடிக்க, தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். அதன் அடிப்படையிலே உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு விரைந்து பரிசீலிக்கும்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சியின்போது அரசாணை எண் 44 வாபஸ் பெறப்பட்டு, ஒரு பெரிய பிரச்சினையே தமிழகத்திலே எழுந்தது. அந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட, அரசாணை 44-ஐ மாற்றியது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது, அதைத் திரும்பக் கொண்டுவர வேண்டுமென்று எல்லாம் குரல் கொடுத்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கூட நான் கடிதம் எழுதியிருக்கிறேன். சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது, ஆதிதிராவிட நலத் துறையின் சார்பிலே வழங்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில், அரசாணை 44-ஐ மீண்டும் கொண்டு வருவோம் என்று சொல்லியிருந்தீர்கள். இன்று மீண்டும் கொண்டுவரப்பட்டு அரசாணை



2002 மார்ச் 14]

வழங்கப்பட்டிருக்கிறது என்பதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மீண்டும் அரசாணை எண் 44 கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது அரசாணை எண் 91, நாள் 28-11-2001 என்ற அந்த ஆணையின்படி மீண்டும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த ஆணையின்படிகூட அனைத்துத் துறைகளிலுமிருந்து சரியான தகவலைப் பெற்று பின்னடைவு இடங்களைக் கண்டறிந்து, விரைவாக நிரப்பப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பல துறைகளிலிருந்து இதற்கான தகவல் இதுவரை கிடைக்கவில்லை என்பதுதான் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிற அந்த உயர்மட்டக் குழுவால் அது அப்போதைக்கப்போது பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, விரைவாக தகவலைப் பெற்று, அந்த அரசாணை 44-ஐ திரும்பக் கொண்டு வந்ததற்கான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அமைந்ததற்குப் பின்னாலேதான், தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கையை ஒளியிழக்கச் செய்கிற கடந்த ஆட்சி ரத்து செய்த அரசாணை எண் 44-ஐ மீண்டும் கொண்டு வந்து, அந்த backlog vacancy எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையிலே, இப்போது அந்த backlog vacancy-யை எல்லாம், எல்லாத் துறைகளிலும் வேகமாகச் சேகரித்து, அதை மாநில அளவிலே இருக்கிற உயர்மட்டக் குழுவிற்கு அனுப்புகிற அந்தப் பணியிலே ஈடுபட்டிருப்பதைப்போல, கூட்டுறவுத் துறையும் விரைந்து ஈடுபட்டிருக்கிறது. அதற்கான முயற்சியிலே ஈடுபட்டு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அந்த இலட்சியக் கனவை விரைவிலே இந்தக் கூட்டுறவுத் துறை நிறைவேற்றி வைக்கும் என்பதனை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆண்டுக்கு முன்னால், சென்னை, டி.என்.எஸ்.சி. வங்கியில்

தாழ்த்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீடு முழுமையாகப் பின்பற்றப்பட வேண்டுமென்பதற்காக, வெற்றிடங்கள் 19 இடங்கள், ஒன்றுக்கு ஒன்று என்ற விகிதத்திலே நிரப்பப்பட்டு, அது கடைசியிலே ஆணை பிறப்பிக்கப்பட்ட நிலையிலே நிறுத்தப்பட்டு, அதற்குப் பின்பு உயர் நீதிமன்றத்திற்குப் போய், உயர் நீதிமன்றத்திலும் உத்தரவு பெற்று அந்தப் பணியாளர்கள் வேலை கைக்கெட்டி வாய்க்குக் கிடைக்கவில்லை என்ற அந்தக் கவலையோடு ஓர் ஆண்டுகாலமாகத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மீண்டும் பணியிலமர்த்த கூட்டுறவுத் துறை முன்வருமா என்பதை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே 1:1 என்ற அந்த அடிப்படையிலே, அந்தப் பட்டியல் பெறப்பட்டு, இன்டர்வியூ நடத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே, கடந்த ஆட்சியினுடைய அந்த நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக அது நிறுத்தப்பட்டிருக்கிறது. தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்த விவரங்களை இந்த அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**30—**

**தொழிலாளர்களுக்கு மருத்துவமனை**

***5618—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரித் தொழிலாளர்களுக்காக மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளனவா?*

*(ஆ) எந்தெந்த இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன?*

*(இ) அவற்றில் எத்தனை தொழிலாளர் வீதம் 1999-2000 ஆம் வருடத்தில் மருத்துவ உதவி பெற்றுள்ளார்கள்?*



**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, வாழ்த்தி, வழிபடுகிறேன். அம்மா, உங்களைத் தாய் என்பேன், தந்தை என்றும் அழைப்பேன். உங்களின் சேய் என்றும் எங்களின் சிந்தையில் இனிக்கும் வார்த்தையை உங்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். இன்னவன், இனியவன் என்று யாரும் அறியா என்னை இந்த மண்ணின் அமைச்சராக்கிய எங்கள் குல தெய்வம் அம்மா அவர்களை என் பிறப்புக்கெல்லாம் மறக்கமாட்டேன். அம்மா காட்டிய வழியில் நடந்து, தூய நெஞ்சத்துடன் கடுமையாக உழைத்து, கழக ஆட்சிக்கும், அம்மா அவர்களுக்கும் பெருமை சேர்ப்பேன். எளியவனுக்கு எளியவனாகிய என்னை அமைச்சராக்கிய அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குவதைத்தான் எனக்குக் கிடைத்த பெருமையாக, பாக்கியமாகக் கருதுகிறேன்.

விடை—

(அ) ஆம். கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்காக மூன்று மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) அவை, நித்திரவிளை, இடைக்கோடு மற்றும் குழித்துறை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

(இ) அங்கு காப்பீட்டாளர்களில் 1-9-1999 முதல் 31-3-2000 வரை கீழ்க்கண்டவிதம் சிகிச்சை பெற்றுள்ளனர்:

| | |
|---|---|
| நித்திரவிளை: | 13,237 |
| இடைக்கோடு: | 11,286 |
| குழித்துறை: | 13,237 |

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு தாலுக்காவிலே, விளவங்கோடு தாலுக்காவிலே மட்டுந்தான் இந்த 3 மருத்துவமனைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இரண்டு தாலுக்காக்களில் முந்திரித் தொழிலாளர்கள் ஏராளமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்

[2002 மார்ச் 14

அவர்கள் படித்ததிலேயிருந்தே ஒவ்வொரு மருத்துவமனையிலேயும் 16,000த்திற்கும் அதிகமான ஆட்கள் ஒவ்வொரு வருடத்திலும் வைத்திய உதவி பெற்று வருகிறார்கள் என்பது தெரிகிறது. ஆகவே, கல்குளம் தாலுக்காவிலேயும், அதோடு இணைந்திருக்கிற தோவாளை தாலூக்காவிலேயும் வேலை செய்கிற முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கு வசதி செய்து தருகிற முறையில் திருவட்டாறிலும், திங்கள் நகரிலும் ஒவ்வொரு மருத்துவமனையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? அதேபோன்று, தற்போது இயங்கிக் கொண்டு இருக்கின்ற மருத்துவமனைகளிலே முழு நேரங்களிலும் மருத்துவர்கள் இல்லை என்ற ஒரு குறைபாடு அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா, அதைப் போக்குவதற்கு, இந்த மருத்துவமனை நேரங்களில் மருத்துவர்களும், மற்ற சிப்பந்திகளும் கட்டாயமாகச் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தி, அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படுமா?

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கருங்கல் என்ற இடத்தில் மேலும் தொழிலாளர் அரசு ஈட்டு மருந்தகம் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது இயங்கி வரும் 3 மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் 2 மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**(ஆ) குறுகிய கால வினா**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய கால வினா எண் 1, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**குறுகிய கால வினா எண் 1—**

**பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள்**

***17871—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 மார்ச் 14]

(அ) சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள பெண்களில் பெரும்பாலானோர் பீடி சுற்றும் தொழில் செய்வதால் மத்திய அரசு மானியத்துடன் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் வகுத்துள்ளதுபோல், மாநில அரசும் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம்.

**திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள சேரன்மகாதேவி ஒன்றியம், பாப்பாக்குடி ஒன்றியம், கடையம் ஒன்றியம் ஆகிய ஒன்றியங்களில் பீடித் தொழிலாளர்கள் உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் பாதிக்கப்பட்டு, இப்போது அவர்களுக்கு மானியத்துடன் வீடுகள் கட்ட வேண்டும் என்று இதயதெய்வம் புரட்சித் தலைவி அரசிடம் கோரிக்கை வைத்து, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. இந்தத் திட்டம் எப்போது அமல்படுத்தப்படும்? இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது? ஏழை பீடித் தொழிலாளர்களுக்குக் குறைந்த வட்டியுடன் கடன் கொடுத்து அவர்கள் வீடுகளைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா, அதைப் பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கும் இடங்களில், ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வீடும் ரூ.40,000 மதிப்பீட்டில் கட்டலாம் என்றும், மத்திய தொழிலாளர் நல அமைச்சகத்திலிருந்து ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ.20,000 மானியமாகப் பெறுவது என்றும், ரூ.5,000 மாநில அரசு மானியமாக வழங்கலாம் என்றும், பயனாளிகளே தங்களுடைய சொந்தப் பணத்தையும் குறைந்தபட்சம் ரூ.15,000 செலவழித்து, தங்களுடைய மேற்பார்வையில் வீடுகளைக் கட்டிக்கொள்ளலாம் என்றும் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இந்த வகையில் சேரன்மகாதேவி தொகுதியிலும், சொந்தமாக வீடு கட்டும் நிலம் வைத்துள்ள பீடித் தொழிலாளர்கள், ஆண் அல்லது பெண் எவராக இருந்தாலும் அவர்களை இத்திட்டத்தின்கீழ் பயனடையச் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[2002 மார்ச் 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*(குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)*

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கோவை மாவட்டம், திருப்பூர் ஒன்றியம், இடுவாய் ஊராட்சி மன்றத் தலைவர் கொலை செய்யப்பட்டுள்ளது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். கோவை மாவட்டம், திருப்பூர் ஒன்றியம், இடுவாய் ஊராட்சி மன்றத் தலைவர் கொலை செய்யப்பட்டுள்ளது குறித்து, திரு. கே.சி. கருணாகரன், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி, திரு. என். நன்மாறன், செல்வி க. பாலபாரதி, திரு. கே. மகேந்திரன், திரு. க. முருகவேல் ராஜன், திரு. சி. ஞானசேகரன், திரு. சோ. இராசேந்திரன், திரு. இ. புகழேந்தி மற்றும் திரு. எ.வ. வேலு ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அதுகுறித்து சுருக்கமாகப் பேசுமாறு அழைக்கிறேன். திரு. ஜே. ஹேமச்சந்திரன் (குறுக்கீடு) சரி, திரு. கே.சி. கருணாகரன் மட்டும்.

*முற்பகல் 11-15*

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், இடுவாய் ஊராட்சித் தலைவரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மிகச் சிறந்த முன்னணி ஊழியர்களில் ஒருவரும், கடந்த 10 ஆண்டுகளாக மிகச் சிறந்த மக்கள் தொண்டாற்றி வந்த ஊழியருமான, 40 வயது நிறைந்த இரத்தினசாமி என்கிறவர், நேற்றையதினம் ஈனத்தனமான முறையில், கோழைத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இது ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தில் நடந்திருக்கக்கூடிய அரசியல் படுகொலை என்று எங்கள் கட்சி கருதுகிறது. அவரை வெட்டி, குத்திக் கொலை செய்து, மரத்திலே கட்டித் தொங்கவிட்டு, அவருடைய உடலுக்குக் கீழே இன்ன காரணத்தினால் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று எழுதி ஒட்ட,



2002 மார்ட் 14] [திரு. கே.சி. கருணாகரன்]

வைக்கப்பட்டிருக்கிற துண்டுப் பிரசுரம் இருந்திருக்கிறது. ஆக்கிரமிப்பை அகற்றச் செய்த அராஜகம்— இதிலே சொல்லக்கூடாத பெயர் இருக்கிறது. அதாவது— "தலித்துக்கு சப்போர்ட் செய்தது, அன்றும் சாகாமல் தப்பித்தது" ஏற்கெனவே இவரைக் கொலை செய்ய முயற்சிக்கப்பட்டு தப்பித்தார். கிறித்துவனுக்கு சப்போர்ட் செய்தது; கவுண்டர்களை மதிக்காதது; இந்துவுக்கு எதிராக இருந்தது; பஞ்சாயத்துத் தேர்தலில் மீண்டும் ஜெயித்தது. கம்யூனிஸ்டாய் இருப்பது இப்படிக்கு—கம்யூனிஸ்ட் எதிர்ப்பு அணி, எச்சரிக்கை—என்பதன் பேரில் எழுதி அடையாளம் காட்டப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், சிறுபான்மை மக்களுக்காகவும் அவர் நெஞ்சுரத்தோடு போராடினார். இன்னும் சொல்லப் போனால், அரசுக்குச் சேர்ந்த நிலங்களை அநியாயமான முறையில் அபகரித்துக் கொண்டிருந்தவர்களுக்கு எதிராக, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி ஊராட்சிக்குச் சேர்த்தார். அதன் காரணமாகவே மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று, கடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில் இரண்டாவது முறையாக வெற்றி பெற்று அமர்ந்தார்.

1998 ஆம் ஆண்டு இதே மாதிரி ஒரு தாக்குதல் நடந்து, கத்தியால் குத்தப்பட்டு, வாயில் விஷம் ஊற்றிக் கொலை செய்ய முயற்சிக்கப்பட்டது. ஆனால் அதிலே அவர் பிழைத்துவிட்டார். அதே சக்தி --அவர்கள் மீது அப்போது உறுதியான நடவடிக்கையை காவல் துறை நிருவாகம் எடுத்திருந்தால் இன்றைக்கு அவரை நாங்களும், அந்த ஊர் மக்களும் இழந்திருக்க மாட்டோம்.

இப்போதுகூட, 20 தினங்களுக்கு முன்னதாக, தனக்கு உயிருக்கு ஆபத்திருக்கிறது என்று சம்பந்தப்பட்ட மாவட்டக் காவல் துறை அதிகாரிகளிடம் அவர் புகார் கொடுத்திருக்கிறார். உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இன்றைக்கு திருப்பூர் நகரமும், கோவை மாவட்டமும் மிகப் பெரிய கொந்தளிப்பில் உள்ளன. கடையடைப்பு, பொது வேலை நிறுத்தம் என்பதன் பேரில் அங்கே ஒரு பதட்டம் இருக்கிறது. அ.தி.மு.க., தி.மு.க., த.மா.கா., கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் பந்துக்கு அழைப்பு விடுத்து, இன்று கடையடைப்பு நடக்கிறது. இதில் இருந்தே, அனைத்துக் கட்சிகளுடைய மக்களின், ஊழியர்களின் பேராதரவைப் பெற்றவராக, மக்கள் நல ஊழியராக அவர் செயல்பட்டிருக்கிறார் என்பது தெரிய வருகிறது. சாதி வெறி, மத வெறி,

கிராம நிர்வாகத்துடன் அதிகக வெறி ஆகியவை எல்லாம் ஒன்று சேர்ந்து, ஒரு மிகச் சிறந்த ஊழியரைப் படுகொலை செய்திருக்கிறது. ஆகவே, சம்பந்தப்பட்டவர்களிடம் உரிய நடவடிக்கை எடுத்து, குற்றவாளிகளை அவர் யாராக இருந்தாலும் பரவாயில்லை, அவர்களிடம் உரிய நடவடிக்கை எடுத்து, கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். வருங்காலத்தில் இதுபோல செயல்படுகிற மக்களின் ஊழியர்களுக்கு, அவர்கள் எந்த இயக்கங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் உரிய பாதுகாப்பைத் தருவதற்கு நடவடிக்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிராமப்புற மக்களுக்கு அச்சம் இருக்கிறது. பாதுகாப்பு வேண்டும் என்று கேட்கிறார்கள். கோவை மாவட்டக் காவல் துறை நிர்வாகம் பாதுகாப்புத் தரமறுக்கிறது. அல்லது என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-3-2002 அன்று காலை கோயம்புத்தூர் ஊரக மாவட்டம் மங்களம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடுவாய் கிராமத்தில், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட இடுவாய் ஊராட்சித் தலைவரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவருமான கந்தசாமி கவுண்டர் மகனான திரு இரத்தினசாமி கொலை செய்யப்பட்டுக் கிடந்தார் என்ற செய்தி காவல் துறைக்குக் கிடைத்துள்ளது.

இடுவாய் கிராமத்தில் அவரது வீட்டுக்கு அருகில் சுமார் 200 மீட்டர் தூரத்தில் உள்ள மரத்தில், இறந்து போனவரின் உடல் தூக்குப் போட்ட நிலையில் காணப்பட்டது. ஆனால், அவரது கைகளும், கால்களும் கயிற்றால் கட்டப்பட்டிருந்தன. அந்த மரத்தில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டியில் எழுதப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தில், இரத்தினசாமி ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் துடிப்பாக இருந்ததற்காகவும், உள்ளூரில் வசிக்கும் ஒரு இனத்தவரை அவமரியாதை செய்ததுடன் வேறு சில இனத்தவர்களைத் தூண்டி விட்டதற்காகவும், இந்த மக்களிடம் அவரது பயம் போகிறதற்காகவும், அவருடைய கம்யூனிசக் கொள்கைகளுக்காகவும், மேலும் உள்ளாட்சித் தேர்தலில் அவர் இரண்டாவது முறை வெற்றி பெற்றதற்காகவும் அவர் கொலை



செய்யப்பட்டார் என எழுதப்பட்டு இருந்தது. கம்யூனிசத் தத்துவத்தை எதிர்க்கும் நபர்களால் இந்த எச்சரிக்கை விடப்படுவதாக அதில் கையெழுத்து இடப்பட்டிருந்தது.

பகல் 11.20

சம்பவத்தைப் பற்றித் தகவல் அறிந்த காவல் துறையினர், இறந்து போன இரத்தினசாமியின் சகோதரர் கருப்புசாமி கொடுத்த புகாரின் அடிப்படையில், இந்திய தண்டனைச் சட்டம் 302-வது பிரிவின்கீழ், மங்களம் காவல் நிலையத்தில் குற்ற எண் 71/2002-ல் வழக்குப் பதிவு செய்துள்ளனர். காவல் துறையின் முதல் தகவல் அறிக்கையில், குற்றவாளி யார் எனத் தெரியவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்து போன இரத்தினசாமியின் உடல், திருப்பூர் அரசு பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் கொலைக்குக் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடிக்கவும், குற்றவாளிகளைப் பிடிக்கவும், தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் ஊரகக் காவல் துறையினர், இந்தக் கொலை சம்பந்தமாகச் சந்தேகப்படும் 6 நபர்களை விசாரித்து வருகின்றனர்.

இளங்கோவன் மற்றும் மாதவன் என்ற இரண்டு மதிமுக-வினருடன் திரு. இரத்தினசாமிக்கு அரசியல் காரணமாக வேறுபாடு இருந்துள்ளது. திமுக-வைச் சேர்ந்த பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் திரு பழனிசாமி, 'இந்தப் பஞ்சாயத்திற்கு விளையாட்டுப் பொருட்கள் (Sports Articles) வாங்கியதில் முறைகேடு நடந்துள்ளது' என்று திமுக-வினைச் சேர்ந்த திரு நடராஜன் என்பவருடன் சேர்ந்து கொண்டு, இறந்து போன ஊராட்சி மன்றத் தலைவர் திரு இரத்தினசாமி மீது புகார் செய்துள்ளனர். இது சம்பந்தமாக போலீஸ் விசாரணை நடைபெற்று வருகின்ற நிலையில், திரு. இரத்தினசாமி, தனது பதவியை ராஜினாமா செய்வதாகக் கூறியுள்ளார்.

இந்த ஊராட்சியில் பிளம்பராக வேலை பார்த்த திரு சண்முகம் என்பவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக ஊராட்சி மன்றத் தலைவர் திரு இரத்தினசாமிக்கும், இவருக்கும் இடையே வாய்த் தகராறு நடந்துள்ளது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 மார்ச் 14

இந்த ஊராட்சியில் எழுத்தராகப் பணிபுரியும் திரு. ரமேஷ் என்பவருக்கு திரு. இரத்தினசாமியின் நடவடிக்கைகள் முழுமையாகத் தெரியும் என்பதால், அவரிடமும் விசாரணை நடந்து வருகிறது.

எல்லாக் கோணங்களிலும் விசாரணை முடுக்கிவிடப்பட்டுள்ளது. விரைவில் கொலையாளிகள் கைது செய்யப்படுவார்கள் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சில அரசியல் கட்சிகள் சார்பாக, பந்த் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வந்துள்ளது. காவல் துறையினரும், வருவாய்த் துறையினரும் விழிப்புடன் இருந்து நிலைமையை உன்னிப்புடன் கவனித்து வருகின்றனர். நிலைமை கட்டுக்குள் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்

### சட்டக் கல்லூரி மாணவர்கள் பிரச்சினை குறித்து

***திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரி...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றிப் பேசப்பட்டு இருக்கிறது. இன்னும் அரசிடமிருந்து தகவல் வரவில்லை. பேசப்பட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் நாளைக்குப் பதில் சொல்லுகிறபோது இதுபற்றி விளக்கம் சொல்லுவார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரி மாணவர்களே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. அந்தத் தீர்ப்பு வருவதற்கு முன்பாக அரசு என்ன நடவடிக்கை எடுக்க முடியும்?

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைச் சொல்லிவிட்டீர்கள். முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள்.



## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

***திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 7 முதல் 10 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம் - தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள் உட்பட எஞ்சினியரிங் சிறு தொழிற்சாலைகள் திறப்பதற்கும், வேலையிழந்துள்ள தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கும் வரை நிவாரணத் தொகை வழங்குவது குறித்தும்;

2. கோவை மாவட்டத்தில் விஸ்கோஸ், டெக்ஸ்டூல் போன்ற முக்கிய பெரும் தொழிற்சாலைகளைத் தொடர்ந்து இயங்கச் செய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சி. கருணாகரன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. வேலூரில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவது குறித்தும்;

2. வேலூரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடங்குவது குறித்தும்;

3. வேலூர் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க ஒகேனக்கல்லில் இருந்து காவிரியாற்று நீரைக் கொண்டு வரும் திட்டத்தைத் தொடங்குவது குறித்தும்;

4. வேலூரில் கூட்டுறவு பழத் தொழிற்சாலை இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் குறித்தும்;

5. வேலூரை அடுத்த அரியூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் திறக்கும் திட்டம் குறித்தும்;

6. வேலூரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் 'ஏ' பிளாக் கட்டடம் கட்டும் திட்டம் குறித்தும்;"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலூரை தமிழ்நாட்டின் தலைநகராகவே ஆக்க வேண்டும். (சிரிப்பு) திருத்தத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** "7. விவசாயிகளுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1000 விலை வழங்கும் திட்டம் குறித்தும்;

8. புகையிலை, பான்மசாலா, பான்பராக், பிளாஸ்டிக் உபயோகத்தைத் தடுக்கும் சட்டம் இயற்றும் திட்டம் குறித்தும்;

9. அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குப் புதிய பேருந்துகள் வாங்கும் திட்டம் குறித்தும்;

10. கள்ளச்சாராயச் சாவுகள், விஷச்சாராயச் சாவுகள் தடுப்புத் திட்டம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சி. ஞானசேகரன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.





முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச். எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. நீலகிரி மாவட்டத்திலுள்ள சுமார் 65,000 சிறு மற்றும் குறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பச்சைத் தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.15 விலை நிர்ணயம் செய்வது குறித்தும்;

2. நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் குடும்பங்களைக் காக்கும் வகையில் தொழிற்சாலையைச் சீரமைக்கும் திட்டம் குறித்தும்;

3. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டாரத்தில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஏழை மக்களுக்குப் பட்டாக்கள் வழங்கும் திட்டம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. பாண்டியாறு-புன்னம்புழா நீர்ப்பாசனத் திட்டம் குறித்தும்;

2. கோவை மாவட்டத்தில் தொடர்ந்து மூடப்பட்டு வரும் தொழிற்சாலைகள் குறித்தும்;

3. கோவை நகரில் அன்னை சந்தியா சிறுவர் உலகப் பணிகள் தொடங்குவது குறித்தும்;

4. தேங்காய் விலை வீழ்ச்சியைத் தடுக்கும் திட்டம் குறித்தும்;

5. கோவையில் கோளரங்கு கட்டும் திட்டம் விரைவில் தொடங்கப்பட வேண்டியது குறித்தும்;

[திரு. வி.கே. லட்சுமணன்] [2002 மார்ச் 14

6. கோவை நகரில் உள்ள தங்க நகைத் தொழிலாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்தும்;

7. அமைப்பு சாராத தொழிலாளர்களின் பிரச்சினைகட்குத் தீர்வு காண வேண்டியது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்:

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. படித்த பல இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் குறித்தும்;

2. அரசு அங்கீகாரம் பெறப்பட்ட அல்லது பெறப்படாத வீட்டுமனை நிலம் பத்திரப் பதிவு செய்ய உள்ளாட்சி நிர்வாகத் தடையில்லாச் சான்று பெறவேண்டும் என்பது போன்ற சட்டங்களைத் தளர்த்தி, புதுமனை வாங்க விரும்பும் ஏழை மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு பதிவுத் துறை வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்கள் குறித்தும்;

3. அரசுப் பள்ளிகளில் +2 படிக்கும் மிகவும் பிற்பட்டோர் பட்டியல் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

4. “அரசு நடப்பு நிதியாண்டிற்கான திட்ட அளவு ரூ. 6,040 கோடி என்று அறிவித்தபடி செயல்படுத்த நிதியாதாரங்களைப் பெருக்காமல் ரூ.5,200 கோடியாகக் குறைக்க முடிவெடுத்துள்ளது வருந்தத்தக்கது.”

5. தனியாக இயங்கி வந்த அரியலூர் மாவட்டத்தை பெரம்பலூர் மாவட்டத்துடன் இணைக்க அரசு முடிவு செய்துள்ளது வருந்தத்தக்கது.”



2002 மார்ச் 14]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. சென்னை பக்கிங்காம் கால்வாயைச் சுத்தப்படுத்தும் திட்டம் குறித்தும்;

2. சென்னையில் சீர்குலைந்து வரும் குப்பைகள் அகற்றும் பணியினைச் சீரமைப்பது குறித்தும்;

3. சென்னையில் பூங்கா நகர் தொகுதியில் பல முக்கிய வீதிகள் அனைத்திலும் சாலையோரங்களில் வாழும் ஆயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு வீட்டு வசதி அமைத்துத் தரும் திட்டம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

***திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். டாக்டர் க. பொன்முடி, நீங்கள் 10 மணித் துளிகளில் பேசி முடித்து விடுங்கள். தலைவர்கள் எல்லாம் பேச வேண்டியிருக்கிறது.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரை மீதான விவாதத்தில் உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு முதலில் என்னுடைய உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த கவர்னர் உரையைப் பொறுத்தவரையில், நான் முதலில் ஒரு நடைமுறை உண்மையை இதிலே குறிப்பிட்டு இருப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 10 மாத காலமாக, போக்குவரத்துக் கழகங்களுடைய கட்டணம் உயர்த்தப்பட்டாலும், விலைவாசிகள் உயர்ந்தாலும், அரசு ஊழியர்களுடைய சலுகைகள் பறிக்கப்பட்டாலும், தொழிலாளர்களுக்கான போனஸ் நிறுத்தப்பட்டாலும், அவைகளுக்கெல்லாம் காரணம் கடந்த

கால ஆட்சியிலே ஏற்பட்ட நிதி நிலைப் பற்றாக்குறைதான் என்ற பதிலைத் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தார்கள். ஆனால், இந்த ஆளுநர் உரையில் பக்கம் 10-ல், "தமிழ்நாடு மட்டும் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை அல்ல; பொருளாதாரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பின்னடைவு, ஏனைய மாநிலங்களின் நிதி நிலைமையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது; அதன் காரணமாக, பல மாநிலங்கள் அவற்றின் திட்டச் செலவைப் பெருமளவிற்குக் குறைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன" என்ற நம் முறை உண்மையை ஏற்றுக் கொண்டிருப்பதற்காக நான் முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த காலத் தேர்தலின்போதுகூட, இதுபோல பணப் புழக்கம் இல்லை என்ற பிரச்சினை வருகிறபோது, அன்றைய முதலமைச்சர் அவர்கள், இதே பதிலைத்தான் சொன்னார்கள். 'Economic recession' என்று சொல்லுகிற அந்தப் பொருளாதார வீழ்ச்சி தமிழகத்திலே மட்டுமின்றி, கடந்த 4, 5 ஆண்டு காலமாக உலகளாவிய ஒரு 'international phenomena' என்று சொல்கிற அளவிற்கு பரவலாக ஒரு பிரச்சினையாகவே இருந்த சூழ்நிலையிலேதான், கடந்த கால கலைஞர் அவர்களுடைய 5 ஆண்டு கால ஆட்சியில், அரசு ஊழியர்களுடைய சலுகைகளைப் பறிக்காமல், தொழிலாளர்களுடைய போனஸை நிறுத்தாமல், பேருந்துக் கட்டணத்தை அதிகம் உயர்த்தாமல், அந்த அரசு 5700 கோடி ரூபாய் அளவை, திட்டச் செலவை எட்ட முடிந்த அளவிற்கு நிர்வாகத் திறமையோடு செயல்பட்டது என்பதுதான் உண்மை என்பதை இந்த வரிகள் சுட்டிக்காட்டுகின்றன என்றே நான் கருதுகின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு படிக்கப்பட்ட ஆளுநர் உரையையும், இந்த ஆளுநர் உரையையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற ஒரு பயிற்சியிலே நான் ஈடுபட்டேன். பெரும்பாலும், 1 ஆண்டு படித்துவிட்டு, அடுத்த ஆளுநர் உரையைப் படிக்கிறபோது, அந்த ஆளுநர் உரையினுடைய தொடர்ச்சியாக இந்த ஆண்டு ஆளுநர் உரை இருப்பதிலே மகிழ்ச்சி.

ஆனால், அப்படித் தொடர்ச்சியாக, ஒரு Continuous Process-ஆக இல்லாமல், ஒரு repetition-ஆகவே இந்த ஆளுநர் உரை இருப்பதாக நான் கருதுகிறேன். ஏனென்றால், கடந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்ட பல செய்திகள்தான், திரும்பத் திரும்ப இதிலே சொல்லப்பட்டிருக்கின்றனவே தவிர, இந்த 10 மாத காலங்களிலே, அந்த ஆளுநர் உரையில் சொல்லப்பட்டவைகளுக்கு எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக இது இல்லாமல் அதனுடைய



repetition-ஆக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது நான் ஏதோ பொத்தாம் பொதுவாகச் சொல்கிற குற்றச்சாட்டு அல்ல.

பழைய கவர்னர் உரையிலே பக்கம் 6-ல் 'முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை உயர்த்த கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்' என்று சொல்லப்பட்டது. அது இந்த ஆளுநர் உரையிலேயும் பக்கம் 6-லே இடம் பெற்றிருக்கிறது. பழைய ஆளுநர் உரையில் பக்கம் 13-ல் 'கூட்டுறவுத் தேர்தல் 2001 செப்டம்பர் திங்களில் நடத்தப்படும்' என்று அறிவித்தீர்கள். ஆனால், இன்னும் அந்த கூட்டுறவுத் தேர்தலை நடத்துவோம் என்று மீண்டும் அறிவித்திருக்கிறீர்கள். பக்கம் 7-ல், 'மத்திய அரசு நிதிக் குழுவிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்கினைக் கோருவோம்' என்று குறிப்பிட்டிருந்தீர்கள். அதையே இப்போது பக்கம் 8-லேயும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். பக்கம் 6-ல், 'கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை விரைந்து முடிக்க உடனடி நடவடிக்கையை எடுக்கும்படி ஆந்திர அரசை வலியுறுத்துவோம்' என்று கடந்த ஆளுநர் உரையிலேயும் குறிப்பிட்டிருந்தீர்கள். இப்போதும் அதையே திரும்பவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 'சேது சமுத்திரத் திட்டத்தை வலியுறுத்துவோம்' என்று சொல்லியிருந்தீர்கள். அதையும் இப்போது திரும்பச் சொல்லியிருக்கிறீர்கள்.

தீபகற்ப ஆறு நீர் இணைப்புத் திட்டம், பக்கம் 27-லே இப்போது சொல்லப்பட்டிருக்கிறது. இது பக்கம் 11-லேயும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லப்பட்டவைகளைத் திரும்பச் சொல்வதிலே கூடத் தவறு இருக்க முடியாது. ஆனால், சொல்கிற அந்தச் செய்திகளிலே, 10 மாதத்திலே இந்த அரசு என்ன செய்தது; அதைச் சொல்லிவிட்டு, இப்போது மேலும் இதைச் சொல்லப் போகிறோம் என்று சொல்லி இருந்தால், படிக்கிற எங்களுக்கும் இது ஒரு repetition என்ற எண்ணம் இல்லாமல், இது தொடர்ச்சியாக இருக்கிறது என்ற எண்ணம் வந்திருக்கும். ஆகவே, வருகிற காலங்களிலே இதில் கவனம் செலுத்தி, இந்த ஆட்சியிலே தொடர்ச்சியாக இவைகள் செயல்படுவதற்கு நீங்கள் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11.30

'15 அம்சத் திட்டம்' என்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். அதுகூட, பழைய ஆளுநர் உரையிலே சொல்லப்பட்ட பல்வேறு திட்டங்களைத் தொகுத்து இதிலே, Point, point ஆகச் சொல்லியிருக்கிறீர்கள். பக்கம் 8-ல், பழைய ஆளுநர் உரையில், 'மழை நீரைச் சேகரிக்கும் முறைகளில்

பயிற்சி அளிக்கப் பெருந்திட்டம்', பழைய ஆளுநர் உரையில் பக்கம் 9-ல் 'செம்மறி ஆட்டுப் பண்ணைகள், மீன் வளர்ப்புப் பண்ணைகள், கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஆகியவற்றை நடத்த ஊக்கம் அளிக்கும் சிறப்புத் திட்டம்'; பக்கம் 9-ல், 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்னும் வீட்டுமனை விரைவு ஒதுக்கீட்டுத் திட்டம்'; பக்கம் 10-ல், '100 பேருக்கு மேற்பட்ட மக்கள் தொகையின் குடியிருப்பில் ஒரு குடிநீர் ஆதாரம் ஏற்படுத்தும் திட்டம்'; பக்கம் 11-ல் 'ஏரிகள், பாசன வாய்க்கால்கள் ஆகியவற்றை நவீனப்படுத்தும் சிறப்புத் திட்டம்'. இப்படி சிறப்புத் திட்டம், வீட்டுமனை விரைவுத் திட்டம், பயிற்சி அளிக்கும் பெருந்திட்டம் என இந்தத் திட்டங்களெல்லாம் ஒருங்கிணைக்கப்பட்டு, இன்று அவையெல்லாம் ஓர் உரையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, 15 point-களாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, இதிலே புதியதாக எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

மேலும், இந்த 15 அம்சத் திட்டங்களிலேகூட சொல்வதைச் செய்கிற அளவிற்குத் திட்டங்கள் இருக்கின்றனவா என்று சொன்னால், அவற்றை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளிலே இந்த ஐந்தாண்டு காலம் ஈடுபட்டாலும், அதற்கு முன்னோடியாக ஒரு திட்டத்தையாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியிருக்கலாம். அதிலே குறிப்பாக, அவர்கள் 13-வது திட்டமாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். பாலின நேர்மை நெறி (Gender equity)— பாலினப் பாகுபாட்டை நீக்குகின்ற வகையில் ஆண், பெண் விகிதாச்சார முரண்பாடுகளைக் களைதல் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் வரவேற்கிறேன். ஆண், பெண் விகிதாச்சார முரண்பாடுகளைக் களைய வேண்டும். இதே எண்ணத்தோடுதான் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே இருக்கிறபோது, உள்ளாட்சித் துறைகளிலே 33 சதவிகிதம் பெண்களுக்கு அளித்தார்கள். நீங்கள் அதைச் செயல்முறைப்படுத்தியிருந்தால், இந்த 15 திட்டத்தையும் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு வந்திருக்கும். நீங்கள் அமைத்த அமைச்சரவையிலேகூட, முன்பு மூன்று பெண் அமைச்சர்கள் இருந்தார்கள். அதைக் குறைத்து, இன்று ஒரு பெண் அமைச்சருக்குத்தான் இடம் அளித்திருக்கிறீர்கள். இந்த விகிதாச்சாரத்தை உங்கள் அமைச்சரவையிலேயே காட்டியிருந்தால் நிச்சயமாக நீங்கள் இன்னும் விரிவுபடுத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்திருக்கும். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, பேசுங்கள்.





**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லியிருக்கிற கருத்துக்கான விவாதங்களைச் சொல்லியிருக்கின்றேனே தவிர, அவர்கள் அடுத்த முறை விரிவாக்கம் செய்கிறபோது, விரிவாக்கம் செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஏனென்றால்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திற்கே முன்னோடியாக, கீழ்மட்டத்திலிருந்து கிளைக் கழகச் செயலாளர் பொறுப்பிலிருந்து, பொதுக் குழு வரை (மேசையைத் தட்டும் ஒலி) கட்சியின் எல்லா மட்டங்களிலும் பெண்களுக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளித்துள்ள ஒரே அரசியல் இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சரவை அமைப்பது என்பது, முதலமைச்சரின் தனிப்பட்ட உரிமையாகும். அதைப் பற்றிக் கேள்வி கேட்க யாருக்கும் உரிமை கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய உரிமைப் பிரச்சினையாக நான் சொல்லவில்லை. இதிலே கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு கொள்கை விளக்கத்திற்கு அவர்களே முன்னோடியாக இருந்திருக்கலாமே என்ற ஆதங்கத்தோடு கேட்டேனே தவிர, உங்களுடைய உரிமையில் தலையிடுவதற்கு எனக்கு உரிமையில்லை என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். அந்த உணர்வோடுதான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, இந்த கவர்னர் உரையிலே போக்குவரத்துக் கழகங்களைத் தனியார் உடைமையாக்குவதற்குக் காரணம், ஏற்பட்டிருக்கிற நஷ்டம்தான் என்று நிதியமைச்சர் அவர்களும்.........

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தெரிந்தே தவறான தகவலை இங்கே தெரிவித்துக் கொண்டிருக்கிறார். ஆளுநர் உரையைக் கவனமாகப் படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்துக் கழகங்கள் தனியார் உடைமையாக்கப்படும் என்று ஆளுநர் உரையில் எங்கேயும் கூறப்படவில்லை. தெரிந்தெடுக்கப்பட்ட சில வழித்தடங்கள் தனியாருக்கு விடப்படும் என்றுதான் உள்ளது.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். படிப்படியாக Privatisation என்று சொல்கிறபோது, படிப்படியாகத் தனியார்மயமாக்குகிற

[டாக்டர் க. பொன்முடி] [2002 மார்ச் 14

கொள்கையை ஏற்றுக்கொண்டுதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. இங்கே பேசிய போக்குவரத்துத் துறை அமைச்சரே இரண்டு நாட்களுக்கு முன்பு பேசுகிறபோது, முதலமைச்சர் அறிவித்துள்ள இந்தத் தனியார்மயக் கொள்கையைப் பொதுமக்கள் ஆதரித்திருக்கிறார்கள் என்று அவரே சுட்டிக்காட்டியிருக்கிறார். அந்த உணர்வோடுதான், அந்தப் பயம் இப்போது தொழிலாளர்கள் மத்தியிலும் இருக்கிற காரணத்தினாலேதான்....

முற்பகல் 11-35

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பொதுத் துறை நிறுவனங்களையெல்லாம் மத்திய அரசு இன்றைக்குத் தனியாருடைமையாக்கிக் கொண்டிருக்கிறது. அந்த மத்திய அரசில் தி.மு. கழகம் இடம் பெற்றிருக்கிறது. அப்பொழுது தி.மு.கழகம் இப்படித் தவறான கொள்கைகளை ஆதரிக்கிறதே என்ற பயம் தொழிலாளர்களுக்கு வராதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்பொழுது கேட்பது, நீங்கள் போக்குவரத்துக் கட்டணத்தை, 6 பைசா சாதாரணப் பேருந்துகளுக்கு உயர்த்திய பிறகு, விரைவுப் பேருந்துகளுக்கு 7 பைசா உயர்த்திய பிறகு, இந்த நான்கு மாதங்களில் போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் இயங்குகின்றனவா, இலாபத்தில் இயங்குகின்றனவா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலம் முடியும் வரை, 1995-96 வரை, போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ரூ.532.96 கோடிதான். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில், அதாவது மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது, அவருடைய காலத்திலே, 1996 முதல் 2001 முடியவுள்ள அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, ஐந்து ஆண்டு காலத்திலே போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ரூ.1,498.21 கோடி என்பதை சபைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய நிருவாகச் சீர்கேடுதான் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 மார்ச் 14] [திரு. இரா. விசுவநாதன்]

அதற்கடுத்தபடியாக, இப்பொழுது இந்த நஷ்டத்தைக்கூட, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் பல முறை கட்டண உயர்வை ஏற்றியதற்குப் பின்புதான் இந்த நஷ்டத்தை அடைந்திருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டி, இப்போது ஏற்பட்டிருக்கின்ற கட்டண உயர்விற்குப் பின்பு நிலைமை ஓரளவு சீரடைந்து வருகிறது. முழுமையான விவரங்கள் பின்பு தெரிவிக்கப்படும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அளிக்கப்பட்ட போக்குவரத்துத் துறையின் நிதிநிலை அறிக்கை என்னிடம் இருக்கிறது. 2000-2001-ல் போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக ஏற்பட்ட ரொக்க இழப்பு—எப்பொழுதுமே போக்குவரத்து மானியத்திலே சொல்கிறபோது, அந்த மானியத்திலே ரொக்க இழப்பையும் குறிப்பிட்டிருப்பார்கள். நாங்கள் ஐந்து ஆண்டு காலமும் ரொக்க இழப்பு, கூடுதல் இழப்பு என்று சொல்லியிருக்கிறோம். ஆனால், 2001-2002-க்கான நிதிநிலை அறிக்கையை நீங்கள் அளிக்கிறபோதுகூட ரொக்க இழப்பைச் சொல்லவில்லை. ரொக்க இழப்பு 2000-2001-ல் கலைஞர் அரசு பொறுப்பேற்றிருந்தபோது, சுமார் 75 கோடி ரூபாய்தான். ரொக்க இழப்பு 75 கோடி ரூபாய். நிதி அமைச்சர் அவர்களே, நீங்கள் சரிபார்த்துக்கொள்ளுங்கள். ரொக்க இழப்பு 75 கோடி ரூபாய்தான். அந்த 75 கோடி ரூபாயைச் சரி செய்ய வேண்டுமென்று சொன்னால், ஒரு பைசா பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டால், ஓர் ஆண்டிற்கு 100 கோடி ரூபாய் முதல் 120 கோடி ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். 2000-2001-ல் 70 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருந்த காலகட்டத்திலே 6 பைசாவை உயர்த்தி இருக்கிறீர்கள். குறைந்தபட்சம் 600 கோடி ரூபாயாவது ஓர் ஆண்டிற்கு போக்குவரத்துக் கழகங்களுக்கு வருமானம் வரவேண்டுமென்பதுதான் உண்மை. மூன்று மாதம் ஆகியும் கட்டணம் உயர்வு செய்யப்பட்ட பிறகும்கூட என்ன வேண்டும் என்பதைக் கேட்டுச் சொல்கிறேன் என்று ஒரு பொறுப்புள்ள போக்குவரத்துத் துறை அமைச்சர் சொல்கிறார் என்று சொன்னால், ஒவ்வொரு மாதத்திற்கும் மாண்புமிகு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கேட்டுச் சொல்கிறேன் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்றுக் கொண்டிருப்பது போக்குவரத்துத் துறையின் மானியக் கோரிக்கையின்மீதான விவாதம் அல்ல என்பதை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 மார்ச் 14

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது இப்போது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதோ மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருப்பதுபோல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்போதுதான் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிறார். ஆகவே, அவருடைய மானியக் கோரிக்கை பட்ஜெட் கூட்டத் தொடரில் வரும்போது முழு விவரங்களையும் தெரிவிப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் போக்குவரத்து மானியத்தைப் பேசவில்லை. போக்குவரத்துத் துறையைத் தனியார்மயமாக்குகிற முயற்சியில் ஈடுபட்டுள்ள காரணத்தினால் இந்த விளக்கங்களைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மூன்று மாத காலமாக........

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் *2000-2001*-வது ஆண்டு வாக்கில் அந்த cumulative loss என்பது *2,031* கோடி ரூபாய். ஆனால் *1996*-லே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் *163* கோடி ரூபாயாக இருந்த அந்த ஒட்டுமொத்த இழப்பு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, வெளிமாநிலங்களிலிருந்து போக்குவரத்துக் கழகங்களுக்கு, ஜி.ஓ.*75*, அந்தக் குறைகளை எல்லாம், அதிலேயுள்ள சந்துபொந்துகளைப் பயன்படுத்தி வெளிமாநிலங்களிலிருந்து பொருட்களை, உதிரிப் பாகங்களை, அதிக விலைக்கு—தரங்கெட்ட பொருட்களை—வாங்கிய காரணத்தினால்—*163* கோடி ரூபாயாக *1996*ஆம் ஆண்டிலிருந்த நிலை மாறி—*2000-2001*-லே *2,031* கோடியாக உயர்ந்தது. அது மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த காலத்தில்தான் என்பதை அவர்கள் நினைவிலே கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

*(முற்பகல் 11-40)*

அதுமட்டுமல்ல; தற்போதுகூட, பேருந்துக் கட்டணத்தை உயர்த்திய பிறகு இலாபம் வந்துவிட்டது, இலாபம் வந்துவிட்டது என்ற ஒரு தவறான தகவலை அரசுக்குத் தருகிறார். உண்மை நிலை என்னவென்றால், Transport Development Finance Corporation-க்கு மட்டுமே *1,024* கோடி ரூபாய்



2002 மார்ச் 14] [திரு. சி. பொன்னையன்]

தரவேண்டிய நிலையில் இருந்தது. உங்கள் ஆட்சிக் காலத்திலே நடந்த நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாக, வாங்கிய டீசல் போன்றவற்றிற்குத் தரவேண்டிய பணம் கிட்டத்தட்ட *342* கோடி ரூபாயை Indian Oil Corporation போன்ற அமைப்புகளுக்குக் கொடுக்காமல் பாக்கி வைத்துவிட்டுச் சென்றீர்கள். மீண்டும் டீசல் வாங்குவதற்கு வங்கிகளில் கடன் வாங்க வேண்டுமென்றால், வங்கிகள் கடன் தர மறுக்கின்ற ஒரு நிலையினை நீங்கள் உருவாக்கிச் சென்றுவிட்டீர்கள். தற்போது இன்னும் *1,024* கோடி ரூபாய் T.D.F.C.-க்குக் கடனாக இருக்கிறது. அதுமட்டுமல்ல; Outstanding liability என்ற முறையிலே, மேலும் *377* கோடி ரூபாய் இருக்கிறது. அந்த நிதிச் சீர்கேடு, நிதிச் சுமை, போக்குவரத்துக் கழகங்களை இன்னும் தத்தளிக்கின்ற நிலையிலேதான் வைத்திருக்கிறது இந்தக் கட்டண உயர்வுக்குப் பின்னாலும்கூட.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1995-96*-ல் ரொக்க இழப்பு *75* கோடி ரூபாய், மொத்த இழப்பு *207* கோடி ரூபாய். நாங்கள் ஆட்சியை அவர்களிடம் ஒப்படைக்கிறபோது இருந்த ரொக்க இழப்பு *80* கோடி ரூபாய்; மொத்த இழப்பு *233* கோடி ரூபாய். இந்தச் சூழலில்தான் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது. ரொக்க இழப்பு ஒரே நிலைமையில்தான் இருந்தது. கடன் வாங்கியதை எல்லாம் சுட்டிக்காட்டுகிறீர்கள், கடன் எல்லோரும் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இப்போதுகூட, உங்களுடைய கவர்னர் அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள், ஊராட்சிகளுக்குக் குடிநீர் வழங்குவதற்காக *3,200* கோடி ரூபாய் கடன் வாங்கப் போகிறோம் என்று. கடன் வாங்கியதைச் சேர்த்துத்தான் இதுபோன்ற இழப்புகள் எல்லாம் வருகின்றன. அவைகளெல்லாம் கணக்கிலே அடங்குகின்றன. அந்தக் கணக்குகளுக்குப் பிறகுதான் ரொக்க இழப்பு.

என்னுடைய வெளிப்படையான ஒரு கேள்வி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வெளிப்படையான ஒரு கேள்வி; போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்தியதற்குப் பிறகு, அதற்குப் பிறகு வருமானம் அதிகரித்திருக்கிறதா? இல்லையா? இலாபம் ஏற்பட்டு இருக்கிறதா? இல்லையா? இலாபம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே...

(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அதற்காகத்தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதைப் போக்குவரத்து மானியக் கோரிக்கையிலே பேசலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திற்கு நாளை நான் பதில் சொல்ல உள்ளேன். நாளை பதில் தருகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** நான் சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய கடமை. முதலமைச்சர் நாளைக்குப் பதில் சொன்னால் மிகவும் நன்றி. என்னுடைய வாதத்தைப் பொறுத்தவரையிலே.. (குறுக்கீடுகள்) இலாபம் ஈட்டுகிற............. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள். இன்னும் 3 மணித் துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** இலாபம் ஈட்டுகிற சூழ்நிலைக்கு இன்று போக்குவரத்துக் கழகங்கள் வந்தபிறகு, 'வெண்ணெய் திரண்டுவரும் வேளையில் தாழியை உடைத்ததைப் போல' இன்று இந்தப் போக்குவரத்துக் கழகங்களைத் தனியார்களுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கலாமா என்பதுதான் என்னுடைய கேள்வியே தவிர, வேறு ஒன்றும் அல்ல.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலாபம் ஈட்டக்கூடிய நிலைக்கு வந்துவிட்டது என்பது, மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கற்பனையான பேச்சு. நான் ஏற்கெனவே சொன்னேன்; கடன் சுமை ஏராளம் இருக்கிறது, 1024 கோடி ரூபாய் நீங்கள் உருவாக்கிவிட்ட கடன் சுமை, T.D.F.C.-க்கு இருக்கிறது. 377 கோடி ரூபாய் மேற்கொண்ட தொகையாக இருக்கிறது. உங்கள் ஆட்சிக் காலத்திலே ஒட்டுமொத்தம் 20 ஆயிரம் பேருந்துகளில் 6 ஆயிரம் பேருந்துகளை, ஓர்க்-ஷாப்பிலேயே அடிக்கடி விட்டுவிடக்கூடிய அளவுக்குப் பழுதடைந்த நிலையிலே விட்டுவிட்டுச் சென்றுவிட்டீர்கள். அந்த வழித்தடங்களில் எல்லாம் பேருந்துகள் சரிவர இல்லாத நிலை; மக்கள் தத்தளிக்கின்ற நிலை, அந்த நிலையை உருவாக்கிச் சென்றுவிட்டீர்கள். அந்த 6 ஆயிரம் பேருந்துகளை மீண்டும் சரிவரச் செயல்படும்படி விட வேண்டுமென்றால், பல கோடி ரூபாய் பணம் வேண்டும். அந்தப் பணமே இல்லாத நிலையில்தான் கட்டண உயர்வுக்குப் பின்னரும் போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள், வாயிலே வந்த தகவல்களையெல்லாம் சொல்லக்கூடாது. நேற்றைக்குக்கூட முன்னாள் முதலமைச்சர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் சொல்கிறபோது, போகிறபோது 800 வண்டிகள் நின்று கொண்டிருந்தன என்று சொன்னார்கள். இன்று 6 ஆயிரம்



*வண்டிகள் நின்று கொண்டிருக்கின்றன என்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னால், தவறான செய்திகளைச் சொல்லக்கூடாது. பேச வேண்டும் என்பதற்காக.... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றுக் கூறியது, முழுவதுமாகப் பழுதடைந்து பணிமனையில் நிறுத்தப்பட்ட வாகனங்கள்தான் 850. சரிவர ஓடமுடியாத நிலையில் 6 ஆயிரம் பேருந்துகள்; முழுமையாகப் பராமரிக்கப்படாத வாகனங்கள் 6 ஆயிரம் என்றுதான் நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அமைச்சர் சொல்லி முடித்து விடட்டும்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களுடைய நிர்வாகத் திறமையின் காரணத்தால், தற்போது ஓர் உண்மையினை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். பூந்தமல்லி பேருந்து டெப்போவில் மட்டுமே, மொத்தம் 144 வாகனங்களில், 72 வாகனங்கள் பழுதடைந்த நிலையில் இருந்தன. கியர் பாக்ஸ் இல்லை; கிளட்ச் பிளேட் இல்லை; டயர் பஞ்சர் ஆகிவிட்டது. அதை மாற்றுவதற்குக்கூடப் பணம் இல்லை. இந்த நிலையில்தான் போக்குவரத்துக் கழகங்களை நீங்கள் இந்த அரசிடம் ஒப்படைத்துச் சென்று இருக்கின்றீர்கள். உண்மை நிலை என்பது வேறு; நீங்கள் பேசுவதற்காகப் பேசுவது என்பது வேறு. இது தவறான அணுகுமுறை.

முற்பகல் 11.45

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்திலே பேருந்துகளை நிறுத்தி வைப்பதற்கு எந்த ஆட்சியிலே இருப்பவர்களும் அனுமதிக்கமாட்டார்கள். எப்படியாவது ஓட்டிக்கொண்டுதான் இருப்போம். இதெல்லாம் இந்த 10 மாதத்திலே நிறுத்தப்பட்ட வண்டிகளே தவிர, (கூச்சல்-குழப்பம்) அப்போது நிறுத்தப்பட்ட வண்டிகள் அல்ல. (கூச்சல்-குழப்பம்) மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய கருத்து. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது விவரங்கள் எல்லாம் என்னிடத்தில் இல்லையே*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 மார்ச் 14

தவிர, கடந்த ஆண்டு ஆட்சி அமைத்த உடனேயே துறைதோறும் நான் ஆய்வு நடத்தினேன். அப்போது தெரியவந்த உண்மை, கசப்பான உண்மை, முன்பு 1991 முதல் 1996 வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்தியாவிலேயே மிகச் சிறந்ததாக, முதன்மையானதாக விளங்கிய தமிழ்நாட்டின் போக்குவரத்துத் துறை, பின்னர் வந்த தி.மு.க. ஆட்சியில் அடியோடு சீரழிக்கப்பட்டு, பாழ்படுத்தப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குக் கடைசி இடத்திற்குத் தள்ளப்பட்டு இருக்கிறது என்பதுதான் உண்மை.

ஆகவே, சிறப்பாக, தலைசிறந்த ஒரு துறையாக விளங்கிக் கொண்டிருந்த ஒரு போக்குவரத்துத் துறையைச் சீரழித்துவிட்ட பொறுப்புக்கு ஆளாக்கப்பட வேண்டிய, சீரழித்துவிட்ட முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் கொஞ்சமும் அதற்காக வருத்தப்படாமல், உண்மையையும் ஒப்புக்கொள்ளாமல், இப்படி வார்த்தை ஜாலங்களை இங்கே காண்பிக்கிறார் என்று சொன்னால், இந்த வயிற்றெரிச்சலை எங்கே போய்ச் சொல்லிக்கொள்வது என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இவர் சொன்னது எல்லாம் உண்மைக்கு மாறானது என்பதை நாளை நான் ஆதாரங்களுடன் இந்த அவையில் நிரூபிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** 'இன்று போய் நாளை வா' என்று சொன்னதைப் போல, அவர்கள் நாளை போய் (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்) . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர் இன்று போய் நாளை வரவேண்டும். நான் அவருடைய சுய ரூபத்தை இங்கே தெரிவிக்கும்போது அவர் இந்த அவையில் இருந்து கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, கம்ப இராமாயணத்தில் 'இன்று போய் நாளை வா' என்பது ஒரு வீரத்தின் வெளிப்பாடே தவிர, அது கோழைத்தனத்தின் வெளிப்பாடு அல்ல.

**டாக்டர் க. பொன்முடி:** அதைத்தான் நானும் சொன்னேன். நான் தப்பாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) நானும் அதைத்தான் சொன்னேன். argument ஒரு கலாச்சாரத்தோடு விவாதிக்கக்கூட வாய்ப்பளிக்கவில்லை என்றால் என்ன அர்த்தம்? (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசுகிறபோது எடுத்துச்



2002 மார்ச் 14] [பேராசிரியர் க. அன்பழகன்]

சொன்ன கருத்துகள்—தேசிய உடைமையாக்கப்பட்ட பேருந்துகள் திரும்பவும் தனியாருடைமையாக மாறுகிற அந்த வாய்ப்பு தடுக்கப்பட வேண்டும் என்ற அந்தக் குறிக்கோளில் தொடங்கியது அந்தப் பேச்சு. அது ஒரு கொள்கை. அது நடைமுறையில் சாத்தியமா, அல்லவா என்பது அந்தந்த அரசு தீர்மானிக்க வேண்டியது; அவர்கள் பதில் சொல்ல வேண்டியது. பேருந்துகளின் இயக்கம், பேருந்துக் கழகங்களின் நடைமுறை, அவர்கள் வாங்கிய பொருட்கள் அல்லது பயன்படுத்திய பொருட்கள் அல்லது பழுதுபட்ட வண்டிகள்—அந்த விவரங்கள், அதிகாரிகள் தருகிற அந்தப் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டுதான் அந்தந்தக் காலத்தில் அமைச்சரவைக் கூட்டத்திலேயே பேசப்படுகிறது. ஆகவே அமைச்சர்களால் அமைச்சரவைக் கூட்டத்தில் அதிகாரிகள் சொன்ன அவர் பேசுவது, அவர் காலத்தில் அதிகாரிகள் சொன்ன புள்ளிவிவரங்களை வைத்து, அமைச்சரவைக் கூட்டத்திலே பேசப்பட்ட பேச்சை வைத்து, அதனுடைய தொடர்ச்சியாக நிர்வாகம் நடத்துகிற முறையிலே பேசுவதே தவிர, அவரே போய் ஆய்வு செய்து, எல்லா விவரங்களையும் தெரிந்து பேசக்கூடிய வாய்ப்பு இல்லை.

இரண்டாவது, ஒரு உண்மையை நான் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தந்தக் காலகட்டத்தில், அவ்வப்போது இருக்கிற அதிகாரிகள், அந்தந்த அமைச்சரிடத்தில் அவர்களுக்கு மன நிறைவு தரக்கூடிய செய்தியைத்தான் தருகிறார்கள் என்ற உண்மையை, அந்தத் துறையிலே உள்ள யாராக இருந்தாலும் அறிந்துகொள்ளலாம். இருந்தாலும், குறைபாடுகள் இருக்குமேயானால், அவை போக்கப்படுவதை நான் வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, 2 மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்; கொஞ்சம் பஸ்ஸிலிருந்து இறங்குங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** முடித்துவிடுகிறேன். இதோ வந்துவிட்டேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேண்டுகோள் எல்லாம், அதிலே பணியாற்றுகிற ஒன்றேகால் இலட்சம் தொழிலாளர்களும் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவார்கள் என்ற நிலைமையிலே, அவர்கள் எதிர்பார்த்து வாக்கு அளித்து இருந்தாலும், அவர்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும், அந்தப் போக்குவரத்துக் கழகங்கள் காப்பாற்றப்பட வேண்டும்; அதிலே பணியாற்றுகிற ஒன்றேகால் இலட்சம் தொழிலாளர்களுடைய குடும்பங்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற உணர்விலேதான் இந்தக் கருத்துகளை எடுத்து வைத்து இருக்கிறேன்.

முற்பகல் 11-50

மேலும், இங்கே பதில் அளிக்கிறபோது, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நீதிமன்றங்களினால் விடுதலை செய்யப்பட்டவர்களுக்கெல்லாம் பணி கொடுக்கப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். ஆனால், ஈரோடிலே 101 பேர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட பிறகும்கூட, அவர்களுக்கு இதுவரை பணி கொடுக்கப்படவில்லை. பிப்ரவரி 1 ஆம் தேதி 68 பேர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். 24 பேர், 30-1-2002-ல் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். விடுவிக்கப்பட்டவர்களுக்கு, விடுதலை செய்யப்பட்ட அந்தத் தொழிலாளர்களுக்கு உடனடியாகப் பணியினை வழங்குமாறு உங்கள் மூலமாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை அருள்கூர்ந்து நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாணவர்களுடைய பிரச்சினையைப் பொறுத்தவரையில், இன்று சட்டக் கல்லூரி மாணவர்கள் சாகிற அளவிற்கு உண்ணாவிரதம் இருந்து மருத்துவமனையிலே எல்லாம் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதனைச் சட்ட அமைச்சர் அவர்களும், அப்போது முதலமைச்சராக இருந்த முதலமைச்சர் அவர்களும் சென்று பார்த்து வாக்குறுதிகளையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். உங்கள்மீது இருந்த வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று சொன்னார்கள்; ஒரு கமிஷனும் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷனுக்கு நியமிக்கப்பட்ட நீதிபதி அவர்கள்கூட மறைந்துவிட்டார்கள். 3 மாதங்களிலே அந்த அறிக்கை தரப்படும் என்று சொல்லி, அந்த நீதிபதி மறைந்துவிட்ட காரணத்தால் அந்த அறிக்கை என்னவாயிற்று என்றும் தெரியவில்லை. ஆகவே, மாணவர்கள்மீது ஒரு நிரந்தரமான பகை உணர்வைக் காட்டாமல் அவர்களை நீங்கள்கூட அழைத்துப் பேசி . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள்மீது இந்த அரசுக்குப் பகைமை உணர்வு நிச்சயமாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் ஒரு தரப்பில் உள்ள உண்மையை மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார். மறு தரப்பில் என்ன நடந்தது என்பதை மறைக்கப் பார்க்கிறார். மாணவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்று திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். மாணவர்களே அரசுமீது வழக்குப் போட்டிருக்கிறார்கள். அது நீதிமன்றத்தில் இருக்கிறது. அந்த வழக்கு இன்னும் முடியவில்லை. அந்த



வழக்கு முடியும் வரை, அரசு தன்னிச்சையாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்; சட்ட ரீதியாகவே எடுக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைத்தால், அந்த மாணவர்களையே கூட, வழக்குப் போட்ட மாணவர்களைக்கூட அழைத்துவைத்துப் பேசி, அவர்கள் அந்த வழக்கினைத் திரும்பப் பெற்றுக்கொண்டால், அவர்களும் வழக்குகளைத் திரும்பப் பெறுவதிலே எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது. ஆகவே மாணவர்களின்மீது ஒரு நல்லெண்ணத்தோடு செயல்படுவதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்த நல்லெண்ணத்தை வெளிப்படுத்துகிற வகையிலே அந்த வழக்குப் போட்ட மாணவர்களைக்கூட அழைத்துப் பேசி, சட்டத் துறை அமைச்சரேகூட அழைத்துப் பேசி, அந்த வழக்குகளைத் திரும்பப் பெற்றால் அந்த மாணவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருக்கும். ஏனென்றால், அவர்கள் ஏழையெளிய மாணவர்கள். அவர்கள் இரண்டு, மூன்று நாட்களாகப் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அந்த உணர்வோடுதான் நான் இந்தக் கருத்தை எடுத்து வைத்திருக்கிறேன். மேலும் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** ஒரே நிமிடம். பக்கம் 38-ல் 'தொழில் பயிற்சி மையங்கள் ஒவ்வொரு மாவட்டந்தோறும் தொடங்கப்படும்' என்று இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிற I.T.I. என்று சொல்லப்படுகிற அந்தத் தொழில் பட்டய நிலையங்களுக்கும், இதற்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? அவைகளில்லாமல் நீங்கள் . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஐ.டி.ஐ.-களுக்கும், இந்தத் திட்டத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இந்தத்திட்டத்தின் நோக்கம் என்னவென்றால், ஏழையெளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இருக்க இடம், உண்ண உணவு, உடுத்த உடை எல்லாவற்றையும் கொடுத்து அவர்களுக்கு அடிப்படைக் கல்வியையும் புகட்டி, அதோடு அவர்களுக்குக் குறிப்பிட்ட ஒரு தொழிலில் பயிற்சியும் அளித்து, அவர்கள் அந்தப் பயிற்சியை முடித்து வெளியே

வரும்போது சுயமாகத் தொழில் தொடங்க தகுதி படைத்தவர்களாக அவர்களை உருவாக்குவதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** ஐ.டி.ஐ.-யே இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது அதிலேயே விரிவுபடுத்தும் திட்டமாக இதை அறிவித்தால் . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாணவர்கள் தங்க வைக்கப்படும் விடுதிகளுக்கு அருகில் ஐ.டி.ஐ. இருந்தால், அங்கேயே அவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யப்படும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில், நான் முன்பே சுட்டிக்காட்டியதைப்போல, சென்ற ஆண்டு ஆளுநர் உரையினுடைய ஒரு repetition-ஆக இது இருக்கிறது. இவைகளை, சொல்லியிருக்கிற திட்டங்களை நிறைவேற்றுகிற முயற்சிகளிலே இந்த அரசு ஈடுபடுகிறபோது, நாங்களும் அதற்கு உறுதுணையாக இருப்போம். 15 அம்சத் திட்டத்தோடு இன்னொரு திட்டத்தையும் சேர்த்து முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கலாம். இந்த 10 மாத ஆட்சியிலே ஆளுங்கட்சியிலே இருக்கின்ற 132 பேர்களில் 42 பேர் அமைச்சர்களாகி இருக்கிறார்கள். இன்னும் விரைவிலேயே மற்றவர்களும் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. தி.மு.கழகத்தில் உள்ளவர்களே வருத்தத்துடன் பேசிக்கொள்கிறார்கள். தி.மு.க.வில் ஒரு முறை அமைச்சரானால் சாகும் வரை அவர்கள்தான் அமைச்சர்கள் என்று பேசிக்கொள்கிறார்கள். அப்படி ஒரு நிலை இல்லாமல் இங்கே புதியவர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதால்தான் இந்த இயக்கம் வளருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

முற்பகல் 11-55

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் நன்றி சொல்ல வருகிறேன். (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.கழகத்தில் அமைச்சரானால், சாகும் வரையில் அவர்கள்தான் அமைச்சர்கள் என்பதை இயற்கையே அனுமதிக்கவில்லை. ஏனென்றால், ஏற்கெனவே ஆளுங்கட்சியாக இருந்து, இப்போது எதிர்க்கட்சியாக





இருக்கிறபோது அமைச்சரில்லை; துரைமுருகன்கூட நேற்றையதினம் குறிப்பிடுகிறபோது சொல்லப்பட்டது. ஆகவே, சாகும் வரையில் என்பது, எங்கேயும் நடைமுறையிலே சாத்தியப்படாத ஒன்று. அமைச்சர்களை மாற்றி, மாற்றித் தருவது என்பது எங்களுடைய கட்சியினுடைய தேவை என்று முதலமைச்சர் கருதுவார்களேயானால் அதிலே குறுக்கிடுவதற்கு எங்களுக்கு உரிமை இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாகும் வரை அமைச்சர் என்றால், எப்போதெல்லாம் அந்த இயக்கம் ஆட்சிக்கு வருகிறதோ அப்போதெல்லாம் அதே நபர்கள்தான் மீண்டும், மீண்டும் அமைச்சர்கள் ஆக்கப்படுகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று மன வேதனையுடன் தி.மு.கழகத்தில் உள்ளவர்களே குறிப்பிடுகிறார்கள். மாறாக, இங்கு ஓர் ஆரோக்கியமான சூழ்நிலை இருக்கிறது. இளைஞர்களுக்கு, புதியவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. முன்னேற வாய்ப்பு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இந்த இயக்கம் வளர்பிறையாகவே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான், முகமது பின் துக்ளக் படத்திலே பார்த்த அந்தச் சூழ்நிலை தொடர்ந்து வருகின்ற காரணத்தினாலேதான், அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய, எங்கோ ஒரு மூலையில் பிறந்து, முகவரி இல்லாமல் இருந்த எனக்கு, இந்த அரிய வாய்ப்பினை உருவாக்கித் தந்த, நான் வணங்குகிற தெய்வம், எங்கள் இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என்னுடைய கருத்துகளை இங்கே சொல்ல விழைகிறேன்.

இங்கே வழங்கப்பட்டிருக்கிற ஆளுநர் உரை, உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதற்காகவும், பசியைப் போக்க வேண்டும் என்பதற்காகவும், ஏழ்மையை விரட்ட வேண்டும் என்பதற்காகவும், அறியாமையை அகற்ற வேண்டும் என்கின்ற அளவிலும் சிறப்பான முறையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆளுநர் உரை, வரப்போகிற நிதிநிலை அறிக்கைக்கு ஒரு முன்னுரையாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆளுநர்

உரை, அரசின் கருவூலம் காலியாக இருந்தாலும், நலிவுற்றுக் கிடக்கும் சமுதாயத்திற்கு சக்தியைக் கொடுக்கின்ற ஓர் அருமருந்தாக அமைந்திருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆளுநர் உரை, அரசின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், திட்டங்களையும் எடுத்துச் சொல்லியிருக்கிற உரையாக அமைந்திருக்கிறது. அந்த வகையிலே, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் கொள்கைகளும், கோட்பாடுகளும், திட்டங்களும் இந்த ஆளுநர் உரையிலே காணப்படுகின்றன. இங்கே சில பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசினார்கள். இந்த ஆளுநர் உரையிலே, அது இல்லை, இது இல்லை என்றும், தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதிகள் இல்லை என்றெல்லாம் பேசினார்கள். ஒரு முறை பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்தச் சட்டமன்றத்திலே பேசுகிறபோது, 'ஆளுநர் உரை என்பது, இந்த அரசு செய்ய வேண்டிய எல்லாத் திட்டங்களையும் வெளியிடுகிற ஒரு பெரிய அறிக்கை அல்ல, கோடிட்டுக் காட்டுகிற அறிக்கை' என்று 1967 ஆம் ஆண்டில் இதே மாமன்றத்தில் ஆளுநர் உரைக்கு ஒரு விளக்கத்தினை அளித்திருக்கிறார்கள்.

ஆளுநர் உரையிலே ஒரு குறிப்பிட்ட விஷயங்கள்தான் இருக்கும். மற்ற விஷயங்களை யூகித்துக்கொள்ள வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலேதான் இந்த ஆளுநர் உரை சிறப்பான முறையிலே அமையப் பெற்றிருக்கிறது.

நண்பகல் 12.00

தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்கிறபோது அரசின் கருவூலம் காலியாக இருந்தது. கடன் வைத்திருக்கிற கருவூலமாக இருந்தது. இதைத்தான் அண்ணா அவர்கள் குறிப்பிடுகிறபோது, 'சட்டியில் சுரண்டி, சுரண்டிப் பார்த்தாலும் மாவு இல்லை' என்றார். எத்தனை கடன் இருக்கிற சட்டி என்று பேரறிஞர் அண்ணா அவாகள் ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோன்றுதான் முந்தைய ஆட்சியினர் ஆட்சியை விட்டு அகன்றபோது, கருவூலத்தைக் காலியாக வைத்துவிட்டுச் சென்றார்கள். சில பேர் கேட்டார்கள், இது செய்யவில்லை, அது செய்யவில்லை என்று கேட்டார்கள். முன்னாலே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களும் கேட்டார்கள், 10 மாத காலத்திலே என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். ஆனால், இதைக் கேட்க முழு உரிமை



பெற்றவர்கள், எங்களை இங்கே ஆளும் கட்சித் தரப்பிலே அனுப்பி வைத்திருக்கிற பொது மக்கள்தான். ஆனால், நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். பொது மக்கள் உங்களை இன்றைக்கு எதிர்த் தரப்பிலே அமர வைத்து இருக்கிறார்கள். நாங்கள் பரிதாபப்படுகிறோம். நீங்கள் ஏன், எதற்காகப் பேசுகிறீர்கள் என்று சொன்னால், இந்த எதிர்க்கட்சியிலே அமர்ந்திருக்கிற இடம்கூடக் காணாமல் போய்விடும் என்று அஞ்சித்தான் இப்படி இன்றைக்கு நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை எங்களாலே உணர முடிகிறது.

தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் படிப்படியாக, முறையாக, உரிய காலத்தில், உரிய அளவிற்குத் திட்டங்களை நிறைவேற்றுவார்கள் என்பதனை இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சிகளுக்குத்தான் பல சோதனைகள் வருவதுண்டு. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும் சரி, ஆளும் தரப்பிலே இருந்தாலும் சரி, எவ்வளவோ இன்னல்களைச் சமாளித்து, இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டமே பாராட்டுகின்ற வகையிலே மாபெரும் வெற்றியினைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். தமிழக முதல்வராக அமருவதைத் பொறுக்க முடியாத சில பேர்கள் சதித்திட்டங்கள், சதி வலைகள் பின்னினார்கள். ஆனால், அந்தச் சதிவலைகளெல்லாம் இன்றைக்குத் தூள், தூளாக்கப்பட்டு இருக்கின்றன. உங்கள் பாணியிலே சொல்ல வேண்டுமானால், 'காகித ஓடம், கடல் அலைமீது போவது போல' உங்களுடைய சதித்திட்டங்களெல்லாம் சுக்குநூறாகிப் போனதை இந்த நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

எதிர்க் கட்சியாக இருந்தபோது எந்த அளவிற்கு ஆதாரமற்ற, கற்பனை வழக்குகளையெல்லாம் நீங்கள் போட்டீர்கள் என்பதை இந்த நாடு நன்கறியும். அப்படிப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது வழக்குகளைப் போடுகிறபோது, 'ஐயோ' என்கிற அலறல் சத்தம் எப்பொழுதாவது கேட்டதுண்டா என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கறிவார்கள். நீதிமன்றத்திலே நிரபராதி என்று நிருபித்துக் காட்டுவேன் என்று சூளுரைத்தார்கள். அதுதான் நீதிமன்றத் தீர்ப்பாக வந்தது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். நீதிமன்றத் தீர்ப்பிலே, 'புரட்சித் தலைவி அவர்கள் மீது காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த வழக்குகள் புனையப்பட்டிருக்கின்றன, இந்த வழக்குகளிலே எவ்வித முகாந்திர ஆதாரமும் இல்லை' என்று வந்ததை இந்த நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

பிற்பகல் 12-05

10 மாதங்களுக்கு முன்பு பொதுத் தேர்தல் நடைபெற்றபோது, இரண்டு அரசுகளின் பலத்தையும், பத்திரிகை பலத்தையும், பண பலத்தையும் வைத்துக்கொண்டு மீண்டும் ஆட்சிக்கு வரலாம் என்று மனப்பால் குடித்தார்கள். இருந்தாலும், இந்த நாட்டு மக்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் அரியணையிலே அமர்த்தினார்கள். இதனை அங்கீகரிக்கிற வகையிலே பொது தேர்தலிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அயராது பாடுபட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அரியணையிலே அமர்த்தினார்கள். இந்த வெற்றியை அங்கீகரிக்கிற வகையிலே, உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெற்றபோதுகூட மகத்தான வெற்றி ஆளும் கட்சிக்குக் கிடைத்தது. அமோக வெற்றி கிடைத்தது. கடந்த இடைத்தேர்தல் நடைபெற்றபோதுகூட மகத்தான வெற்றியைத் தமிழக மக்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அளித்தார்கள். பொதுத் தேர்தல் நடைபெற்றபோது, எங்களோடு கூட்டணிக் கட்சிகள் இருந்தபோது, ஆண்டிப்பட்டியிலே எங்களுக்குக் கிடைத்த வாக்குகள் 60,839. பிரதான எதிர்க்கட்சிக்குக் கிடைத்தவை 35,861. இடைத் தேர்தலிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குக் கிடைத்த வாக்குகள் 78,437. பிரதான எதிர்க்கட்சிக்குக் கிடைத்தவை 37,236 வாக்குகள். இதிலிருந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய செல்வாக்கு எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நாடு நன்கு அறியும். தோழமைக் கட்சிகளுக்கு நான் தெரிவிக்கிற கருத்து, யாரோடு கூட்டு இருந்தால் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாக அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லியாக வேண்டும்.

மேதகு ஆளுநர் உரையிலே தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 2 ஆம் தேதி அன்றைக்கு தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்கிறார்கள். அன்றைக்குப் பத்திரிகையாளர்களைச் சந்திக்கின்றபோது, தமிழகத்தை இந்தியத் துணைக் கண்டத்திலே முதன்மை மாநிலமாக, எல்லாத் துறைகளிலேயும் முதன்மை மாநிலமாக உருவாக்கித் தீருவேன் என்று சூளுரைத்தார்கள். இதனை நிரூபிக்கிற வகையிலே, ஒரு வார காலத்திற்குள்ளாகவே ஆளுநர் உரையிலே 15 அம்சத் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருப்பது போற்றக்கூடிய ஒன்றாகும். அரசு எவ்வளவு முனைப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு நற்சான்றாகும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லியாக வேண்டும். இந்த 15 அம்சத் திட்டங்களிலே, தொடர் பசுமைப் புரட்சி, அனைவருக்கும் உணவு, கால்நடைப் பாதுகாப்பு, நீர்வளப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, அனைவருக்கும் வேலைவாய்ப்பு, உறைவிடப் பாதுகாப்பு, வாழ்க்கைக்கு ஆதாரமான வளங்களைப் பாதுகாத்தல், இப்படிச் சிறப்பான திட்டங்களை எல்லாம் சேர்த்திருப்பது பொது மக்களிடத்திலே இன்றைக்கு மகத்தான வரவேற்பினைப் பெற்றிருக்கிறது. ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், நாட்டு மக்களிடையே பாராட்டுதலைப் பெறவேண்டுமானால், ஓர் அரசு சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்களை உருவாக்க வேண்டும். இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்களை, இந்தியத் துணைக் கண்டமே போற்றுகிற அளவிற்கு சிறப்பாக, முனைப்போடு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. வேளாண்மை உற்பத்தி; உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டும் என்கிற அளவிலே திட்டங்கள்; ஊரகப் பகுதிகளுக்குக் குடிநீர் மற்றும் துப்புரவு வசதிகளை அளிப்பதற்காக ரூபாய் 2300 கோடி மதிப்பீட்டிலே புதிய திட்டம் செயல்பட இருப்பதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. 2006 மார்ச் திங்களுக்குள் எந்த ஒரு குடும்பமும் வறுமைக் கோட்டின் கீழே இல்லை என்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்கின்ற அளவிலே சிறப்பான திட்டங்கள். வேளாண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க அரசு எடுக்கும் முயற்சியினை இந்த நேரத்திலே மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





பிற்பகல் 12-10

தரிசு நிலங்களை மேம்பாடு செய்ய வேண்டும் என்பதற்காக, அனைத்து மாவட்டங்களிலும் இந்தச் சிறப்பான திட்டத்தை விஸ்தரிப்பேன் என்று நேற்றையதினம்கூட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டி இருப்பதை நினைக்கின்றபோது, வேளாண் தொழிலை நம்பி இருக்கிற ஏழையெளியவர்கள் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். 500-க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் அனைத்திற்கும் 2 ஆண்டுகளுக்குள்ளாக இணைப்புச் சாலைகள் அமைக்க வேண்டும் என்கின்ற ஒரு சிறப்பான திட்டத்தை இந்த அரசு செயல்படுத்த இருப்பதை உள்ளபடியே கிராமப்புறத்திலே இருக்கிற சாதாரண மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். சுய வேலைவாய்ப்பு அளிக்க ஒவ்வொரு ஒன்றியத்திலும் வேளாண் தொழிற் பிரிவு அமைக்க முயன்றிருப்பது உள்ளபடியே வரவேற்கக்கூடிய ஒன்றாகும். வறுமையை ஒழிப்பதற்காக, இம்மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதிக்கு

[திரு. பி.எம். நரசிம்மன்] [2002 மார்ச் 14

ஊக்கமளிக்கும் வகையில் மாவட்ட அளவிலே ஏற்றுமதி வழிகாட்டிப் பிரிவுகள் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்திருப்பதை உள்ளபடியே இந்த நாட்டு மக்கள், ஏழையெளியவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள், ஐரோப்பிய நாடுகளில் தொழிலும், வணிகமும் வளர்ந்திருந்தாலும் வேளாண்மைத் தொழில் வளராமல் இருக்கிறது. எனவே, அந்த வகையிலே தமிழகத்தில் வேளாண்மைத் தொழிலை வளர்க்க வேண்டும் என்பதற்காகப் பல அரிய திட்டங்களை எல்லாம் மானியம் கொடுத்தாவது இந்த வேளாண்மைத் தொழிலை வளர்க்க வேண்டும் என்கின்ற புதிய திட்டங்களை எல்லாம் இந்த அரசு கொண்டு வரவிருப்பதை உள்ளபடியே கிராமப்புறத்து மக்கள் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

போக்குவரத்துத் துறையிலே, தெரிந்தெடுக்கப்பட்ட சில வழித்தடங்களைப் படிப்படியாகத் தனியார்மயம் ஆக்க வேண்டும் என்கின்ற ஒரு சிறப்பான திட்டம் எல்லோராலும் பாராட்டப்படுகிறது. ஒரு சில தினங்களுக்கு முன்புகூட, தனியார் துறையிலே இருக்கிற பேருந்துகள் சிறப்பான முறையிலே பொது மக்களுக்குச் சேவை செய்தன என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். அந்த நிகழ்ச்சியினைப் பத்திரிகைகள்கூடப் பாராட்டின. எனவே, போக்குவரத்துத் துறையிலே தெரிந்தெடுக்கப்பட்ட வழித்தடங்கள் தனியார்மயம் ஆக்கப்படுவது என்பது ஒரு சிறந்த அணுகுமுறையாகும் என்பதை இந்த நேரத்திலே நான் வலியுறுத்திச் சொல்லியாக வேண்டும்.

அதேபோன்று, 2003-க்குள் 14 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் கல்வி என்கின்ற ஒரு சிறப்பான திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அதேபோன்று, வறுமைக்கோட்டிற்குக்கீழே உள்ள குடும்பங்களுக்கு, அதிலே இருக்கும் பிள்ளைகளுக்கு, சிறார்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலேயும் முழு நேரப் பயிற்சிப் பள்ளிகள் ஏற்படுத்த இந்த அரசு முனைந்திருப்பது உள்ளபடியே வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

தெரிந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் எல்லாம் அன்னதானம் வழங்குகிற ஒரு திட்டம் சிறப்பான திட்டமாகும். 'தானங்களிலே சிறந்தது அன்னதானம்' என்று சொல்வதுண்டு. அந்தச் சிறப்பான அன்னதானத் திட்டத்தை, தெரிந்தெடுக்கப்பட்ட சில கோயில்களிலே இந்த அரசு கொண்டு வருகிறபோது எல்லோரும் பாராட்ட இருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்திற்கே இது ஓர் எடுத்துக்காட்டான திட்டமாக அமையப்



2002 மார்ச் 14] [திரு. பி.எம். நரசிம்மன்]

போகிறது என்பதை இந்த நேரத்திலே நான் வலியுறுத்திச் சொல்லியாக வேண்டும்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி.ஆர். சுந்தரம் தலைமை)*

அதேபோன்று, அடித்தளத்திலே இருக்கின்ற மக்கள், ஆதிதிராவிட மக்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், இவர்கள் ஏற்றம் பெறுகிற வகையிலே புதிய பல்கலைக்கழகம் ஒன்று வேலூரிலே அமையப் போகிறது என்கிற செய்தி உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒரு செய்தியாகும். ஆதிதிராவிட மக்கள், அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இந்த அரசு போராடி வருகிறது என்பதை நினைக்கின்றபோது, உள்ளபடியே அடித்தளத்திலே இருக்கிற மக்கள் இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நாட்டிற்கு உழைப்பவராக, ஏழையெளியவருடைய உரிமைகளைக் காப்பவராக இருந்து கொண்டு சிறப்பான திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

*பிற்பகல் 12-15*

வழக்குகளை விரைவாக முடிக்க வேண்டும் என்பதற்காக, *49* இடங்களிலே விரைவு நீதிமன்றங்களை இந்த அரசு இன்றைக்குத் திறந்திருப்பதற்குப் பொது மக்களிடத்திலேயும், வழக்கறிஞர்களிடத்திலேயும் ஒரு பெரிய வரவேற்பு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லியாக வேண்டும். அப்படி பார்க்கிறபோது, திருத்தணியிலே ஒரு சார்பு நீதிமன்றம் வேண்டுமென்று பல ஆண்டுகளாக, அங்கேயிருக்கின்ற பொது மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டிலேயே ஒரு சார்பு நீதிமன்றத்தை திருத்தணி பேரூராட்சியில் நிறுவ வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் அவர்கள் ஒரு போராட்டம் அறிவிக்கிறார் என்று சொன்னால், தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமைக்காக அது இருக்கும். ஏழையெளியவர்களுடைய உரிமைக்காகக் குரல் கொடுப்பார்கள். உதாரணத்திற்கு, காவிரி நதி நீருக்காக உண்ணாவிரதத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டார்கள். ஆனால், இன்றைக்கு நிலைமைகள் என்ன? தேவையற்றதற்காக, மலிவான விளம்பரத்தைப் பெறுவதற்காக உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள் என்று இந்த நாட்டு மக்கள் எள்ளிநகையாடுகிறார்கள்.

[திரு. பி.எம். நரசிம்மன்] [2002 மார்ச் 14

ஒரு சம்பவத்தைக் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், காவல் துறையில் புகார் கொடுக்க வேண்டும். அந்தக் காவல் துறை அலுவலர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், மேலதிகாரிக்கு மேல்முறையீடு கொடுக்க வேண்டும். அப்படியல்லாமல், புகார் கொடுத்த உடனேயே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற கட்சி ஆளும் கட்சியாக இருந்தபோது, பொது மக்கள் கொடுக்கிற ஒவ்வொரு புகார்மீதும் உடனடியாக நடவடிக்கைகளை எடுத்தார்களா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.' எல்லோருக்கும் சமமான நீதி, அதாவது உங்களுக்கு ஒரு நீதி, மற்றவர்களுக்கு ஒரு நீதி கூடாது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, கருத்திருமன் இந்தச் சட்டமன்றத்திலே தெரிவிக்கிறபோது, 'எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சிக்கு அனுசரணையாக, நல்ல திட்டங்கள் நடைபெறுகிறபோது ஒத்துழைப்பினை நல்க வேண்டும்' என்ற ஓர் அரிய கருத்தினை இந்த மாமன்றத்திலே சொல்லியிருக்கின்றார்கள். அதற்கேற்றாற்போன்று இங்கேயிருக்கின்ற பிரதான எதிர்க்கட்சிகளும் செயல்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்பானது இந்த ஆளுநர் உரை. செம்மையான திட்டங்களையும், சீரான திட்டங்களையும் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே இன்றைக்கு இந்த அரசு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. இந்த நல்ல திட்டங்களை எல்லாம் கொண்ட இந்த ஆளுநர் உரை நிதிநிலை அறிக்கையினுடைய ஒரு முன்னுரையாக இன்றைக்கு விளங்கியிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, ஆளுநர் உரையை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர். (திரு. பி.ஆர். சுந்தரம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே மேதகு ஆளுநர் அவர்கள் வாசித்த உரையின்மீது என்னுடைய அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு என்னுடைய உள்ளப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்து, இன்றைக்கு இந்த ஆளுநர் உரையில் தமிழக மக்களுடைய மேம்பாட்டிற்காக, தமிழகத்திலேயிருக்கின்ற நலிந்த பிரிவு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பல்வேறு நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது.



2002 மார்ச் 14] [திரு. லா. சந்தானம்]

அப்படிப்பட்ட இந்த ஆளுநர் உரையிலே 2001-லே ஏற்பட்ட கொந்தளிப்பான நிலைகளையெல்லாம் தாண்டி மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கின்ற முதலமைச்சர் அவர்களை வாழ்த்துகிறேன் என்கின்ற நிலை இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டு இருப்பதை எல்லாம் இங்கு சுட்டிக்காட்டி, தமிழகத்திலே எத்தனையோ கொந்தளிப்புகள் எல்லாம் நடந்திருக்கின்றன என்பதையெல்லாம் இந்த அவையிலே பேசினார்கள்.

பிற்பகல் 12-20

உண்மையிலேயே பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் இந்த மண்ணிலே நடந்ததாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்ற காவியமாகிய கம்ப இராமாயணம் இந்த ஓர் ஆண்டுக்குள்ளாக நடந்தேறியிருக்கிறது என்கின்ற உண்மைதான் நமக்குத் தெரிகிறது. அன்றைக்குக் கூனியினுடைய சூழ்ச்சியின் காரணமாக ஒரு போர்க்களத்திலே கைகேயி தசரத மன்னனிடம் பெற்றிருந்த வரத்தினைப் பயன்படுத்திக் கொண்டு, ஆளப் பிறந்த இராமன் காடாள வேண்டும், தன்னுடைய புதல்வன் பரதன் நாடாள வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அதாவது,

"ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீ போய்த்
தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணிய நதிக ளாடி
யேழிரண் டாண்டின் வாவென் றேவி னரச னென்றாள்"

என்று சொன்னானே, அந்தக் கம்பநாடன். அதுபோல, கடந்த தேர்தலிலே தமிழகத்து மக்கள் 2001-லே ஒரு ஆட்சி மாற்றம் வேண்டுமென்கின்ற நோக்கத்தோடும், அந்த ஆட்சி மாற்றமும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலே ஒரு அமைச்சரவை அமைகின்ற ஆட்சி மாற்றமாக இருக்க வேண்டும் என்கின்ற ஒரு நோக்கத்தோடும், அதோடுகூட அதனுடைய தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள்தான் இந்த ஆட்சிக்குத் தலைமை தாங்க வேண்டும் என்கின்ற வகையிலும் . ஒரு தீர்ப்பினை மக்கள் வழங்கியிருந்த நேரத்திலே, அந்த மக்களுடைய எண்ணங்களுக்கு எல்லாம் மாறாக, அந்த மக்கள் மனம் எல்லாம் புண்படுகின்ற அளவிலே, அநத மக்களுடைய மனம் எல்லாம் கொந்தளிக்கின்ற வகையிலே. அன்றைக்கு எப்படி இந்த நாட்டை ஆளுகின்ற பொறுப்பிலிருந்து இராமன் வெளியே செல்கின்றபோது அயோத்தியிலிருந்த மக்கள் என்ன நிலையை அடைந்தார்களோ, அந்த அளவுக்கு இருந்தது. அந்த வரத்தைக் கொடுத்த

அவனுடைய தந்தை என்ன நிலையை அடைந்தார் என்ற நிலையை வர்ணிக்கும்போது, கம்பன்—

"கண்ணிலான் பெற்றிழந்தான் எனவுளந்தான் கடுந்துயரம் காலவேளாண்" என்று சொன்னான். கண் இல்லாத ஒருவன் கண்ணைப் பெற்று, இந்த உலகில் இருக்கின்ற நல்ல காட்சிகளை எல்லாம் கண்டு மகிழ்கின்ற ஒரு நேரத்தில், திரும்பவும் அந்தக் கண்ணை இழந்தால் எப்படித் துயரத்தை அனுபவிப்பானோ, அந்தத் துயரத்தைத்தான் அன்றைக்கு அயோத்தியிலே வாழ்ந்த மக்கள் அனுபவித்தார்கள் என்று குறிப்பிட்டதுபோல, ஒரு நல்லாட்சி நடத்துகின்ற தலைவியைப் பெற்றிருக்கிறோம் என்கின்ற மனநிறைவோடு இருந்த தமிழக மக்கள் எல்லாம், பெற்ற கண்ணை இழந்துவிட்டோமோ என்று எண்ணுகிற அளவுக்கு அவர் ஆட்சிப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்ட அந்தச் செய்தி இந்தத் தமிழகத்து மக்களுடைய மனதிலே ஒரு கொந்தளிப்பாக நீங்காத நிலையில் இருந்தது. அந்த நிலை ஆண்டிப்பட்டி மக்களின் மூலமாக மாற்றப்பட்டிருக்கிறது. ஜனநாயகம் காப்பாற்றப்பட்டிருக்கிறது. தமிழக மக்களுடைய எண்ணம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்த மக்கள் தங்களுடைய கொந்தளிப்பான நிலையிலிருந்து இந்தத் தேர்தலின் மூலமாக விடுபட்டிருக்கிறார்கள். அன்றைக்கு அந்த ஆட்சிப் பொறுப்பை பரதன் அவர்கள் நிறைவாக ஏற்று நடத்தவேண்டுமென்று நினைக்கவில்லை, தாய் செய்த, அந்தக் கூனி செய்த அந்த சூழ்ச்சியின் காரணமாக அந்த ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டாலும்கூட, தம்பி பரதன் அவர்கள் அண்ணனுடைய ஆணையை ஏற்று நடத்தினார்கள். நேற்றுக்கூட இங்கு ஒரு விவாதம் நடந்தது. இராமனுடைய பாதரட்சைகளை எடுத்து வந்து சிம்மாசனத்திலே வைத்து நிறைவாக தன்னுடைய ஆட்சியை 14 ஆண்டு காலம் பரதன் நடத்தினான் என்கின்ற சூழ்நிலை இங்கே பேசப்பட்டது. அதேபோல்தான், ஆட்சிக்கு உரியவர் புரட்சித் தலைவிதான் என்பதை என்றைக்கும் பரதனாக இருந்த, இன்றைக்கு மாண்புமிகு அமைச்சராக இருக்கிற பன்னீர்செல்வம் அவர்கள் பத்திரிகையாளர்கள் கேட்கின்ற நேரத்திலேயெல்லாம் குறிப்பிட்டார்கள். ஆட்சிக்கு உரியவர், ஆட்சியினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்கக்கூடியவர் புரட்சித் தலைவி அவர்கள்தான். அதை நான் என்றைக்கும் மறக்கவில்லை, மாறவும் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அதுபோலத்தான் நிச்சயமாக பரதன் எப்படி பதினான்கு ஆண்டுகள் முடிந்து இராமன் வரவில்லை என்றால் நான் தீக்குளிப்பேன் என்ற





நிலைக்குக்கூடச் சென்றானோ, அப்படித்தான் ஆண்டிப்பட்டியிலே இந்த நல்ல தீர்ப்புக் கிடைக்கவில்லை என்றால், இந்த உத்தமத் தம்பி பரதனும் செய்திருப்பான் என்கின்ற அளவிற்கு அவருடைய நடைமுறைகள் கடந்த ஐந்து மாத காலங்களிலே இருந்தன.

பிற்பகல் 12-25

பத்திரிகையாளர்கள் எல்லாம் கேட்டார்கள். இன்றைக்குத் தேர்தல் வந்துவிட்டதே, புரட்சித் தலைவி அவர்கள் ஜெயித்து முதலமைச்சராக வர இருக்கிறாரே, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று சொல்கின்ற நேரத்திலே, புன்முறுவலோடு, இதேபோல் என்றைக்கும் நண்பனாக உங்களிடத்திலே இருப்பேன் என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு இந்த இராமாயணக் காவியம் தமிழகத்திலே நடந்து முடிந்து, இன்றைக்கு தமிழக மக்கள் ஒரு நிறைவான நிலையைப் பெற்றிருக்கிறார்கள். அந்தக் காப்பியம் முடிவடைந்திருக்கிறது. இந்தக் காப்பியத்தை எல்லாம் எழுதுவதற்கு மீண்டும் ஒரு கம்பன் பிறக்க வேண்டும் என்கின்ற நிலையிலேதான் இன்றைக்கு தமிழக மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்கதோர் இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் அந்த இயக்கத்தின் தலைவராக, முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்கு நான் என்னுடைய உள்ளப்பூர்வமான வாழ்த்துக்களை அவருக்குத் தெரிவித்து, வருகின்ற காலத்திலே அவர்களுடைய சீரிய ஆட்சியிலே இந்தத் தமிழகம், அவர்கள் கூறியதுபோல ஒரு முதன்மை மாநிலமாக ஆக்கப்பட வேண்டும் என்கின்ற நல்லெண்ணத்தையும் வாழ்த்தாக அவர்களுக்குக் கூறிக் கொள்கிறேன். இந்த உரையிலே பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அவர்கள் கொடுத்திருக்கின்ற இந்த 15 அம்சத் திட்டங்கள் — வறுமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக— ஒரு நாட்டிலே வறுமை என்பதுதான் கொடுமையான ஒன்று. பாரதி குறிப்பிட்டான், "தனியொருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று சொன்னான். அதுபோல வள்ளுவன் குறிப்பிடுகின்றபோது,

"நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்."

என்று சொன்னான். வறுமை என்கின்ற ஒரு துன்பத்திற்குள்ளாக அத்தனை துன்பங்களும் சென்று சேரும் என்பதுபோல, மனிதனுக்கு அடிப்படையாக இருப்பது வறுமைதான். அந்த வறுமை ஒழிக்கப்படுமேயானால் அத்தனையும் நிறைவாக அந்த மக்களுக்குக் கிடைத்துவிடும் என்பதுதான் பொருள்.

[திரு. லா. சந்தானம்] [2002 மார்ச் 14

இங்கு வருகை தந்திருக்கின்ற நேரத்தில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன்கூடச் சொல்கின்றபோது, ஆந்திர மாநிலத்திலே பேசுகின்றபோது, 'இன்றைக்கு உலகம் விஞ்ஞான ரீதியாகவும், எல்லா ரீதியிலேயும் வளர்ந்திருந்தாலும்கூட, இந்திய நாட்டைப் பொறுத்தளவிலே முழுமையாக வறுமை ஒழிக்கப்படவில்லை. அந்த வறுமை என்று ஒழிகிறதோ, அப்போதுதான் நாம் பெற்றிருக்கிற இந்த விஞ்ஞான வளர்ச்சிகளுக்கு எல்லாம் பொருள்' என்று குறிப்பிட்டுச் சென்றார்கள். அதையெல்லாம் கருத்தில் கொண்டு புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்திலே வறுமையற்ற ஒரு சமுதாயத்தைப் படைக்க வேண்டும், அதற்குரிய காரியங்களையெல்லாம் நாம் இந்த நான்கு ஆண்டுகளிலே முடித்து, 2006ஆவது ஆண்டிலே தமிழகத்திலே வறுமை இல்லை என்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற இந்த நிலையை இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நிறைவு செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அவர்களுடைய எண்ணம் நிச்சயமாக நிறைவு பெறும். அவர்களுடைய அயராத உழைப்பினாலும், அவர்களுடைய நல்ல சிந்தனையாலும், மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தாலும் நிச்சயம் நிறைவு பெறும். இரண்டு நாட்களுக்கு முன்னாலேகூட நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு குறளை முன்வைத்தார்கள்:

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

என்று சொன்னார்கள். அதுபோல, "இந்தக் குடிமக்களை, தமிழக மக்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவேன்; கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள், நலிந்த பிரிவு மக்கள், தொழிலாளத் தோழர்கள், மகளிர் இவர்கள் அத்தனை பேரும் மேம்படுவதற்காக நான் இந்த அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தி இந்தத் தமிழகத்தை முதல் மாநிலமாகக் கொண்டு வருவேன்" என்கின்ற அந்தச் சீரிய எண்ணத்திற்கு இந்த நாட்டுத் தெய்வங்கள் எல்லாம் முன்னின்று வழி நடத்தும் என்பதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இந்த நாட்டினுடைய வறுமை ஒழிந்துவிட்டால் அத்தனையும் ஒழிந்துவிடும் என்கின்ற ரீதியிலேதான், இன்றைக்கு விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்கின்ற காவிரிப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, பெரியாறு அணையினுடைய நீர் மட்டத்தை உயர்த்துகின்ற பிரச்சினையாக இருந்தாலும் சரி, சென்னை நகர வாசிகளின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உண்டான



2002 மார்ச் 14] [திரு. லா. சந்தானம்]

கிருஷ்ணா நதி நீராக இருந்தாலும் சரி, அவற்றையெல்லாம் வன்மையாக வாதாடி, மத்திய அரசிலே நிலைநிறுத்துவதற்கு நான் உறுதி பூண்டிருக்கிறேன் என்கின்ற செய்தியும் நமக்கு மகிழ்ச்சி தருகின்ற செய்தியாக இருக்கின்றது.

*பிற்பகல் 12-30*

பெரியாறு அணையைப் பொறுத்த அளவிலே, அது அங்கே வறட்சிப் பகுதிகளாக இருக்கின்ற 6 மாவட்ட மக்களுக்கு நீர்ப்பாசனத்தை வழங்குகின்ற நல்ல ஒரு திட்டம். அது பல ஆண்டுகளாக நிலுவையிலே இருந்து கொண்டிருக்கிறது. இங்கே பேசுகின்ற நேரத்திலேகூட, 1991-96 வரைக்கும் உங்களுடைய அரசு என்ன செய்தது என்ற வினாவை எழுப்பினார்கள். நான் சொல்லுகிறேன். அந்தக் காலகட்டத்திலே அந்த அணையைப் பலப்படுத்துகின்ற வேலை நடந்து கொண்டிருந்தது. அந்த அணையைப் பற்றி முழுமையாகத் தெரிந்தவர்கள், அந்த அணை உயர்த்தப்பட வேண்டும் என்கின்ற அக்கறை கொண்டவர்கள் என்கின்ற காரணத்தினால் வேலை நடந்து கொண்டிருந்தது. அந்த நேரத்திலேதான் அந்த அணை உடைந்துவிடும் என்று கேரள மக்களால் பீதி கிளப்பப்பட்டு, மத்திய அரசின் குழு வந்து பார்வையிட்டு அணை நன்றாக இருக்கிறது என்று சொன்னது. அந்த அணையை உயர்த்துவதற்கு, அந்த அணையைப் பலப்படுத்துவதற்கு சில வேலைகளைச் செய்ய வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு அரசு அதற்கு ஒரு நிதியை ஒதுக்கி, 1991-95 காலகட்டங்களிலே அந்த அணையைப் பலப்படுத்துகின்ற வேலை நடந்து கொண்டிருந்தது. அது 1996 ஆம் வருடத்திற்குப் பின்னால் நிறைவுபெற்ற நிலையிலே 142 அடி வரை தண்ணீரைத் தேக்கலாம் என்கின்ற சூழ்நிலை உருவானது. எனவே, அந்தச் சூழ்நிலையிலே திராவிட முன்னேற்றக் கழகம் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டது என்று சொன்னாலும்கூட, இன்றைக்கு இந்த அரசு அதை எப்படியாவது உயர்த்துவதன் மூலமாக அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பயன் ஏற்படும். ஏறக்குறைய இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், மதுரை போன்ற மாவட்டங்களிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அது பெரிதும் பயன்படுகிற திட்டம் என்கின்ற முறையிலே அதை உயர்த்துவதற்கு நான் முயற்சி எடுத்துக்கொள்வேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதுபோல 'வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிசையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்' என்று சொன்னான் பாரதி. கங்கையையும், காவிரியையும் இணைப்பதன் மூலமாக இந்த நாட்டிலே இருக்கின்ற அத்தனை தரிசு நிலங்களையும் மேம்படுத்துகின்ற ஒரு நிலையை ஏற்படுத்த

முடியும் என்று. ஒரு அடிமை இந்தியனாக இருந்த பாரதி பாடிய அந்தப் பாடல் இன்றைக்கு நிறைவுபெற வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு, தென்னகத்து நதிகளை எல்லாம் இணைப்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுக்கக் கோருவோம் என்கின்ற ஒரு நிலையும் இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, விவசாயிகளின் மேம்பாட்டுக்காக அத்தனை காரியங்களையும் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதுபோல, கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களுக்குச் சாலை வசதிகளை ஏற்படுத்தித் தருவேன் என்றும், அதுபோல விவசாய மக்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற கால்நடைகளைப் பராமரிப்பதற்காகக் கால்நடை பராமரிப்புத் திட்டங்களும் இருக்கின்றன. சிறு தொழில் செய்தவர்கள் சென்ற காலங்களிலே தொழிலே மிகவும் நலிந்துபோய், தங்களுடைய வாழ்க்கையைக்கூட நடத்த முடியாது என்கின்ற நிலையிலே எங்களைப் போன்றவர்களை எல்லாம் சந்தித்துக்கூட அவர்களுக்கு ஆதரவு கேட்டார்கள். ஆனால், இன்றைக்கு அந்தச் சிறு தொழில் செய்கின்றவர்களை எல்லாம் ஊக்கப்படுத்துகின்ற வகையில் அவர்களுக்கு விலை நிர்ணயம் செய்வது, கொள்முதல் செய்வது போன்ற முடிவினை இந்த அரசு எடுத்திருக்கின்றது. அது மிக ஆரோக்கியமான முடிவு என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, கிராமப்புறங்களிலும் நகரப்புறங்களிலும் இருப்பவர்களுக்கு உரிய மருத்துவ வசதி தருவது; சென்னை நகரை அழகுபடுத்துவதுபோல, கூவம் ஆற்றைச் சீரமைத்து அதை நல்ல நிலைக்குக் கொண்டுவருவது; அதுபோல, அரசினுடைய எல்லாக் கோப்புகளிலும் தமிழ் மொழிக்கு முதலிடம் கொடுப்பது; அதுபோல, எல்லா இடங்களிலும் கல்வி வேண்டும், கல்வி என்பதுதான் மனிதனுக்கு இன்றியமையாத ஒன்று என்பதை வலியுறுத்துகின்ற அளவிலே, எல்லோரும் கல்வி கற்க வேண்டும் என்ற ஒரு திட்டம்; மகளிருக்கு இட ஒதுக்கீட்டுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கின்றன. அந்தத் திட்டங்களை எல்லாம் சீராகச் செயல்படுத்துவதற்கு நாங்கள் எல்லாம் உறுதுணையாக இருப்போம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்த அளவிலே, சென்ற முறை பல்வேறு திட்டங்களை எங்களுடைய பின்தங்கிய பகுதியாகிய உசிலம்பட்டி பகுதிக்கு இந்த அரசு வழங்கியிருக்கிறது. நன்றி மறவாத அளவிலே பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.





*பிற்பகல் 12-35*

ஆண்டிப்பட்டி தேர்தலின்போது எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். ஓர் இனத்தைச் சார்ந்த மக்கள் நன்றி அற்றவர்கள் என்பதுபோல நினைத்து, மீண்டும் முதல்வராக அருமைத் தோழர், இன்றைக்கு இருக்கின்ற நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல்வராகத் தொடர வேண்டுமென்றால் உங்களுடைய வாக்குகளை எல்லாம் நீங்கள் எங்களுக்கு அளியுங்கள் என்றுகூடச் சொன்னார்கள். எங்களைப் பொறுத்த அளவிலே,

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று'

என்கின்ற பக்குவத்தைப் பெற்றவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி). நன்றி மறக்காதவர்கள் என்பதை எடுத்துக்காட்டுவதைப் போலத்தான், இந்த மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய தகுதி படைத்தவர் புரட்சித் தலைவி என்கின்ற காரணத்தினால், அத்தனையையும் ஒதுக்கிவிட்டு அந்த மக்கள், அத்தனை எதிர்க்கட்சிகளும் சேர்ந்தும்கூட அவர்களுடைய வாக்குகளைத் தொட முடியாத நிலைமை. நான்கூட அந்தக் கூட்டணியிலே அங்கம் பெற்றவன், மதச்சார்பற்ற கூட்டணியிலே அங்கம் பெற்றவன் என்கின்ற முறையில், அவர்களுக்குக்கூட அழைப்புக் கொடுத்தேன். இது ஒரு இடைத் தேர்தல்; நாமெல்லாம் பொதுத் தேர்தலிலே, பொதுமக்களிடத்திலே, தமிழக மக்களிடத்திலே ஒரு வாக்குறுதியைக் கொடுத்தோம். ஓர் ஆட்சி அமைய வேண்டும்; அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமையிலே அமைய வேண்டும்; அதன் தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய நாமினேஷன்களெல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலும்கூட பெரும்பான்மை பெற்று வெற்றி பெறுகின்ற நேரத்திலே அவர்கள்தான் தமிழகத்தினுடைய முதலமைச்சராக ஆக்கப்பட வேண்டுமென்று மக்களிடத்திலே நம்முடைய பிரச்சாரத்தை முன்வைத்தோம். அதற்காகத்தான் அவர்கள் அந்த நிலையை ஏற்றுக்கொண்டு, தமிழகத்திலே புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராக ஆக வேண்டுமென்கின்ற, நாமெல்லாம் சொல்லிய அந்த நிலையை ஏற்றுக்கொண்டுதான் தமிழகத்து மக்கள் பெருவாரியான வித்தியாசத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அறுதிப் பெரும்பான்மை பெறுகின்ற அளவிற்கு, அதிலும் எந்தவிதமான மாற்றமும் இல்லாத அளவிற்கு வாக்களித்தார்கள். அதற்காகத் தமிழக மக்களை நாம் பாராட்ட வேண்டும்.

இன்றைக்குப் பல்வேறு மாநிலங்களிலே தேர்தல் நடக்கிறது. ஆனால், அந்த மாநிலங்களிலே எல்லாம் பல்வேறு குழப்பங்கள். எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மையில்லாத நிலைமையை உருவாக்கி, இன்றைக்குக்கூட அயோத்தியிலே பெரும் பிரச்சினை ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த மாநிலத்திலே மக்களாட்சி இல்லை என்கின்ற நிலை; ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலை இருக்கின்ற நேரத்தில், தமிழகத்து மக்கள் ரொம்ப தீர்க்க சிந்தனையோடு, ஒரு அறுதிப் பெரும்பான்மை அளித்திருக்கிறார்கள். பல்வேறு கூட்டணிக் கட்சிகள் எல்லாம் இருந்தன; இருந்தாலும்கூட இந்த ஒரு தனிக் கட்சிக்கு வாக்களித்திருக்கிறார்கள். இங்கு பேசுகின்ற நண்பர்கள்கூடச் சொன்னார்கள், 140 இடங்களிலே போட்டியிட்டு 133 இடங்களைப் பெறுகின்ற அளவிற்கு ஒரு தனிப் பெரும்பான்மையை இந்த இயக்கத்திற்குக் கொடுக்கின்ற அளவிற்குத் தமிழக மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மக்களுக்கு நாமெல்லாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மக்களுடைய எண்ண அலைகளுக்குத் தகுந்த மாதிரி நமது கருத்துகளை மாற்றிக்கொள்ள வேண்டும். நாம் கொடுத்த அந்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும். எனவே, இடைத் தேர்தலிலே நீங்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்றெல்லாம் நான்கூட அழைப்புக் கொடுத்தேன்.

'இந்து' பத்திரிகைகூட எழுதியது; எல்லாக் கூட்டணிக் கட்சிகளும் போனபின், பார்வர்டு பிளாக் என்கின்ற ஒரு கூட்டணிக் கட்சிதான் இருக்கிறது. இருந்தாலும்கூட, அம்மா அவர்கள் போட்டியிடுகின்ற ஆண்டிப்பட்டி தொகுதியிலே அதற்கென்று சில மக்கள் இருக்கிறார்கள் என்றுகூடக் குறிப்பிட்டு 'இந்து' நாளேடு எழுதிக் காட்டியது. என்னைப் பொறுத்த அளவிலே, நாங்களெல்லாம் சொல்வதற்காகக்கூட யாரும் ஓட்டுப் போடவில்லை. இந்த நாட்டினிலே, ஒரு பெண்மணி வீரம் மிகுந்தவர், மன தைரியம் மிகுந்தவர், ஜான்சி ராணியைப் போன்று தன்னை ஏற்படுத்திக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) உழைத்துக் கொண்டிருக்கின்ற அவர், ஆட்சிக்கு வரவேண்டும் என்பதற்காகத்தான் ஓட்டுப் போட்டார்கள். யாருடைய வேண்டுதலுக்காகவும் ஓட்டுப் போடவில்லை; மக்கள் அவர்களாகவே முன்வந்து, புரட்சித் தலைவி அவர்களை முதல்வராக ஆக்க வேண்டுமென்பதற்காக வாக்களித்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. எனவே, அவர் செய்கின்ற அந்த நல்ல காரியங்களுக்கு என்றைக்கும் நாங்கள் உறுதுணையாக இருப்போம். எங்களைப் பொறுத்த அளவிலே எங்களுடைய பகுதியிலே





இருந்த 58 கால்வாய் கிராமத் திட்டத்திற்குக் கடுமையான நிதி நெருக்கடி இருந்தும்கூட 4 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக நான் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, நமது பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தவரும், நமது புரட்சித் தலைவியும் சேர்ந்து, என்னுடைய தொகுதியிலே அசுவமா நதி அணைத் திட்டம் என்பதை சென்ற ஆண்டு எனக்கு அளித்தார்கள். அதற்காகவும் அவர்களுக்கு நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ஆங்கிலேயர் இருந்த காலத்திலேயிருந்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற சீர்மரபினர் மக்கள் பொருளாதாரத்திலும், கல்வியிலும் மிகவும் பின்தங்கியிருக்கிறார்கள். அவர்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக, 'கள்ளர் சீரமைப்புத் துறை' என்கின்ற ஒரு துறையையும் ஏற்படுத்தி, அவர்களுக்காகத் தனியாகப் பள்ளிகளையெல்லாம் வைத்து இன்றைக்கும் அவை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, அந்தச் சீர்மரபினர் மக்களுக்கு ஒரு இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கெல்லாம் அப்படித் தனியாக இருக்கிறது. எங்களுக்கு இருந்தது மூடப்பட்டுவிட்டது. மீண்டும் அது தொடங்கப்பட வேண்டும் என்று சொல்லி சென்ற முறை கோரிக்கை வைத்த நேரத்திலே, அதை ஏற்று, 'நான் நிச்சயமாக உங்களுக்கு மீண்டும் அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைத் தொடங்குவதற்கு வாய்ப்பு அளிக்கிறேன்' என்று சொன்னார்கள். அதற்கு அரசு ஆணையும் பிறப்பித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு தொடங்கவிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு சீர்மரபினர், நலிந்த பிரிவினர் . . .

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, இடையிலே சொல்வதற்கு வருந்துகிறேன். ஏனென்றால், இன்று மத்தியானத்திற்குள் நாம் முடிக்கப் போகிறோம். மத்தியானம் அவை கிடையாது. பேசுகின்றவர்கள் கொஞ்சம் சீக்கிரம் பேசி முடித்தால் நன்றாக இருக்கும். இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் 5 பேர் பேசவிருக்கிறார்கள்.

[2002 மார்ச் 14

**திரு. லா. சந்தானம்:** அதேபோல், அந்தக் கள்ளர் சீரமைப்புத் துறையிலே இருக்கின்றவர்களுக்குப் போதிய ஆசிரியர்கள் இல்லை, இடைநிலை ஆசிரியர்கள் சென்ற முறை நியமிக்கப்படுகிறபோது, அங்கிருக்கின்ற பள்ளிகளிலே 100 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதை நிரப்புவதற்கு அந்த இன மக்கள், அந்த ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் இல்லை என்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், அந்த இடத்தை நிரப்புவதற்கு, அந்த இனத்திலே இருக்கின்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கலாம் என்கின்ற ஒரு நிலை ஆதிதிராவிடர் நலத் துறையிலே இருப்பதுபோல, இந்த சீர்மரபினர் இனத்திலேயும் இருக்கின்ற பட்டதாரி ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர் பணிகளிலே நியமிக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்கிற கோரிக்கையை இந்த அரசுக்கு வைத்து, நல்ல வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைக் கூறி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். இலட்சுமணன், 10 நிமிடங்களுக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையை பாரதிய ஜனதா கட்சி சார்பாகப் போற்றுகின்றோம், வரவேற்கின்றோம், பாராட்டுகின்றோம். தமிழ்நாடு அரசினுடைய முக்கியமான கொள்கைகளை எல்லாம் சுட்டிக் காண்பித்து ஆளுநர் உரை வரையப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, தமிழ்நாட்டிலே பயங்கரவாதத்தை ஒடுக்குகின்ற ஒரு சபதத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு அரசுக்கு பாரதிய ஜனதா கட்சி சார்பாக மிக, மிகப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஜனநாயகத்தின்மீது ஏவப்பட்ட, பாராளுமன்றத்தின்மீது நடத்தப்பட்ட பயங்கரவாதிகளுடைய தாக்குதல், குஜராத்திலே நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களையெல்லாம் கண்டித்து தமிழ்நாடு அரசு தங்களுடைய எதிர்ப்பினைத் தெரிவித்திருப்பதை நாங்கள் வரவேற்கின்றோம். எல்லாவற்றையும் காட்டிலும் இந்த ஆளுநர் உரையிலே மிகச் சிறப்பாகக் கூறியிருப்பது, தமிழ்நாடு அரசு, தெய்வப் புலவர் திருவள்ளுவர் அவர்கள் பெயராலே ஒரு பல்கலைக்கழகம் அமைக்கவிருக்கின்றது என்பது. அதை மிக, மிகப் பாராட்டி வரவேற்கின்றோம். தெய்வப் புலவர் திருவள்ளுவருடைய பெயரிலே பல்கலைக்கழகம் ஒன்று அமைப்பது, வேலூரிலே இருந்தாலும்கூட, தமிழக மக்களே பெருமைப்படக் கூடியது ஒன்று. குறிப்பாக மயிலாப்பூர்—பாரதியார் அவர்கள் பாடினார்கள்:





"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று குறிப்பிட்டார்கள். அப்பேர்ப்பட்ட தெய்வப் புலவரை ஈன்றெடுத்த மண் மயிலாப்பூர். ஆகவே, மயிலாப்பூர் மக்கள் எல்லாம் இன்றையதினம் மிக்க மகிழ்ச்சியை அடையக்கூடிய வகையிலே மயிலாப்பூர் மைந்தனுக்கு, தெய்வப் புலவருக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதற்காக தமிழ்நாடு அரசை பாரதிய ஜனதா கட்சி சார்பாக மிக, மிக, மிகப் பாராட்டுகின்றேன், வரவேற்கின்றேன்.

பயிர்த் தொழில் நம்முடைய நாட்டினுடைய உயிர்த் தொழில். ஔவையார் 'சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்று சொல்லியிருக்கின்றார்கள். 80, 85 சதவிகிதம் மக்கள் விவசாயத்திலே, வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகையினாலே, வேளாண்மை, விவசாயம் சீராக இருந்தால்தான் தமிழ்நாடு முன்னேற முடியும். ஆகவே, வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே 80 சதவிகிதம் ஒதுக்கீடு வேளாண்மைத் துறைக்கு ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். பஞ்சத்தாலும், வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்படுகின்ற விவசாயிகளுக்கு காப்பீட்டுத் திட்டத்தினை உறுதியாக, பரவலாக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிகப் பெரிய தொழிலாக இருப்பது நெசவுத் தொழில். அந்த நெசவாளர்கள் எல்லாம் இன்றையதினம் தமிழ்நாட்டிலே, நாளொன்றுக்கு ஒருவேளைகூட உணவு சாப்பிட முடியாத அளவுக்கு வறுமையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 22 ரகங்கள் கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்டிருந்தது. இன்றையதினம் அது சுருங்கி 11 ரகங்கள் மட்டும்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, தமிழக அரசு இந்த நெசவுத் தொழில் நெசவாளிகளைக் காப்பாற்றுவதற்காக 22 ரகங்களையும் கைத்தறிக்கே ஒதுக்கி அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போக்குவரத்துக் கழகத்தைத் தமிழக அரசு முழுமையாகத் தனியார்மயமாக்கும் திட்டம் இல்லை. அதை நாங்கள் பாராட்டுகின்றோம். படிப்படியாகத் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டால், ஒரு போட்டி ஏற்பட்டு, நல்ல முறையிலே போக்குவரத்துக் கழகம் நடைபெறும்; அதனாலே போக்குவரத்துத் துறையிலே இலாபமும் ஈட்ட

முடியும் என்கின்ற நிலையிலே, அந்த நோக்கத்தை நாங்கள் பாராட்டுகின்றோம், வரவேற்கின்றோம். அரசுத் துறையில் உள்ளவற்றை எல்லாம் தனியார்மயமாக்கும் திட்டம் இருக்கிறதென்றால், அது மக்களுடைய நல்வாழ்விற்காகத்தான் செய்யப்படுகின்றது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணத்திற்கு, சேலம் உருக்காலை இருக்கின்றது. அங்கே பணிபுரிகின்றவர்கள் 1000 பேர்தான். ஆனால், வருடத்திற்கு 1000 கோடி ரூபாய் நஷ்டம். இந்த நஷ்டம் கடைசியிலே எங்கே போய் விழுகின்றது? வரிப் பணமாக மக்கள் மீதுதான் திணிக்கப்படுகின்றது. பாதிக்கப்படுகின்றவர்கள் சாதாரண ஏழையெளிய மக்கள்தான். அந்த ஏழையெளியவர்களைக் காப்பாற்றுவதற்காக, அதாவது அவர்கள்மீது கொடிய வரி விதிக்கப்படாமல் இருப்பதற்காகவும், எப்போதுமே நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதை மாற்ற வேண்டும் என்கின்ற நோக்கத்திலேயும், அதேநேரத்திலே தொழிலாளர்களுடைய வாழ்வு பாதிக்கப்படாமலும் படிப்படியாகத் தனியார்மயமாக்குகின்ற திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலே போக்குவரத்துத் துறையையும் படிப்படியாகத் தனியார் துறையாக மாற்றுவதற்கு, தனியாருக்கும் இதிலே பங்குகொடுப்பதற்குத் தமிழக அரசு திட்டம் வகுத்துள்ளது. அதை நாங்கள் வரவேற்கிறோம்.

இறுதியாக, நம்முடைய மயிலாப்பூர் தொகுதியிலே மிகப் புகழ் பெற்ற குளங்கள் எல்லாம் இருக்கின்றன. மழைக் காலங்களிலே மழை அதிகமாகப் பெய்தாலும்கூட, குளத்திலே நீர் வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. வருகின்ற கோடைக் காலத்திலே, சென்னை நகரிலே குடிநீர்ப் பிரச்சினை இன்னும் அதிகமாக, பயங்கரமாக இருக்கப் போகின்றது. ஏரிகளிலே போதிய தண்ணீர் இல்லை. ஆகவே, தமிழக அரசு இப்போதே போர்க்கால அடிப்படையிலே ஒரு திட்டம் போட்டு, சென்னை மாநகரத்தினுடைய குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு உரிய திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக, ஒட்டுமொத்தமாக இந்த மேன்மைதகு ஆளுநர் உரையை வரவேற்கின்றோம், பாராட்டுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) கூடவே நாங்கள் சொன்ன குறிப்புகளையும் நீங்கள் சேர்த்து அங்கீகரிக்க வேண்டுமென்று கோரி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள்.





*பிற்பகல் 12-50*

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதச்சார்பற்ற ஜனநாயக அணி சென்ற தேர்தலிலே வெற்றி பெற்று, அதனுடைய தொடர்ச்சி என்ற முறையில் தமிழகத்தில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றது. சில காலத்திற்கு இன்றைய முதலமைச்சர் அவர்கள் வெளியே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும், மீண்டும் ஆட்சிப் பொறுப்பிலே வந்திருப்பது மகிழ்ச்சி. இந்த அரசு மதச்சார்பற்ற ஜனநாயக அணியினுடைய தொடர்ச்சி என்று நான் கருதுகிறேன். அந்த முறையிலே சென்ற மே மாதத்திலே, தேர்தல் நேரத்திலே நாம் தமிழக மக்களுக்கு என்ன சொன்னோமோ, அதை இந்த அரசு கடைப்பிடிக்கும் என்று நான் கருதுகிறேன்.

இந்த நேரத்திலே நான் ஒன்றைத் தெள்ளத் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆளுநர் உரையில், ஆளுநர் அவர்கள் தமிழக அரசினுடைய எண்ணங்களை, கருத்துகளைப் பிரதிபலிக்கிறார். அதிலே பிரதானமான எண்ணம், கருத்து, தமிழகத்தை இந்திய நாட்டிலேயே முதல் மாநிலமாக ஆக்கிக் காட்ட வேண்டும் என்பது. அதை நாங்களும் வரவேற்கின்றோம். அதற்கு எடுத்துக்கொள்கிற நியாயமான நடவடிக்கைகளை, இந்த நாட்டிலே இருக்கிற உழைப்பாளி மக்கள், நடுத்தர மக்கள் தாக்கப்படாமல் எடுக்கப்படுகிற நடவடிக்கைகளை, மக்களுக்கு ஏற்படுத்துகிற நன்மைகளை நாங்களும் ஆதரிக்கின்றோம். ஆனால், நான் ஒன்றைத் தெள்ளத்தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே கொடுக்கப்பட்டு இருக்கிற பல கருத்துகளைப் பார்க்கிற நேரத்திலே, மத்திய அரசைப் பற்றி இந்த அரசு என்ன கருதுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். பாரதிய ஜனதா கட்சி தலைமை தாங்குகிற மத்திய அரசு, நம்முடைய நாட்டிலே மதச்சார்பற்ற தன்மையை, இந்திய நாட்டினுடைய அரசியல் சாசனம் ஏற்றுக்கொண்டிருக்கிற Secularism-ஐயே தொடர்ந்து தாக்கிக்கொண்டிருக்கிற நடவடிக்கைகளைத் தான் நாம் பார்த்துக்கொண்டு இருக்கின்றோம். ஏராளமான எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும். நேரத்தின் அருமை காரணமாக நான் அந்த விஷயங்களுக்கு வரவில்லை. அதேபோன்று, இன்னொன்றையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் தொடருகிற பொருளாதாரக் கொள்கை, நாசகரமான பொருளாதாரக் கொள்கை என்ற புதிய பொருளாதாரக் கொள்கை. இந்த நாட்டிலே இருக்கின்ற மக்களைத் தாக்கிக்கொண்டு அல்லது மக்களைக்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2002 மார்ச் 14

கொள்ளையடிப்பதற்கு, இந்த நாட்டிலே இருக்கிற சமூக உச்சநீதித்துவத்தை இன்று ஏகாதிபத்திய நாடுகளுக்கு சுரண்டுவதற்கு, கொள்ளையடிப்பதற்கு அனுமதிக்கப்படுகிற பொருளாதாரக் கொள்கை அல்லவா? அந்தப் பொருளாதாரக் கொள்கையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நான் ஒன்றைத் தெள்ளத்தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நாட்டிலே ஜனநாயக உரிமைகளை, சர்வாதிகாரத் தன்மையிலே அடக்குவதற்கான முயற்சியை இன்று மத்திய அரசு எடுத்துக்கொண்டு இருக்கிறது. அந்தப் பாணியிலே நீங்களும் போக விரும்புகிறீர்களா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நான் ஒரு சில விஷயங்களைச் சுட்டிக்காட்டுவதற்கு மன்னிக்க வேண்டும். தேசிய ஜனநாயக அணி, அவர்களுக்கு ஒரு Hidden Agenda அல்லது ஒரு ரகசியமான அஜெண்டா இருந்துகொண்டு இருக்கிறது. அதைத்தான் அவர்கள் நடைமுறைப்படுத்துகிறார்கள். தேசிய ஜனநாயக அணியினுடைய அஜெண்டா என்ற போர்வையிலே அவர்கள் இன்று மக்களைத் தாக்கிக்கொண்டு இருக்கின்றார்கள். இந்த நாடே ஏற்றுக்கொண்டிருக்கின்ற Secularism என்ற அந்தக் கருத்தைத் தாக்கிக்கொண்டிருக்கின்ற கொள்கைதான் அவர்களுடைய கொள்கை என்று நாங்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் அதை மறுத்தார்கள். ஆனால், இன்று என்ன நிலை? நேற்றையதினம், தேசிய ஜனநாயக முன்னணி அரசு உச்ச நீதிமன்றத்திலே தாக்கல் செய்திருக்கிற அந்த Affidavit என்ன சொல்கிறது? திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் ஆந்திர மாநிலத்தினுடைய முதலமைச்சர். இன்று தேசிய ஜனநாயக அணிக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கின்றவர், அவர் சொல்லி இருக்கிறார், இதுசம்பந்தமாக எங்களுடன் ஆலோசிக்கவில்லை. (குறுக்கீடு)

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது 1989-லே . . .

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் பேசி முடித்துவிட்ட பிறகு அவர் கேட்கட்டும். I am prepared to answer him after I finish my speech. (Interruption).



2002 மார்ச் 14]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன், நீங்கள் பேசுங்கள். திரு. ராஜா அவர்களே, உங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். இலட்சுமணன் அவர்கள் ஏற்கெனவே பேசிவிட்டார். (குறுக்கீடு) உங்களுக்குப் பிறகு வாய்ப்புத் தருகிறேன், பிறகு பேசலாம். ஹேமச்சந்திரன் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. எச். ராஜா:** அவர் ஒரு கருத்தினைப் பதிவு செய்கிறார். எங்கள் கட்சியினுடைய கருத்தினை, செயல்பாட்டினைப் பதிவு செய்ய எனக்கு நேரம் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நான் பேசும்போது Intervene செய்ய அனுமதித்தேன்.

**THIRU J. HEMACHANDRAN:** Then you have not yielded. (Interruption) You have not yielded.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எச். ராஜா:** அதாவது, மத்திய அரசாங்கம் நீதிமன்றத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்களே, பின்னர் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அவர்கள் தாக்கல் செய்திருக்கிற அந்த affidavit-ஐப்பற்றி, தேசிய ஜனநாயக முன்னணியை ஆதரிக்கின்ற கட்சிகள், அதனுடன் இருந்து கொண்டிருக்கிற கட்சிகளுடன் கலந்து கொள்ளவில்லை என்று ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்கள் சொன்னதாக இன்று பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக கட்சி என்ன சொல்கிறது, அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே! (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நாங்கள் சொன்ன நேரத்திலேயெல்லாம் அவர்கள் என்ன சொன்னார்கள்; 'இல்லை, பாரதிய ஜனதா கட்சிக்கு, தேசிய ஜனநாயக அணிக்கு இப்படிப்பட்ட ஒரு hidden agenda இல்லை' என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்குத் தெள்ளத்தெளிவாக நிரூபணம் ஆகியிருக்கிறது.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்திலே வாதாடுகின்றபோது வழக்கறிஞர்கள் எத்தனையோ கருத்துகளைச் சொல்லலாம். சோலி சொராப்ஜி அவர்கள்கூடச் சொன்னார்கள். 'நான் சொன்ன கருத்து என்னுடைய சொந்தக் கருத்தே தவிர, அரசின் கருத்து இல்லை' என்றார்கள். ஆனால்,

[திரு. துரைமுருகன்] [2002 மார்ச் 14

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார், 'உச்ச நீதிமன்றம் என்ன சொல்கிறதோ, அதற்கு மத்திய அரசு கட்டுப்படவேண்டும், அதிலே மத்திய அரசு பிறழ்ந்து போனால், அதிலிருந்து விலகிப் போனால், திராவிட முன்னேற்றக் கழகமும் அந்தக் கூட்டணியிலிருந்து விலகுகின்ற நிலைமை ஏற்படும்' என்று தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, உச்ச நீதிமன்றத்திலே சோலி சொராப்ஜி அவர்கள் பேசியது, அவருடைய சொந்தக் கருத்து என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு அரசினுடைய ஏ.ஜி.ஆக இருப்பவர் போய் சொந்தக் கருத்தைச் சொல்ல முடியாது. நானும் சட்ட அமைச்சராக இருந்தேன். என்னிடம் பணியாற்றியவர் அவர். அரசின் கருத்தைத்தான் அவர் சொல்ல முடியுமே தவிர, தனிப்பட்ட ஒரு கருத்தை அவர் சொல்ல முடியாது. ஆகவே, இப்போது ஏதோ ஒரு பழியைத் தான் ஏற்றுக்கொள்வதற்காக நாடகம் நடப்பதாகத்தான் நான் கருதுகிறேனேயொழிய, உண்மையிலேயே நீதிமன்றத் தீர்ப்பிற்குக் கட்டுப்பட வேண்டுமானால், நீதிமன்றத்தில் வாதாடும்போது, அரசின் கருத்தை அங்கே சொல்லவேண்டியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள், நீதிமன்றத்தினுடைய முடிவை ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னால், அங்கே எத்தகைய கருத்தை வைத்து வாதாடினார்கள் என்பதுதான் முக்கியம். ஏ.ஜி. வாதாடியது என்ன? அதைத்தான் C.P.I.-மார்க்சிஸ்ட் உறுப்பினர் சொல்லும்போது சொல்கின்றார். ஆனால், புரட்சித்தலைவி அவர்கள், அங்கே கரசேவையை நடத்துவதை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று வெளிப்படையாகச் சொன்னார்கள். அதுதான் தீர்ப்பு வந்திருக்கிறது. அதை ஆதரித்து இருக்கிறார்கள். ஆகவே, ஏ.ஜி. சொன்னது ஏதோ சொந்தக் கருத்து என்று சொல்வது, இப்போது திசை திருப்புவதாகும். ஏ.ஜி. எப்படி தனது சொந்தக் கருத்து என்று சொல்லமுடியும்?. மக்களுக்கு நாம் கொடுக்கிற பங்குதான். நாமே ஒரு வக்கீலை நியமனம் செய்கிறோம் என்று சொன்னால், நம்முடைய கருத்தைத்தான் அவர் சொல்லமுடியும். அவர் போய் சொந்தக் கருத்தைச் சொல்கிறார் என்று சொன்னால், அவர் ஏ.ஜி. கிடையாது என்று அர்த்தம். *(மேசையைத் தட்டும் ஒலி)*



2002 மார்ச் 14]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், *(குறுக்கீடு)* திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Attorney General என்பவர் அரசின் சார்பிலே, அந்த வழக்கில் ஆஜர் ஆகிறார். தனியாக அவர் ஆஜராவது என்பதே மிகவும் குறைவு. அதற்கும்கூட, அரசிடத்திலே அனுமதி பெறவேண்டும். இந்த வழக்கைப் பொறுத்தவரையில், மத்திய அரசின் சார்பிலே நீதிமன்றத்திலே ஆஜராகி அவர் பேசியதற்குப் பின்னாலே, அது என்னுடைய சொந்தக் கருத்து என்று சொன்னால், யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால், he has right to be heard in the Parliament. அவரிடம் ஏதாவது ஒரு விளக்கம் வேண்டும், சட்டத்திற்கு விளக்கம் வேண்டும், அதுவும் இந்தப் பிரச்சினையில் விளக்கம் வேண்டுமென்று சொன்னால், அரசின் சார்பிலே பார்லிமென்ட்டிலே மக்கள் சபையிலேயும் சரி, மாநிலங்கள் சபையிலேயும் சரி, அங்கு வந்து விளக்கம் அளிக்க வேண்டியவர் Attorney General அவர் பொறுப்பில்லாமல், அந்த 67 ஏக்கர், 47 ஏக்கர் இடத்திலே பூஜை நடத்தலாம் என்று சொல்லிவிட்டு, இன்றைக்கு அது அரசின் கருத்தல்ல, என்னுடைய கருத்து என்று சொல்வது, காதிலே பூச் சுற்றுகின்ற வேலை, எல்லோரையும் ஏமாற்றுகின்ற வேலை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சோலி சொராப்ஜி அவர்களுடைய கருத்து என்று நான் சொல்லவில்லை. அவரே சொல்லியிருக்கிறார். *(குறுக்கீடு)* கொஞ்சம் இருங்கள். அவரே சொல்லியிருக்கிறார். அந்தக் கருத்தை அவரே சொன்னது என்று ஏற்றுக்கொண்ட பிறகு, 'நீ ஏன் உன் சொந்தக் கருத்தை அரசாங்கக் கொள்கையில் ஏற்றினாய்' என்று கேள்வி கேட்க வேண்டியது மத்திய அரசு. ஒருக்கால் மத்திய அரசு கேட்டு, அவர் பதில் சொல்கிறபோது, 'இல்லை, நீங்கள் சொல்லித்தான் நான் நடந்தேன்' என்று சொன்னால், அப்படி ஒரு இரட்டை வேடத்தை மத்திய அரசு எடுத்தால், திராவிட முன்னேற்றக் கழகம் தன் நிலையில் இருந்து மாறுபட்டு, நாங்களும் ஒரு முடிவெடுப்போம் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

***(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)***

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2002 மார்ச் 14

பதில் சொல்லவில்லை. திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள், ஆந்திர மாநிலத்தினுடைய முதல்வர், NDA-வை ஆதரிக்கிறவர், தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இப்படி ஒரு Affidavit-ஐக் கொடுக்கிற நேரத்தில், இன்று NDA-வை ஆதரிக்கிற பல கட்சிகளும் ஏற்றுக்கொள்ளாத ஒரு கொள்கையை அவர்கள் தாக்கல் செய்கிற நேரத்தில் எங்களிடம் Consult பண்ணவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். What about D.M.K.? That is my question. அதற்குப் பதில் சொல்லாமல், சோலி சொராப்ஜியைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்?

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தேவை. அதாவது, மாண்புமிகு பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னதைப்போல, ஒரு அரசாங்கத்தினுடைய வக்கீல், அரசாங்கத்தினுடைய அனுமதி பெறாமல் நீதிமன்றத்தில் ஒரு கருத்தை ஒரு முக்கிய வழக்கில் தெரிவித்திருந்தால், அது அரசாங்கத்திற்கு அவர் செய்திருக்கிற துரோகம் அல்லது தவறு. அப்படி இதை ஏன் செய்தாய் என்று கேட்கிற உரிமை மத்திய அரசுக்கு உண்டு. அதை அவர்கள் கேட்க வேண்டும். மத்திய அரசு கேட்கும் என்று கருதுகிறேன். எனக்கு அதுபற்றித் தெரியாது. ஆனால், அவர் சொல்வதைப்போல, மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்கள் அவரைக் கேள்வி கேட்டிருக்கிறார்களே, சோலி சொராப்ஜி எப்படி இப்படிப் பேசலாம் என்று கேட்டிருக்கிறார்களே; திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் கேட்கவில்லை என்று கேட்கிறார். நான் ஹேமச்சந்திரன் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன், எங்களுக்கு சோலி சொராப்ஜி என்ன செய்தார் என்பதல்ல. நல்ல ஒரு தீர்ப்பு வந்தது; அது போதும் என்று நேற்றைக்கு வந்த நிலையிலே எங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறோம். அவ்வளவுதான்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளபடியே அரசினுடைய கருத்து அல்லாமல் தன்னுடைய சொந்தக் கருத்தை சோலி சொராப்ஜி சொல்லியிருப்பாரேயானால், அந்த அரசாங்கம் முதுகெலும்பு உள்ள ஒரு அரசாங்கமாக இருந்தால், உடனடியாக டிஸ்மிஸ் செய்ய வேண்டும் சோலி சொராப்ஜியை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் பேசி முடிக்கட்டும்

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அதாவது நான் ஒன்றை இந்த நேரத்திலே (குறுக்கீடுகள்) I am not yielding Let him ask question after I finish my speech.



2002 மார்ச் 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் பேசி முடிக்கட்டும். அவர் பேசி முடித்தவுடன் உங்களைக் கூப்பிடுகிறேன். நான் அழைக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒன்றை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதாவது, privatisation. குறிப்பாக, நம்முடைய போக்குவரத்துத் துறையிலே சில வழித்தடங்களை தனியார்மயமாக்குவது என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பிலே இங்கே எதிர்த்தார்கள். நான் அதை ஆதரிக்கிறேன். மகிழ்ச்சி. ஆனால், இதுதான் privatisation-ஐப் பொறுத்தவரையில் உங்களுடைய பொதுக் கொள்கையா? மத்திய அரசினுடைய privatisation கொள்கையை தமிழகத்தில் இருக்கின்ற பிரதான ஆளுங்கட்சியும், அதேபோன்று பிரதான எதிர்க்கட்சியும் துரதிருஷ்டவசமாக ஆதரிக்கின்றன. இதை வைத்துக்கொண்டு, இந்தக் கொள்கையை நீங்கள் ஆதரித்துக்கொண்டு, தமிழகத்தை ஒரு முதல் மாநிலமாக மாற்ற முடியுமா என்பது எங்களுடைய தாழ்மையான கேள்வி. நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள், தனியார்மயக் கொள்கை பற்றியும், பொதுவுடைமைக் கொள்கை பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இருக்கிற பொருளாதாரச் சூழ்நிலையில் சில மாற்றங்களை எல்லா மாநில அரசுகளும், மத்திய அரசும் எடுத்துக் கொண்டிருக்கின்றன. இது தவிர்க்க முடியாத ஒரு நிலையில் இருக்கிறது. பொதுவுடைமையாக்குவதிலும், தனியார் துறை ஆக்குவதிலும், காலப்போக்கில் சில மாறுதல்கள் வரத்தான் செய்கின்றன. பொதுவுடைமைக் கொள்கைகளே சில பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் நமக்குத் தொல்லை தரும்போது, வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படும்போது ஒரு மாறுதல் செய்வது தவறு இல்லைதான். Scientific Change-ல் ஒரே கொள்கையில் இருக்க முடியாது. பொதுவுடைமை முன்பு நன்றாக இருந்திருக்கலாம்; செயல்படுத்தினோம். ஆனால், இப்போது இருக்கின்ற சூழ்நிலையில், சில பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக, சிலவற்றைத் தனியார் துறையாக ஆக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோமே தவிர, நாங்கள் பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிரான கொள்கை உடையவர்கள் கிடையாது. ஆனால், சூழ்நிலை அப்படி. பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு எடுத்திருக்கின்றோமே தவிர, தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்குவதுதான் எங்கள் புரட்சித் தலைவியினுடைய கொள்கை. அவர் செய்து காண்பிப்பார். நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள் என்று சொல்லுகின்றேன்.

[2002 மார்ச் 14

பிற்பகல் 1-05

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இப்போது privatisation என்பதை நாங்கள் எங்கே ஆதரிக்கிறோம் என்று கேட்கிறார். இன்று நெய்வேலியிலே தனியார்மயம் ஆக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதில் ஆளுங்கட்சியினுடைய நிலை என்ன? அரசினுடைய நிலை என்ன? (குறுக்கீடு) வரவில்லையே! அதாவது, இந்த அவையிலே சேலம் உருக்காலை சம்பந்தமாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அன்றைய ஆளுங்கட்சி, அன்றும், இன்றும் மத்தியிலே ஆளுங்கட்சியாக இருந்து கொண்டிருக்கிறது. தடுத்து நிறுத்த முடிந்ததா? ஆகவே, இன்று நீங்கள் எடுக்கின்ற கொள்கைகளைப் பொறுத்தளவிலே, நடவடிக்கைகளைப் பொறுத்தளவிலே, இந்த நாட்டிலே இருக்கிற உழைப்பாளி மக்களைத் தாக்கக்கூடிய முறையிலே இன்றைக்கு நடவடிக்கைகள் போகின்றன என்பது எங்களுடைய ஆழமான வருத்தம்.

இன்று போக்குவரத்துத் துறையிலே சில வழித்தடங்களைத் தனியார்மயமாக்கப் போகிறோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எதற்கு? போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையிலே, அரசுக்கு வருமானத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்ற ஒரு துறை என்பது எங்களுடைய தாழ்மையான கருத்து. நடத்தக்கூடிய முறையிலே அது நடத்தப்பட்டால் இலாபத்தை ஏற்படுத்த முடியும் என்பது இந்த அவையினுடைய முன்னவர் அவர்களுக்கு போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த காலத்திலேயே தெள்ளத்தெளிவாகத் தெரியும் என்று நான் கருதுகிறேன். ஆனால், போக்குவரத்துத் தொழிலாளிகள் இன்று போனஸ் கேட்டதைத் தொடர்ந்து, அதாவது சென்ற 20, 25 ஆண்டு காலமாக அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த ஒரு உரிமையைக் கேட்டதற்காக, அதை வாங்குவதற்காக அவர்கள் போராட்டம் நடத்தியதற்காக அவர்கள் பழிவாங்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பழிவாங்கல் நடவடிக்கைகளின் தொடர்ச்சி இந்த அறிவிப்பு என்று நான் கருதுகிறேன்...

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்வதைப்போல, இந்த அரசுக்கு அத்தகைய எண்ணம் கிடையாது. தொழிலாளர்களின் மீதான அத்தனை வழக்குகளும் வாபஸ் பெறப்பட்டு அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) இருங்கள்.

அதோடு இந்தத் தனியார்மயமாக்கல் என்பது, உலக அளவிலே எல்லாப் பகுதிகளிலும் வந்து கொண்டிருக்கிறது. கம்யூனிச நாட்டிலேகூட



2002 மார்ச் 14] [டாக்டர் மு. தம்பிதுரை]

வந்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே, ஏதோ தொழிலாளர்களைப் பழி வாங்குவதற்காகத்தான், அந்த போனஸ் பிரச்சினைக்குப் பிறகுதான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது ஒரு தவறான கொள்கை. ஒரு பொருளாதாரக் கொள்கையைக் கருதித்தான், இப்போதுள்ள சூழ்நிலையைக் கருதித்தான், இந்த அரசு, இந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறதேயொழிய வேறல்ல. இதில் தெளிவாகச் சொன்னார்கள். அரசுப் போக்குவரத்துக் கழகத்தைத் தனியார்மயமாக்கும் கொள்கை கிடையாது, சில வழித்தடங்களை மட்டும்தான், எது நடத்த முடியாததோ, எது பொருளாதாரத்தில் நமக்கு இழப்புத் தருகிறதோ, அவற்றை மட்டும்தான் நாம் தனியாருக்குத் தருவோம் என்று சொல்லியிருக்கின்றோமேயொழிய, முழுவதும் கிடையாது. அந்தக் கொள்கையும் எங்களுக்குக் கிடையாது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி; நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், பழிவாங்கும் நோக்கம் இல்லை என்றால், ஏன் அவர்களை இன்னும் சஸ்பென்ஷனிலே வைத்திருக்க வேண்டும்? எல்லாத் தொழிற் சங்கங்களும் முன்னாள் அமைச்சரையும், இந்நாள் அமைச்சரையும் இந்த விஷயத்தில் சந்தித்துக் கேட்டிருக்கின்றன. சரி, அவர்கள்மீது குறிப்பிட்ட குற்றம் உண்டு, அந்தக் குற்றத்திற்காக வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியென்றால், அதற்கு enquiry நடத்துங்கள். அதற்கான நடவடிக்கையை எடுங்கள். ஏன் அவர்களுக்கு 75 சதவிகிதம் சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுத்து, அரசுக்கு இருக்கிற நிதி நெருக்கடியிலே அவர்களை வெளியேற்ற வேண்டும்?

ஒன்றை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவர்களுடைய வெள்ளை அறிக்கை வந்த நேரத்திலேயே, ஒன்றை நான் இங்கு பேசுகின்ற நேரத்திலே சுட்டிக்காட்டினேன். வெள்ளை அறிக்கையிலே அரசுக்கு நஷ்டம் என்று சொல்லப்பட்டிருக்கின்ற அனைத்தும், இந்த நாட்டிலே இருக்கிற ஏழையெளிய மக்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள் பேரிலேதான். அதாவது, மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இலவச பஸ் பாஸ்; வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்களுக்குக் கொடுக்கப்படுகிற மலிவு விலைப் பொருட்கள்; அதேபோன்றுதான் போனஸ், பஞ்சப்படி போன்றவையும். நான் ஒன்றை அன்றையதினம் கேட்டேன். இரண்டு நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே சொன்னார்கள். 5000 கோடி ரூபாய் அளவிற்கு வரித்தேக்கம் இந்த மாநிலத்திலே இருந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

6000 கோடி ரூபாய் அளவிற்கு வரித்தேக்கம் இருந்துகொண்டிருக்கிறது என்று சொன்னார். அதை வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இந்த நாட்டிலே இருக்கிற வசதி படைத்தவர்கள் இன்று வரி முடக்கம் அல்லது வரி ஏய்ப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்தவில்லை. அரசு அதை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை ....

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுவதுபோல, இந்த 6000 கோடி ரூபாய் வரி பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுக்காமல் அரசு இருக்கவில்லை. கிட்டத்தட்ட ஒரு 12 ஆண்டு காலமாக, படிப்படியாக நிலுவையில் இருந்து வருகிற அந்தத் தொகை 6000 கோடி ரூபாய். அதிலே வராத நிலையிலே இருக்கின்ற தொகை, ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே இருக்கிறது. வரக்கூடிய நிலையிலே இருப்பது, ஒரு நான்காயிரம் கோடி ரூபாய். அதிலேயும் நீதிமன்றத்திலே கிட்டத்தட்ட 70% நிலுவையிலே இருக்கிறது. அதற்காகத் தனியாக ஒரு குழு அமைத்து, துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கின்ற வழக்குகளைத் துரிதப்படுத்தி, வரி வசூலைத் துரிதமாக மேற்கொள்ள, தக்க நடவடிக்கைகளை அரசு ஏற்கெனவே எடுத்துள்ளது.

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், 5 மணித் துளிகளில் முடித்துவிடுங்கள். இன்னும் 2 தலைவர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நிறையக் குறுக்கீடுகள் வந்துவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு என்ன செய்வது?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே, இந்தியாவினுடைய மேற்குப் பகுதியிலே நடக்கின்ற riot-ஐப் பற்றிச் சொல்லப்பட்டது. குஜராத்திலே உண்மையிலேயே riot தான் நடந்ததா? நான் 'இந்து' பத்திரிகையிலே வந்திருக்கிற ஒரு செய்தியை இங்கே படித்துக் காட்டுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

'Another Police Officer said, the violence in Gujarat was not a riot. A riot involves a clash of two groups. In every conflict in the State before this one, both sides suffered, both shared a sense of loss; both could turn to the State for



help. This time, the Muslims alone have been under attack with what appears to be the backing of the State'.

This has been said by a Police Officer. It has been reported in the 'Hindu' paper and it is not my creation. ஆகவே, நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வட இந்தியாவிலே, அதேபோன்று இன்று பாரத நாட்டிலே உள்ள அனைத்து மக்களும் அமைதியாக, 1947-லே நடந்த அந்த Partition நேரத்திலே நடந்த அந்தக் கலவரங்களுக்குப் பிறகு, இந்தியா அமைதியினுடைய பாதைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நேரத்தில், 1992 டிசம்பர் 6 ஆம் தேதி ஏற்படுத்தப்பட்ட அந்த நிகழ்ச்சிகள் அல்லவா இன்றைக்கு மக்களை இப்படிப்பட்ட மத மோதல்களுக்கும், வகுப்புவாத மோதல்களுக்கும் ஆளாக்கியுள்ளன. காலையிலேகூட இங்கே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மேல் நாம் விவாதித்தோம். கோயம்புத்தூர், அதிலே திருப்பூர்; இவையெல்லாம் உழைப்பாளி மக்களுடைய பகுதி; அவர்களுடைய மாவட்டம். அந்த மாவட்டம் சென்ற இரண்டு, மூன்று ஆண்டுகளாக மதக் கலவரங்களுடைய, வகுப்புக் கலவரங்களையுடைய மாவட்டமாக மாற்றப்பட்டிருக்கிறது என்பது தமிழகத்திலே இருக்கிற நம் அனைவரையும் பாதிப்பது அல்லவா? அதை மாற்றுவதற்கு நமக்குக் கடமை இல்லையா? பொறுப்பு இல்லையா? அந்த முறையிலே இந்த விஷயங்களைப் பார்க்க வேண்டும். ஆகவேதான் நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், மத்திய அரசினுடைய, செக்யூலரிசத்தைத் தாக்கக்கூடிய முறையிலே உள்ள கொள்கைகளை நாம் அனைவரும் ஒன்றுபட்டு எதிர்க்காமல், இந்த நாட்டிலே பொருளாதார வளர்ச்சியை நாம் ஏற்படுத்திக்கொள்ள முடியாது. பொருளாதார வளர்ச்சிக்காக மக்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான திட்டங்களைத் தீட்டுகிற நேரத்திலே, ஒரு பக்கத்திலே இன்று மக்களைத் தாக்கக்கூடிய முறையிலே உள்ள நடவடிக்கைகள், மக்களுடைய ஒற்றுமைக்குக் குந்தகம் ஏற்படுத்தக்கூடிய முறையிலே உள்ள நடவடிக்கைகள், இன்றைக்குக் குறுக்கே நிற்கின்றன.

நான் ஒன்றைச் சொல்கிறேன். இன்று, economy என்ற பெயரிலே பல நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்படுகின்றன. எங்களுடைய மாவட்டத்திலே ஒரு கழகம் இருக்கிறது; ரப்பர் கழகம். அந்த ரப்பர் கழகத்திலே, இரண்டாயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு இரண்டாண்டு காலமாக, 3 ரூபாய் அவர்களுக்கு தினசரி ஊதிய உயர்வு கொடுக்கலாம் என்று ஏற்றுக்கொண்டதற்குப் பிறகும் கொடுக்கப்படவில்லை. அதேநேரத்திலே, அந்தக் கழகத்திலே 4 I.F.S. Officers-ஐப் போட்டிருக்கிறார்கள். ஒரு ஆளுக்குச் சம்பளம் 40 ஆயிரம் ரூபாய்;

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2002 மார்ச் 14

ஒரு ஆளுக்குச் சம்பளம் 25 ஆயிரம் ரூபாய்; ஒரு ஆளுக்குச் சம்பளம் 15 ஆயிரம் ரூபாய்; ஒரு ஆளுக்குச் சம்பளம் 10 ஆயிரம் ரூபாய். அந்தக் கழகத்திலே என்ன வேலை? இப்படி அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு மாதத்தில் கொடுக்க வேண்டிய சம்பளத்தைவிட அதிகமாக, ஒவ்வொரு மாதத்திலேயும் இந்த வெள்ளை யானைகள் இன்றைக்குச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் உங்களுடைய எக்கானமியா?

நான் ஒன்றைச் சொல்கிறேன். பல ரிடையர்டு அபிஷியல்ஸ் இப்போது மீண்டும் வேலைக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ரிடையர்டு ஆன நேரத்திலே கொடுக்கப்பட்ட சம்பளமா கொடுக்கப்படுகிறது? ஒரு இலட்சம் ரூபாய் மாதம் ஒன்றுக்கு ஊதியத்திலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். ** அவர்களை 10 மாத காலத்திற்கு முன்னாலே நியமனம் செய்தார்கள். 'அதோ பிடித்து விட்டார்கள்; இதோ பிடித்து விட்டார்கள்' என்று சொல்கிறார்களே தவிர, ஒன்றும் வரவில்லையே!

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், அவையிலே இல்லாதவர்களைப் பெயரைக் குறிப்பிட்டுப் பேசக் கூடாது. அந்த ** என்ற வாசகம் நீக்கப்படுகிறது. 3 நிமிடங்களுக்குள் பேசி முடியுங்கள். (உறுப்பினர் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தார்) நீங்கள் தண்ணீர் குடிப்பதைப் பார்த்தால் இன்னும் 10 நிமிடங்கள் பேசுவீர்கள்போல் தெரிகிறது. *(சிரிப்பு)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதிகாரி என்று திருத்திக் கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. எனக்கு யாரையும் தனிப்பட்ட முறையிலே தாக்க வேண்டும் என்றோ, குறிப்பிட வேண்டும் என்றோ நோக்கம் இல்லை. ஆகவே, போனஸை தொழிலாளர்களுக்குக் கொடுக்க முடியாது என்று சொல்கிற நேரத்தில், அரசு ஊழியர்களின் பல சலுகைகளை வெட்டுகிற நேரத்தில், இப்படிப்பட்ட இந்த வெள்ளை யானைகளை நீங்கள் அமர்த்தி, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை இவர்களுக்குச் சாப்பிடக் கொடுப்பதுதான் உங்களுடைய எக்கானமியா? இதைக் கைவிட வேண்டும்.

நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று Privatisation என்ற பெயரிலே நம்முடைய மாநிலத்தில் கூட்டுறவுச்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2002 மார்ச் 14] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

சர்க்கரை ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. பல ஆயிரக்கணக்கான பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அரசினுடைய பல நிறுவனங்கள் இன்றைக்கு மூடப்பட்டு இருக்கின்றன. இவைகளைத் திறந்து, வேலை செய்ய வைப்பதற்கான தெள்ளத்தெளிவான திட்டங்கள் இந்த அறிக்கையில் இல்லை என்பதை துரதிருஷ்டவசமாகச் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. இது மிகவும் வருந்தத்தக்கது.

எங்கள் மாவட்டத்தில் ஒன்று சொல்வார்கள். இந்த நேரத்தில், நீங்கள் பட்டினி கிடந்தாலும் அல்லது எவ்வளவு நாள் நீங்கள் வறுமையில் வாடினாலும், அந்த அளவுக்கு நீங்கள் சொர்க்க ராஜ்ஜியத்திற்குப் போகிற நேரத்திலே உங்களுக்குப் பால் பாயாசமும், பால் அடையும் கிடைக்கும் என்று. அப்படிச் சொல்லி என்ன பிரயோஜனம்? இன்றைக்கு வாழ வேண்டாமா? நீங்கள் இன்றைக்கு அவர்கள் வாழ்வதற்கான நடவடிக்கைகள் என்ன எடுத்து இருக்கிறீர்கள்? அதுதான் எங்களுடைய கேள்வி. இன்று சர்க்கரை ஆலைகள், அதேபோன்று பஞ்சாலைகள், இவைகளில் எல்லாம் வேலை செய்பவர்கள், வேலை இல்லாதவர்களாக மாற்றப்பட்டு இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களான எங்களைப் பார்க்க தினசரி 10, 20 பேர் வருகிறார்கள்; நான் ஐ.டி.ஐ. படித்து இருக்கிறேன்; நான் டிப்ளமா படித்து இருக்கிறேன்; எனக்கு ஒரு அப்ரன்டீஸ் வாங்கித்தர மாட்டீர்களா; ஒரு வேலை வாங்கித் தரமாட்டீர்களா என்று கேட்கிறார்கள். ஒரு அப்ரன்டீஸ்கூட வாங்கிக் கொடுக்க முடியவில்லை. பழக்கமுள்ள வேலை கொடுக்கக்கூடியவர்களிடம் கேட்டால், எங்கே வேலை, ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன என்கிறார்கள். கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. கடலூர் மாவட்டத்திலும், அதுபோல் எல்லா மாவட்டங்களிலும் ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. ஆகவே, அவற்றை எல்லாம் திறப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது). ஒன்றை மட்டும் நான் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

ரிலையன்ஸ் கம்பெனி என்று ஒன்று இருக்கிறது. 60 ஆயிரம் கோடி ரூபாய் அவர்களுடைய டர்ன் ஓவர்; 40 ஆயிரம் கோடி ரூபாய் அவர்களுடைய மூலதனம். நம்முடைய மாநிலத்தில் ஒரு அணு மின் நிலையம் ஏற்படுத்துவதற்கு ஜெயங்கொண்டத்திலே இடத்தை எடுத்தார்கள். இந்தக் கம்பெனிக்கு இடம் எடுத்துக் கொடுப்பதற்கு, முந்தைய அரசு, இப்போது இருக்கிற அரசும் என்ன நடவடிக்கை எடுத்தது? ஒரு ஏக்கர் நிலத்தைக் கொடுத்தால் அவர்களுக்குக் காம்பன்சேஷன் 22 ஆயிரம் ரூபாய்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2002 மார்ச் 14

என்ன நியாயம்? 2 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாய் வரை மதிப்புள்ள இடத்தைப் பிடுங்கியதற்குப் பிறகு அரசு அதிகாரிகள் போய் அந்த ஏழை விவசாயிகளைப் பயமுறுத்திப் பிடுங்குகிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் பேசி முடித்து விடட்டும். ஹேமச்சந்திரன், பேசி முடித்து விடுங்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் தனியார்மயம் ஆக்கக் கூடாது, ஆக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டு, இப்போது ரிலையன்ஸ் கம்பெனிக்குத் தனியார்மயம் ஆக்குவதற்காக அவர் கோரிக்கை வைக்கிறார் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, இல்லை, ரிலையன்ஸ் கம்பெனிக்குக் கொடுப்பதைப் பற்றியல்ல பிரச்சினை. காம்பன்சேஷன் பற்றியது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிலத்திற்குக் கொடுக்கக்கூடிய தொகை சரியில்லை என்கிறார் உறுப்பினர்.

*பிற்பகல் 1-20*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** *22 ஆயிரம் ரூபாய் காம்பன்சேஷன் அவர்களுக்குக் கொடுத்தால், அவர்கள் வீடு கட்டுவதற்கு நிலத்தை வாங்கி வீட்டைக் கட்ட, குழந்தைகளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க, குழந்தைகளைப படிக்க வைக்க, எதிர்கால வாழ்க்கைக்கு இந்த 22 ஆயிரம் ரூபாய் போதுமான காம்பன்சேஷன்தானா? இன்று அந்த மாவட்டத்தில் என்ன* reasonable market price *இருக்கிறதோ, அதைக் கொடுத்தால்கூட, 2 லட்சத்திற்கு மேல் கொடுக்க வேண்டும். ஆனால், அதிகாரிகள் திட்டமிட்டு, அந்தக் கம்பெனிக்காக ஏழை, எளிய விவசாயிகளை அச்சுறுத்துவது சரியல்ல. வேலை கொடுக்கலாம் என்று சொல்லி நெய்வேலியிலே நிலத்தை எடுத்தார்கள்; ஜெயங்கொண்டத்திலே எடுத்தார்கள். ஆனால், பல பேருக்கு வேலை கொடுக்கப்படவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட அந்த நிலையை அரசு கைவிட வேண்டும்.*

*நான் கடைசியாக ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று அரசு மலிவு விலையிலே, அதாவது வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களுக்கு 3 ரூபாய்க்கு அரிசி கொடுப்பது என்ற அந்தக் கொள்கையைத் தொடர்ந்து நடத்த வேண்டும். ஆண்டிப்பட்டி தேர்தலில்கூட நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, இன்று 5000 ரூபாய்*

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223756.
சென்னை-600 008



2002 மார்ச் 14] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

*வரை மாத வருமானம் உள்ளவர்களை [illegible] கோட்டிற்குக்கீழே இருக்கிறவர்களாக எடுத்துக்கொண்டால்தான் இந்த நாட்டிலே இருக்கிற மக்களுக்கு நியாயம் வழங்குவதாக ஆகும். ஆகவே, அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.*

*கடைசியாக நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஜனநாயக உரிமைகளைப் பிடுங்குவதற்கான நடவடிக்கைகளை இன்று மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது மத்திய அரசு— மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், நீங்களும், நானும், அதுபோன்று எஸ்.ஆர்.பி அவர்களும், ஜி.கே. மணி அவர்களும் டெல்லிக்குச் சென்றிருந்தோம். பாராளுமன்ற டிஸிப்ளின் சம்பந்தமான அந்த விவாதத்திலே பிரதானமாக வந்த ஒரு கருத்து என்னவென்றால், சட்டமன்றங்களும், நாடாளுமன்றமும் அரசினுடைய தேவைக்கு மட்டும் அரசால் கூட்டப்படுகிறது. இன்று, மக்கள் பிரதிநிதிகள் மக்களுடைய பிரச்சினைகளைச் சொல்வதற்குப் போதுமான அவகாசம் கொடுக்கப்படுவது இல்லை. ஆகவேதான், இன்று சட்டமன்றங்களிலேயும், நாடாளுமன்றத்திலேயும் டிஸிப்ளின் மெயின்டெயின் செய்ய முடியாத அளவுக்கு அவை குழப்பத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, குறைந்தபட்சம் 100 நாட்களாவது சட்டமன்றங்கள் நடத்தப்பட வேண்டுமென்ற சிபாரிசை எல்லாத் தரப்பினரும் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஒன்றைச் சொல்கிறேன், இன்று ஊர்வலங்கள் வருகின்றன என்றால், மக்களுடைய வேதனைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சொல்வதற்காக வருகிறார்கள். அது என்ன 'விளையாட்டிற்கு வருவதா? இல்லை. அவனவனுடைய வேதனைகளைச் சொல்வதற்காக வருகிற நேரத்திலே, அதைத் தடை செய்வதற்கு எடுக்கப்படுகிற முயற்சிகளுக்கு மாநில அரசும் உடந்தையாக இருக்கலாமா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்று, மாநில அரசு ஒரு சில காவல் துறை அதிகாரிகளுடைய கருத்தை மட்டும் கேட்டுக்கொண்டு, உச்ச நீதிமன்றத்திலே* affidavit *தாக்கல் செய்வது சரியல்ல. அனைத்து அரசியல் கட்சிகளினுடைய பிரதிநிதிகளையும் அழைத்து இது சம்பந்தமாகப் பேச வேண்டும். இதை மக்களுடைய ஜனநாயக உரிமையின்மேல் உள்ள ஒரு தாக்குதல் என்ற முறையில் பார்க்க வேண்டும். அந்த முறையிலே உள்ள ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக, என்னுடைய வேண்டுகோள்...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்கைந்து கடைசி வந்துவிட்டது.

[2002 மார்ச் 14

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** கடைசியாக, என்னுடைய வேண்டுகோள். மேலும் போக்குவரத்துத் தொழிலாளர்களைப் பழிவாங்கி விடாதீர்கள். அவர்கள் மேல் உள்ள சஸ்பென்ஷன் நடவடிக்கைகளை நீங்கள் வாபஸ் பண்ணுங்கள். அனைவருக்கும் வேலையைக் கொடுத்துக் கொண்டு, அவர்கள் மேலே, தூக்கிலிடக்கூடிய முறையிலே உள்ள குற்றங்கள் இருந்தாலும்கூட நீங்கள் விசாரணை நடத்துங்கள். அதைச் சந்திப்பதற்கு தொழிலாளிகள் தயாராக இருக்கிறார்கள். இந்தப் பழிவாங்கும் போக்கு, ஒரு ஜனநாயக நல்லெண்ணம் படைத்த அரசுக்கு உதவுவது அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று ஒன்றை மட்டும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள். அடுத்த வாய்ப்பின்போது பேசலாம். திருமதி டி. யசோதா. (குறுக்கீடு) திரு. எச். ராஜா, ஏதோ கேட்க வேண்டுமென்று சொல்லியிருந்தார். திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயோத்தி இராம ஜென்ம பூமியைப் பொறுத்தவரை, மத்திய அரசு தெளிவான முடிவு எடுத்திருக்கிறது; நிலைப்பாடு கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை அனுசரிப்போம். அதை அமல்படுத்துவோம் என்று பாரதப் பிரதமரும் சொல்லியிருக்கிறார்கள். Attorney-General சோலி சொராப்ஜியினுடைய வாதத்தின்போது வைத்த கருத்து இங்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் தேதி மறைந்த பாரதப் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்கள், விவாதத்திற்கு வெளியே இருக்கிற இடத்திலே ஷிலா நியாஸ் நடத்துவதற்கு, அடிக்கல் நாட்டுவதற்கு அனுமதித்தார்கள். அது யார் காதிலே பூச் சுற்றுகிற வேலை? ஆகவே, இம்மாதிரியாக ஒரு அரசாங்கத்தினுடைய எண்ணத்திற்கு ஒரு motive கற்பிப்பதுபோலப் பேசுவது முறையல்ல. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, விவாதத்திற்கு வெளியே இருக்கிற இடத்திலே பூஜை நடத்தினால் பிரச்சினை தீரும் என்றால், அப்படி ஒரு நிலைப்பாட்டை அரசாங்கமே எடுத்தால்கூடத் தவறு கிடையாது. ஆனால், பிரதமர் அவர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முடிவு எடுக்கும்போது, இன்று ஆட்சியிலே இல்லாதவர்கள் தண்ணீர் இல்லாத மீன்போலத் துடித்துக்கொண்டு, எப்படியாவது ஆட்சிக்கு வரவேண்டும் என்பதற்காக, தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளிடையே எப்படியாவது சண்டையை மூட்டிவிடலாம் என்று நினைக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது எனக்கு அனுமதி கொடுக்கவில்லை. ஆகவே, தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளிடையே இந்த சோலி சொராப்ஜியினுடைய கருத்தை வைத்து எப்படியாவது மோதல்களைக் கொண்டுவந்து, வெளியேற்றி விடலாம் என்று



2002 மார்ச் 14] [திரு. எச். ராஜா]

நினைக்கிறார்கள். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாரதிய ஜனதா கட்சி 50 ஆண்டுகள் எதிர்க்கட்சியிலே இருந்திருக்கிறது. அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால், பாரதப் பிரதமர் அவர்கள் ஒரு சரியான நிலைப்பாடு எடுத்திருக்கிறார்கள். அதற்கு யாரும் நோக்கங்கள் கற்பிப்பது முறையல்ல என்பதைத் தெரிவித்து, அமைகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், விட்டுவிடுங்கள். அவர் கருத்தைச் சொல்லிவிட்டார். அடுத்து, திருமதி யசோதா பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தமிழகத்திலே வேண்டுமானால் சின்னஞ்சிறு கட்சியாக இருக்கலாம். ஆனால், நாங்கள் இந்தியாவிலே இரண்டு மாநிலங்களிலே, அதிலேயும் குறிப்பாக ஒரு பெரிய மாநிலம், மேற்கு வங்காள மாநிலத்திலே, சென்ற 25 ஆண்டு காலமாகத் தொடர்ச்சியாக ஆட்சிப் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் என்ற பொறுப்புணர்ச்சியோடு நாங்கள் பேசுகிறோம். நாங்கள் N.D.A. கட்சிகளுக்குள்ளே மோதலை மூட்ட வேண்டிய அவசியம் இல்லை. தானாகவே அது மூட்டிக்கொள்ளும். Chandra Babu Naidu's statement is an evidence. அவர் வேறு ஒன்றைச் சொன்னார். சோலி சொராப்ஜி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், ஹேமச்சந்திரன், பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரு நிமிடம். அதாவது, சுப்ரீம் கோர்ட்டினுடைய நீதிபதி அவர்களே மிஸ்டர் சோலி சொராப்ஜியிடம் கேட்டார்:— 'What happened on 1992, December 6'

Soli Sorabjee was not able to give a proper reply. That is reported in 'Hindu'. That will be a reply to this...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற கவர்னர் அவர்களுடைய உரையின்மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துகளை நான் இங்கே முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு இந்த வாய்ப்பினைத் தந்த பேரவையினுடைய தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திருமதி டி. யசோதா] [2002 மார்ச் 14

கவர்னர் உரையைத் தொடங்குகின்றபோதே, 'விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்திலே இடமில்லை' என்று சொல்லி, மத்திய அரசுக்குத் தன்னுடைய கர்ஜனையை எடுத்துச்சொல்லி, டெல்லி செங்கோட்டையை அதிரச் செய்திருக்கின்ற தமிழக அரசினுடைய அந்த முடிவுக்கு முதற்கண் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அடுத்தாற்போல, இங்கே 15 அம்சத் திட்டத்தினை தமிழக முதல்வர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தமட்டிலும் அந்த 15 அம்சத் திட்டத்தினைப் பார்க்கின்றபோது அருமை அன்னை, முன்னாள் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி தந்த 20 அம்சத் திட்டத்தைப்போலவே, மறைந்த தலைவர் சஞ்சய் காந்தி அவர்கள் கொடுத்த 5 அம்சத் திட்டத்தைப் போலவே, இந்த 15 அம்சத் திட்டமும் எனக்குக் காட்சியளிக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. ஆனால், தமிழகத்திற்கு இன்றைக்கு 500 கோடிக்கு மேலாக, மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டிய தொகையைக் குறைத்திருக்கிறது. கவர்னர் உரையிலே, எல்லா மாநிலங்களுக்கும் அதுபோலத்தான் செய்திருக்கிறார்கள் என்று சொல்லியிருப்பது, நீங்கள் மத்திய அரசாங்கம் குறைத்ததை நியாயப்படுத்துகிறீர்களோ என்கிற ஓர் அச்ச உணர்வுகூட எனக்கு இருக்கிறது. நான் இங்கே கேட்கின்றேன். இப்படி, நம்முடைய திட்டங்களுக்காக, திட்டப் பணிகளுக்காகக் கொடுக்க வேண்டிய தொகையை 500 கோடிக்கு மேலே மத்திய அரசாங்கம் குறைத்திருக்கிறது என்றால், மத்திய அரசாங்கத்திற்காக வாதாடுகின்ற இங்கே இருக்கின்ற பேரவை உறுப்பினர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்; நீங்கள் சார்ந்திருக்கிற கட்சிதான் இன்றைக்கு மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிறது என்று சொன்னால், உங்களுக்குத் தமிழகத்தின்மீது அக்கறை இருக்கும் என்று சொன்னால், இந்த மண்ணுக்கு நீங்கள் விசுவாசியாக இருந்தால், மத்திய அரசாங்கத்திடமிருந்து போராடி, அந்தத் தொகையைப் பெற்றுத் தருவதற்கு நீங்கள் முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, இன்றைக்கு நமக்கு அந்தத் தொகை குறைந்திருக்கிற அதேநேரத்திலே நம்முடைய தமிழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் இந்தப் பிரச்சினையை, பாராளுமன்றத்திலே கட்சிப் பாகுபாடின்றி...



2002 மார்ச் 14] பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் 2-00 மணி வரை நீட்டிக்கப்படுகிறது.

**திருமதி டி. யசோதா:** கட்சி பேதமில்லாமல் அதை நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் வாதாடி இதற்காகப் பெறக்கூடிய வகையிலே பெற அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், அண்மையிலேகூட தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கடலூர் ஆகிய மாவட்டங்களில் கடலோரப் பகுதிகளில் பருவம் இல்லாத காலத்தில் பெய்த பெருமழையின் காரணமாக மிகப் பெரிய நட்டம் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது; பயிர்கள் நாசமாகியிருக்கின்றன. அதற்கு மாநில அரசு உடனடி நிவாரணமாக கிட்டத்தட்ட 49 கோடி ரூபாயை அவர்களுக்குக் கொடுத்து இருக்கிறது. அது போதுமா என்று சொன்னால் நிச்சயமாகப் போதாது. ஆனால், மத்திய அரசாங்கம் உடனடியாக இதிலே தலையிட்டு, அந்த உதவியைக் கொடுப்பதற்கு ஏன் காலதாமதப்படுத்துகிறது எனகின்ற அந்த வருத்தம் இருக்கத்தான் செய்கிறது. மத்திய அரசாங்கம் ஒரு மாநில அரசாங்கத்தின்மீது தவறான கண்ணோட்டத்தோடு, அவர்களுக்கு, இந்த மாநில மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அந்த உதவிகளை அரசாங்கத்தின்மீது ஏதேனும் குற்றங்குறைகளைக் கண்டு இவற்றையெல்லாம் கொடுக்காமல் தடுத்து நிறுத்திவிடக்கூடாது என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நான் நடுவிலேயே என் தொகுதியைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன். இல்லையென்றால் கடைசியில் சொல்ல முடியாமல் போய்விடுகிறது. ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்கு தாலுகா தலைநகரம் அதுதான்—Taluk Headquarters--அந்த Taluk Headquarters-லே ஒரு நீதிமன்றம் கிடையாது. ஒரு நீதிமன்றம் வந்தால் சிறப்பாக இருக்கும். ஏனென்றால், ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் இருக்கிற மக்களெல்லாம் பூந்தமல்லி கோர்ட்டுக்கு வருகிறார்கள். சுங்குவார்சத்திரம் பகுதியிலே இருக்கிற அந்த மக்களெல்லாம் காஞ்சிபுரம் கோர்ட்டுக்குப் போகிறார்கள். மண்ணூர், வளர்புரம் என்ற பகுதியில் இருக்கிற அந்த மக்களெல்லாம் திருவள்ளூர் கோர்ட்டுக்குப் போகிறார்கள். ஒரே தொகுதியில், ஒரு யூனியனில் இருக்கிற மக்கள், 3 கோர்ட்டுகளுக்கு

[திருமதி டி. யசோதா] [2002 மார்ச் 14

சுற்றிச் சுற்றி வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறபோது, தயவுசெய்து சட்ட அமைச்சர் அவர்கள் இதைக் கனிவுடன் பரிசீலித்து, ஸ்ரீபெரும்புதூருக்கு ஒரு நீதிமன்றத்தைக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுபோன்ற கோரிக்கைகள் எழுந்தவண்ணம் இருக்கின்றன. ஒரு மாவட்டத்திலே புதிதாக ஒரு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்றால், அந்த மாவட்டத்திலுள்ள நீதிபதி பரிந்துரை செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல், அங்கே Bar Council பரிந்துரை செய்து, அரசினுடைய நிதிநிலைமையைக் கருத்திலே கொண்டு, ஒரு priority அடிப்படையில் கொடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அங்கே அவசியம் ஏற்படின் ஒரு Priority அடிப்படையிலே அந்த இடத்திலே நிறுவுவதற்கு கருத்துகள் கேட்டு முடிவு எடுக்கப்படும்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த Bar Council-க்குப் போவது, Chief Justice உத்தரவு வாங்குவது போன்றவற்றையெல்லாம், அதாவது என்ன அந்த முன்கட்ட வேலைகளோ, அவற்றைச் செய்து தருகிறேன். நீங்கள் தனியாக இதிலே கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாவட்டங்களைப் பிரிக்கிறீர்கள். மாவட்டங்களைப் பிரிக்கிறபோது பல சலுகைகள் ஒரு மாவட்டத்தைவிட்டு இன்னொரு மாவட்டத்திற்குப் போய்விடுகின்றன. இப்பொழுது காஞ்சிபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருவள்ளூர் மாவட்டம் ஆகியது. ஆனால் காஞ்சிபுரம் மாவட்டத்திலே பூந்தமல்லி பகுதி இருந்தது. பூந்தமல்லியில்தான் காஞ்சிபுரம் மாவட்டத்தில், என்னுடைய தொகுதி முழுமைக்குமான உணவுப் பங்கீட்டு, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான கிடங்கு இருக்கிறது. இப்பொழுது மாவட்டத்தைப் பிரித்ததால் அது திருவள்ளூருக்குப் போய்விட்டது. ஆகவே, காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு, ஸ்ரீபெரும்புதூருக்கு எங்களுக்கு அதுபோன்ற சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கிடங்கு வேண்டும். அதை நிச்சயமாகக் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல L.D. Bank-ம்



2002 மார்ச் 14] [திருமதி டி. யசோதா]

பூந்தமல்லியிலிருந்து திருவள்ளூர் மாவட்டத்திற்குப் போய்விட்டது. காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு, எங்களுடைய Headquarters-க்கு L.D. Bank ஒன்று கொடுக்க வேண்டும். மகளிர் காவல் நிலையத்தை ஸ்ரீபெரும்புதூருக்கு—எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய அருமைத் தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நான் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-35

பயங்கரவாதத்தை முழுக்க, முழுக்க எதிர்ப்பவர்கள் நாங்கள். அதனை ஆதரிப்பதாக எங்கள்மீது பழி போட நினைப்பவர்கள்--நிச்சயமாக மக்களுக்குத் தெரியும்— பயங்கரவாதத்துக்குத் துணை போனவர்கள், பயங்கரவாதத்துக்கு வித்திட்டவர்கள் இன்றைக்குப் புனிதர்களாக வேடம் அணிந்து அறிவுரை கூறுகிறார்கள். நான் கேட்கின்றேன், அருமைத் தலைவர் காமராஜர் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவராக டில்லியிலே இருந்தபோது, 'கோமாதா, குலமாதா' என்று சொல்லி, பசுவதைத் தடுப்பு இயக்கம் என்று சொல்லி, மஞ்சள் வேட்டியைக் கட்டிக்கொண்டு, மஞ்சள் துண்டைப் போர்த்திக் கொண்டு, சூலத்தைக் கையிலே ஏந்திக்கொண்டு போய் எங்கள் அருமைத் தலைவர் காமராஜருடைய வீட்டைக் கொளுத்திய அன்றைய பயங்கரவாதிகள் யார் என்று நான் கேட்க விரும்புகிறேன். அதுதான் அன்றைக்குப் போட்ட வித்து இன்றைக்கு வளர்ந்துகொண்டு வருகிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கினறேன.

பயங்கரவாதத்துக்கு நாங்கள் கொடுத்த பலி கொஞ்சமா, சுதந்திர இந்தியாவிலே? தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகளைப் பறிகொடுத்தோம். அருமை அன்னை இந்திரா காந்தியைப் பறிகொடுத்தோம், எங்கள் தலைவர் ராஜீவ் காந்தியைப் பறிகொடுத்தோம். இந்த பயங்கரவாதத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறவர்கள், பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள் நாங்கள்தானே தவிர, வேறு யாரும் இல்லை என்கிறபோது எப்படி நாங்கள் பயங்கரவாதத்துக்குத் துணையாக இருப்போம் என்று இன்றைக்குக் கூறுகின்றார்கள் என்பதைத்தான், முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கப் பார்க்கிறார்கள் என்று நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அமெரிக்கா தாக்கப்பட்டது பயங்கரவாதத்தாலே. அமெரிக்கா தாக்கப்பட்டதற்குப் பிறகுதான், உலகத்திலே இருக்கிறவர்களுக்கே பயங்கரவாதத்தைப் பற்றிய எண்ணம் வந்திருக்கிறது. ஏன் காஷ்மீர்

பிரச்சினையிலே எத்தனை ஆண்டு காலமாக எத்தனை உயிர்களை நாம் பறிகொடுத்துக்கொண்டு வந்தோம்? எத்தனை நாடுகளுக்கு நாம் அதை எடுத்துச் சொன்னோம்? காஷ்மீரிலே பயங்கரவாதம் இருக்கின்றது. அதைத் தடுப்பதற்கு எங்களுக்கு ஆறுதலான வார்த்தைகள் சொல்லுங்கள் என்று சொன்னோமே, சொன்னார்களா? அமெரிக்கா இன்றைக்குத் தாக்கப்பட்டவுடனேதான் பயங்கரவாதத்துக்குத் தடுப்புகள் செய்ய வேண்டுமென்று உலக அரங்கிலே வந்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன்.

இன்னும்கூடச் சொல்கிறேன். இன்றைக்கும் சரி, அன்றைக்கும் சரி, பாகிஸ்தான் நமக்கு எதிராக இருந்துகொண்டு, இதுபோன்று பயங்கரவாதத்தைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறது என்று நாம் உலக அரங்கிலே சொன்னோம். அது செவிடன் காதிலே ஊதிய சங்காகத்தான் இருந்தது. இப்போதுதான், 'ஆமாம்' என்று சொல்லக்கூடிய நிலைக்கு வந்திருக்கின்றார்கள். இன்றைக்கு அதனாலே நாம் என்ன செய்திருக்கிறோம்? பாகிஸ்தானுக்கு ரயில் இல்லை, ரயில் போய்க்கொண்டிருந்தது; நிறுத்திவிட்டோம். பாகிஸ்தானோடு உறவு இல்லை. பாகிஸ்தானுக்கு பஸ் விட்டோம். டி.வி.-யிலே எல்லாம்கூட காட்டினோம். நம்முடைய பிரைம் மினிஸ்டர்கூட ஏறி உட்கார்ந்து போனார். இன்றைக்கு அந்த பஸ்ஸை நிறுத்திவிட்டோம். பாகிஸ்தானோடு நமக்கு உறவு கிடையாது; தூதர் உறவை முறித்துக்கொண்டோம். நம் தூதர், அங்கே இருந்தவரை இங்கே வரவழைத்துவிட்டோம், இங்கே இருந்த அவர்களுடைய ஆளை அனுப்பி வைத்துவிட்டோம். நமக்கும், அவர்களுக்கும் எந்த உறவும் கிடையாது.

அதுமட்டுமில்லை, கிரிக்கெட்கூட பாகிஸ்தானோடு ஆடக்கூடாது என்று இந்தியாவிலே இருக்கிற ஓர் அமைச்சர் சொல்லியிருக்கிறார். நம்முடைய உணர்வுகளும் அதுதான். இல்லை என்று சொல்லவில்லை.

சமீபத்திலே 'சார்க்' மாநாடு நடக்கிறது. எங்கே? காட்மாண்ட். அந்த 'சார்க்' மாநாட்டுக்கு நம்முடைய மத்திய அமைச்சர் அவர்கள் போகிறார்கள். 'சார்க்' மாநாட்டுக்கு மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அவர்கள் போகின்றார்கள். அங்கே போய் என்ன பண்ணுகிறார்கள்? எங்கள்கிட்டே கேபிள் டி.வி.யைக் கட் பண்ணிவிட்டீர்களே என்று கேட்கிறார்கள். கேபிள் டி.வி.யைக் கட் பண்ணியதைப் போய் அங்கே 'சார்க்' மாநாட்டுக்குப் போனவர்கள் கேட்கிறார்கள். நம்மகிட்டே கேட்டிருந்தால்கூட, ஒரு பக்கத்திலே போட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கலாம், தமிழ்நாட்டிலேகூட. பாகிஸ்தானிலே இவ்வளவு





உறவுகளைக் கட் பண்ணிவிட்டு, அவன் விரோதி நமக்கு, அவன்தான் பயங்கரவாதத்தைத் தூண்டி விடுகிறான், பல உயிர்களைக் கொலை செய்கிறான். ஆகவே, அவனோடு உறவு கூடாது என்று தூதர் உறவுகளை எல்லாம் முறித்துவிட்டு வந்ததற்கு அப்புறம், 'சார்க்' மாநாட்டுக்குப் போய் இவர்கள் கேபிள் டி.வி. கனெக்ஷன் கேட்டிருப்பது மட்டுமல்ல, அந்த அதிபரோடு, சர்வாதிகாரியாக இருக்கிற, அந்த ராணுவத்தினுடைய தலைவராக இருக்கிற அவரோடு சேர்ந்து போட்டோ எடுத்துக்கொண்டு, அந்த போட்டோ பத்திரிகையிலே வருகிறது என்று சொல்லும்போது, நான் நினைக்கிறேன், பயங்கரவாதத்தை எதிர்க்கின்ற நீங்கள், அதே நேரத்திலே உங்களுடைய அமைச்சரவையிலேயிருந்து ஒரு அமைச்சரை அனுப்பி, அங்கே நல்லெண்ணத் தூதுவரைப் போல நடத்துகின்ற இந்த நாடகத்துக்குப் பெயர்தான் இரட்டை வேடமா என்று கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆகவே இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே, நம்மைப் பொறுத்தமட்டிலே 65,000 கோடி ரூபாய் நாம் இராணுவத்திற்குச் செலவு செய்கிறோம். 65,000 கோடி ரூபாய். ஏன்? அந்த பாகிஸ்தான் நம்மை எதிர்க்கிறார்கள். ஆகவே, நம்முடைய இராணுவம் . . .

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2 மணிக்குள்ளே முடிக்க வேண்டும். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி டி. யசோதா:** அதெப்படி முடிக்க முடியும்? மற்றவர்களுக்கெல்லாம் 25 நிமிடம். எனக்கு மட்டும் இப்படியா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பார்லிமென்ட் விஷயத்திற்குள் எல்லாம் போய்க் கொண்டிருக்கிறீர்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் இப்பொழுதே சொல்லுங்கள், நான் உட்கார்ந்து விடுகின்றேன். எதுவும் பேசவில்லை. இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையிலே பலவற்றைப் பேசலாம் என்றால்கூட, சில முக்கியமான விஷயங்களை நான் பேசி முடிக்கின்றேன்.

நான் பாயின்ட்ஸ்கூட மிகக் குறைவாகத்தான் கொண்டு வந்திருக்கிறேன். தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத் திட்டம் என்பதை இப்போதுதான் நாம் கேட்க வேண்டும் என்பது இல்லை. 1980 ஆம் ஆண்டே, அருமை அன்னை இந்திரா காந்தி அவர்கள், தென் பகுதிக்கு,

[திருமதி டி. யசோதா] [2002 மார்ச் 14

தென்னிந்தியாவிற்குத் தண்ணீர் விட வேண்டும் என்பதற்காக, அவர்கள் மகாநதி நீரைத் தென்னிந்தியாவிற்குக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் போட்ட அந்தத் திட்டத்தை கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மத்திய அரசாங்கம் செய்கிறது. எப்படிச் செய்கிறார்கள் என்று சொன்னால், மகாநதி தண்ணீர், 2500 டி.எம்.சி. தண்ணீர் வீணாகிறது; கடலில் போய் கலக்கிறது. நாம் காவிரிக்குக்கூட சண்டை போட்டுக் கொண்டிருப்பது 250 டி.எம்.சி.தான் என்று நினைக்கின்றேன். ஆனால் 10 மடங்கு அதிகம். 2500 டி.எம்.சி. தண்ணீர் மகாநதியிலிருந்து கடலில் போய் கலக்கிறது. அந்த மகாநதித் தண்ணீர் இன்று தெற்குப் பகுதிக்கு வருகிறது. எப்படி வருகிறது? கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக வருகிறது. கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக வந்தால் என்ன நடக்கும் என்று சொன்னால், வெள்ளம் வந்தால், மழை வந்தால், புயல் வந்தால், ஏதேனும் உடைப்பு ஏற்படும் என்று சொன்னால், நிச்சயமாக ஊரே அழிந்துவிடக்கூடிய ஓர் அபாயகரமான சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான், நம்முடைய அரசாங்கம், மத்திய அரசாங்கத்திற்கு இந்த நிலைமையை எடுத்துச் சொல்லி, குறிப்பாக மகாநதியிலிருந்து—ஓரிசாவிலிருந்து மகாநதி, மகாநதியிலிருந்து தெலுங்கானா, தெலுங்கானாவிலிருந்து ராயலசீமா, ராயலசீமாவிலிருந்து வடகர்நாடகா, வடகர்நாடகாவிலிருந்து பீத்தர், பீத்தரிலிருந்து குல்பர்கா, குல்பர்காவிலிருந்து ரெய்ச்சூர், ரெய்ச்சூரிலிருந்து பெல்லாரி, பெல்லாரியிலிருந்து சித்திரதுர்கா, சித்திரதுர்காவிலிருந்து தும்கூர், தும்கூரிலிருந்து கே.ஜி.எப்.—கோலார் கோல்ட் பீல்டுக்குக்—கொண்டு வந்து விட்டோம் என்று சொன்னால், 2 வழியாக அதைப் பிரிக்கலாம். ஒரு வழி, தருமபுரி, கரூர், மருங்காபுரி, கோவில்பட்டி, திருநெல்வேலி; மற்றொரு வழி—கோலார் கோல்ட் பீல்டிலிருந்து பாலாறு வழியாக வேலூர், காவேரிப்பாக்கம், காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர், சென்னை; இப்படி 2 பக்கமாக இந்த நீரைக் கொண்டு வருகிறபோது தமிழ்நாட்டினுடைய மிகப் பெரிய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மிகப் பெரிய வழியாக இது அமையும். ஆகவே, இதைத் தமிழக அரசு நிச்சயமாக நீங்கள் எடுத்து, மத்திய அரசாங்கத்திற்கு இதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்ல திட்டங்களை அறிமுகப்படுத்தினாலும்கூட, சிலவற்றை, பலவற்றை நினைக்க வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம். ஆதிதிராவிட மக்களைப் பற்றி நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எனக்கு உண்மையிலேயே ஒரு பாட்டு நினைவிற்கு வருகிறது. 'எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, சொந்த நாட்டிலே' என்கிற மாதிரி சமத்துவபுரம்; சமத்துவபுரத்தைக் கட்டியிருக்கிறார்கள். யார் வீட்டுப் பணம் அது? ஆதி



2002 மார்ச் 14] [திருமதி டி. யசோதா]

திராவிட மக்களுக்கு என்று மத்திய அரசாங்கம் கொடுக்கிற மிகப் பெரிய தொகை; அதை ஆதிதிராவிட மக்களுக்குச் செலவு செய்யாமல், ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டை நாமம் தீட்டிவிட்டு, ஆதிதிராவிட மக்களை முழுக்க முழுக்க ஏமாற்றிவிட்டு, சமத்துவபுரம் என்ற பெயரிலே (மேசையைத் தட்டும் ஒலி) பல சமுதாயத்தைச் சார்ந்தவர்களைக் கொண்டு வந்து அவர்களை வாழ வைப்பதற்காகவா ஆதிதிராவிட நலத் துறை மூலமாக தாட்கோவிலிருந்து பணம் கொடுத்திருக்கிறார்கள்? இது எவ்வளவு பெரிய கொடுமை? இந்தக் கொடுமையைச் செய்துவிட்டு இன்றைக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு நாங்கள்தான் என்று சொன்னால், உண்மையிலேயே வேதனைக்குரியதுதான்.

பிற்பகல் 1-45

நான் இன்னும்கூட ஒரு சில விவரங்களை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே, இன்றைக்கு நீங்கள் நடத்தி முடித்திருக்கிற ஆசிரியர் வேலைக்கான, பயிற்சிக்கான அந்தத் தேர்வுகள் எல்லாம் எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல், மாற்றார்கூட இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகின்ற அளவிற்கு, ஒரு நியாயமான நிலையிலே அந்த வேலைவாய்ப்பையும் சரி, அந்தப் பயிற்சியையும் சரி, நல்ல நிலையிலே நீங்கள் நடத்தி முடித்திருக்கிறீர்கள் என்பதற்காக நிச்சயமாக நான் உங்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதேநேரத்திலே, கிட்டத்தட்ட 20 ஆயிரம் பேருக்கு அந்த training கொடுக்கப் போகிறீர்கள். இவர்கள் எல்லாம் ஏற்கெனவே training எடுத்தவர்கள்தான். இரண்டு வருடம் training எடுத்து, Certificate-ம் வாங்கிய பிறகு, அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்திலே, அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லையென்னும்போது, அவர்கள் கோர்ட்டுக்குப் போனார்கள். கோர்ட்டுக்குப் போனபோது, ஏதாவது ஒரு சின்ன training மாதிரி நீங்கள் வைத்து அவர்களை எடுத்துக்கொள்ளுங்கள் என்று கோர்ட் ஒரு guideline கொடுத்தது. அந்த guideline பிரகாரம், வருடத்திற்கு 400 பேர்—மொத்தம் 28 ஆயிரம் பேர்-வருடத்திற்கு 400 பேர் என்றால் 5 வருடத்திற்கு 2 ஆயிரம் பேர் 10 வருடத்திற்கு 4 ஆயிரம் பேர், 20 வருடத்திற்கு 8 ஆயிரம் பேர், 40 வருடத்திற்குத்தான் 16 ஆயிரம் பேர் வருகிறார்கள். அதிலும் மிச்சமிருக்கிறார்கள்.

இப்போது இருக்கிறவர்கள், interview-க்கு வந்தவர்கள் எப்படி வந்தார்கள் தெரியுமா? மாமனாரும், மருமகளும் வந்தார்கள். அம்மாவும், பெண்ணும் வந்தார்கள். மருமகளும், மாமியாரும் வந்தார்கள். ஏனென்றால்,

கல்யாணம் ஆகாதபோது அந்தப் பெண் Interview-வுக்கு வந்தாள்; 12 வருடங்கள் ஆகிவிட்டன. கையில் இரண்டு குழந்தைகளோடு interview-வுக்கு வருகிறார். அதுபோன்ற சூழ்நிலைமைகளைப் பார்க்கிறபோது, ஏற்கெனவே அவர்களுக்கு வயதாகிவிட்டது. 35, 36 வயதைத் தாண்டியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இன்னும் நீங்கள் அவர்களை 4 வருடம், 5 வருடம், 10 வருடம் என்று கிடப்பில் போட்டீர்கள் என்று சொன்னால், அவர்கள் எல்லாம் அதற்குள் retire ஆகிவிடுவார்கள். பதவிக்கு வராமலேயே, உத்தியோகத்திற்கு வராமலேயே ரிட்டயர் ஆகக்கூடிய சூழ்நிலைமையிருக்கிறது. அதனால், அதை நீங்கள் செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், இரண்டாயிரம் பேர் அதில் விடுபட்டிருக்கிறார்கள். அந்த இரண்டாயிரம் பேரை விட்டிருக்கிறார்கள். என்ன காரணம் என்று கேட்டால், இரண்டாயிரம் பேர் 45% மார்க் வாங்கவில்லையாம்; மார்க் கம்மியாக இருக்கிறதாம்; அதனால் நீங்கள் மறுபடியும் போய் படித்துவிட்டு வாருங்கள் என்று சொன்னால், இப்போதே அவர்களுக்கு 35, 36 வயது; அவர்கள் எங்கே போய் மறுபடியும் பிளஸ்-2 படித்து 45% மார்க் வாங்குவது? அதனால், இந்த 2 ஆயிரம் பேரைக் கருணையோடு, நீங்கள் அவர்களை அங்கீகரிக்க வேண்டும். தமிழக முதல்வர் அவர்கள் தாய்க்குலத்தின் தலைவியாக இருக்கிற காரணத்தாலே, எல்லோருக்கும் கொடுத்தார்களே, அந்த மாதிரி—அந்த 2 ஆயிரம் பேரும் ஏற்கெனவே training எடுத்து pass பண்ணி, certificate வைத்திருக்கிறார்கள். அதனால் அந்த 2 ஆயிரம் பேருக்கும் நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்குவதற்கு, அந்தத் தேர்விலே அவர்களையும் நீங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சட்டக் கல்லூரி மாணவர்களைப் பற்றி நிறையப் பேர் பேசினார்கள். (மணியடிக்கப்பெற்றது). முடித்து விடுகிறேன். இரண்டே இரண்டு subjects.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திருமதி டி. யசோதா:** முக்கியமான subject-ஐப் பேசி முடித்து விடுகிறேன். சட்டக் கல்லூரி மாணவர்கள்—நம்முடைய முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அரசாங்கத்தின்மீது வழக்குப் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதனால் அம்மாவினுடைய அனுமதியோடு சட்ட அமைச்சர் அவர்கள் மாணவர்களை வரவழைத்து, முதலில் அவர்கள் அரசாங்கத்தின்மீது போட்ட கேசை withdraw பண்ணி,





நாமும் withdraw பண்ணி, அவர்கள் பரீட்சைக்குச் செல்கின்ற நேரத்தில் ஒரு நிம்மதியான சூழ்நிலையை நீங்கள் தோற்றுவித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் பதில் சொன்னால் நேரம் ஆகிவிடும்.

அடுத்தாற்போல, ஆதிதிராவிட மக்களுக்கு நீங்கள் பதவி உயர்வு கொடுப்பதாகச் சொல்கிறீர்கள். உண்மையிலேயே உங்களுடைய எண்ணம் நல்ல எண்ணமாக இருக்கலாம். நான் அதை வரவேற்கிறேன். சுதந்திர இந்தியாவில், ஆதிதிராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எவ்வளவு பேர் மிகப் பெரிய பொறுப்புகளுக்கு வந்திருக்கிறார்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஆதிதிராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு promotion கொடுக்க வேண்டுமென்று, ஜனாதிபதி கையெழுத்துப் போட்டு நம்முடைய அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. அதனால் கருணை உள்ளத்தோடு அதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும்.

Highways Department-ஐ இப்போது எடுத்திருக்கிறேன். பட்ஜெட்டில் மற்ற துறைகளைக் கொண்டு வருகிறேன், இப்போது நேரம் இல்லாததால். Highways-ல் மட்டும் S.C., S.T. பொறியாளர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் தெரியுமா? தலைமைப் பொறியாளர்கள் 10 பேர். இரண்டு பேர் எங்களுக்கு—18 சதவீதத்தின்படி—கொடுக்க வேண்டும். ஒருவர்கூட இல்லை. கண்காணிப்புப் பொறியாளர்கள் 21 பேர் மொத்தம். 4 பேருக்குக் கொடுக்க வேண்டும். ஒருவருக்குக்கூட கொடுக்கவில்லை. கோட்டப் பொறியாளர்கள் 124 பேர்; 21 பேருக்குக் கொடுக்க வேண்டும். 19 பேர் இருக்கிறார்கள். அதனால் இரண்டு பேர் இல்லை. அதைக்கூட நான் பெரிதாகச் சொல்லவில்லை. உதவிக் கோட்டப் பொறியாளர்கள் 610 பேர். ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்களே, தயவுசெய்து இதைக் குறித்துக்கொள்ளுங்கள். உதவிக் கோட்டப் பொறியாளர்கள் 610 பேர். 142 பேருக்கு S.C.,S.T.-க்குக் கொடுத்திருக்க வேண்டும்—18 சதவீதத்தின்படி—40 பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; 102 பேருக்கு இல்லை. இந்த நிலைமையை நிச்சயமாக நீங்கள் மாற்றியாக வேண்டும். சுதந்திர இந்தியாவில் இந்தச் சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் மூன்றே பேர்தான் Chief Engineer ஆக வந்திருக்கிறார்கள். 52 வருடத்திற்கு மேலாகி விட்டது. 1949-50-ல் C.E. ஆக எஸ்.இ. நாயக என்பவர் வந்திருக்கிறார். 1986-87-ல் C.E. ஆக கனகரத்தினம் என்ற ஒருவர் வந்திருக்கிறார். 1994-95-ல் எம். ராஜகோபால் என்ற C.E. ஒருவர் வந்திருக்கிறார். அதற்குப் பிறகு இன்றைக்கு வரையில் C.E. ஆக வரவில்லை. இதில் என்ன நடக்கிறது என்று சொன்னால், இப்போது ஜனாதிபதியினுடைய உத்தரவு

வந்துவிட்டது; மூன்று மாதங்களுக்குள் போடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதிகாரிகள் என்ன நினைக்கிறார்கள்? மூன்று மாதங்கள் இருக்கிறது அல்லவா? அதற்குள்ளாக அவசர அவசரமாக ஒரு லிஸ்டைத் தயார் பண்ணி, இந்த ஆதிதிராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்குக் கிடைப்பதற்கு மூன்று மாதம் time இருக்கிறது இல்லையா, அதற்குள்ளாக அந்த இடத்திற்கு வேறு ஆட்களை நியமனம் செய்துவிட வேண்டுமென்று அவசரப்படுகிறார்கள். அந்த நிலையைத் தயவுசெய்து நீங்கள் தடுத்தாட்கொள்ள வேண்டுமென்பதைத்தான் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

*பிற்பகல் 1-50*

கடைசியாக ஒரேயொரு சம்பவத்தை மட்டும் சொல்கிறேன். 2001-ல் இருந்த—முன்னாலே இருந்த—திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், ஆதிதிராவிட மக்களுக்காகச் சலுகை செய்த அரசாங்கம், ஒன்றரை வருடத்தில் ஓய்வு பெறவிருந்த ஒரு எஸ்.ஈ. அவர் சீப் என்ஜினியராக வருவதற்கு, பிரமோஷனில் இருந்தார். சீப் என்ஜினியராக வரவேண்டுமென்றால் ஒரு வருடம் சர்வீஸ் இருக்க வேண்டும். அந்த ஒன்றரை வருடத்தில் 6 மாதமும் 1 நாளும் குறைகிற வரையிலும் காத்திருந்தார், அந்த 6 மாதம் ஒரு நாள் குறைந்தவுடன், 11 மாதம் 29 நாள் இருந்ததால் அவருக்கு அந்தத் தகுதி இல்லாமல் போய்விடுகிறது. அதுவரைக்கும் அந்தப் போஸ்டைக் காலியாகவே வைத்து, அதற்குப் பிறகு வேறு சமுதாயத்தைச் சார்ந்தவருக்கு அந்த இடத்தைக் கொடுத்து அலங்கரித்து இருப்பதுதான், அவர்கள் அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஆதிதிராவிட மக்களுக்குச் செய்த சலுகைகள் என்று சொன்னால், அந்தச் சலுகைகள் நாசமாகப் போகட்டும் என்று இந்த மாமன்றத்திலேயிருந்து தெரிவிக்க விரும்புகின்றேன். ஆகவே, அதுபோன்ற துரோகம், அதுபோன்ற ஏமாற்றுத்தனம், அதுபோன்ற சூழ்நிலையை நீங்கள் நிச்சயமாக உருவாக்க மாட்டீர்கள் என்கிற நம்பிக்கையின் அடிப்படையிலே உங்களிடத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றே ஒன்று, கடைசியாகச் சொல்லிவிடுகிறேன். ஏரி, குளம், குட்டை ஆக்கிரமிப்பு இவற்றையெல்லாம் எடுத்தால்தான் நிலத்தடி நீர் இருக்கும் என்று அரசு அறிவித்திருக்கிறது. மெட்ராஸிலேயும் என்னுடைய ஏரியாவைச் சுற்றிலும் ஏரி, குளம், குட்டைகளை எல்லாம் ரியல் எஸ்டேட், ப்ளாட் போட்டு விற்றாகிவிட்டது. இனிமேல் எடுப்பதற்கு என்ன வழியிருக்கிறது என்பதைப் பாருங்கள். நிலத்தடி நீரும் கிடைக்காது; நீங்கள்





வெளியிலிருந்து தண்ணீர் கொண்டுவந்துவிட்டால்தான் ஆச்சு; ஏனென்றால் எல்லாம் போய்விட்டது. ப்ளாட் போட்டு விற்று விட்டார்கள். வாங்கியவர்கள்தான் வயிற்றெரிச்சல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுதான் நிலைமை.

அதேபோல அம்மாவிடம்கூட பழைய போக்குவரத்து மந்திரி சொன்னார், சென்ற சட்டமன்றத்திலே மூன்று பெண் மந்திரிகள் இருந்தார்கள் என்று. 33 சதவிகிதம் அம்மா கேட்கிறார்கள். டெல்லியிலேகூட சரோஜா அம்மா 33 சதவிகிதம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். உங்கள் நாட்டிலே இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். இருக்கிறது. ஒரு ப்ளாக்கையே லேடீஸுக்கு என்று அம்மா கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அம்மா கொஞ்சம் பெரிய மனது செய்து, அதிலே கொஞ்சம் கூடுதலாகப் பெண்களைப் போட்டால் நல்லது. எல்லாமே அவர்கள்தான். ஆணுக்கும், பெண்ணுக்கும் சேர்த்து ஒரே உறுப்பினராக இருந்தாலும்கூட, பெண்கள் அந்த மூன்று பேர் இருந்ததை இப்போது ஒருவராக ஆக்கியிருக்கிறீர்கள். அதை மறுபடியும் கன்சிடர் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஊட்டி எம்.எல்.ஏ. ஒரு பிரச்சினையைச் சொல்லியிருக்கிறார். ஊட்டி சட்டமன்ற அலுவலகம் இன்னும் கட்டப்படவில்லையாம். அரசாங்கத்திற்கு, மிக அருகிலே இருக்கிற இரண்டு இடங்கள் தேர்வு செய்து கொடுக்கப்பட்டும், இதுவரையில் நிர்வாகம் தேர்வு செய்து தரவில்லையாம். அலுவலகக் கட்டடம் 5 இலட்சம் ரூபாய் தானே? அங்கு ஊட்டியில் என்றால் மலை மேலே கட்டடம் கட்டுவதற்கு இன்னும் ரூ. 1.50 இலட்சம் அதிகம் ஆகும் என்று சொல்கிறார்களாம். அதனால், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் இருவரும் சேர்ந்து, ஊட்டியில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டு, நீண்ட, நெடிய நேரம் நான் பேசவில்லை என்றாலும்கூட, கடைசியாக, கல்வி அமைச்சர் அவர்களுக்கு ஒரு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கடைசி மூன்று நிமிடங்கள் பேசுங்கள்.

**திருமதி டி. யசோதா:** முடித்து விடுகிறேன். முடித்து விடுகிறேன். கடைசி—அதாவது, இலவசக் கல்வித் திட்ட விரிவாக்கம். இன்றைக்கு நடுவண் அரசுகூட அதில் ஆர்வம் காட்டுகிறது. அதுபோன்ற சூழ்நிலையில் உங்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். பக்தவத்சலம் அவர்கள் நீண்ட பரிசோதனைக்குப் பிறகு, ஆரம்பப் பள்ளிகளிலே 20 மாணவர்களுக்கு

[திருமதி டி. யசோதா] [2002 மார்ச் 14

ஒரு ஆசிரியர் என்ற கொள்கை முடிவை 1964-லே எடுத்தார்கள். அது சிக்கல் இல்லாமல் சிறப்பாக நடைபெற்றது. ஏனென்றால், உயர்நிலைப் பள்ளிகளுக்கு, வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை; ஆரம்பப் பள்ளிக்கு அது கிடையாது. தற்போது 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்றாலும்கூட, அந்த ஆசிரியர் எவ்வளவு வகுப்புகளுக்குப் பாடம் எடுக்கவேண்டும். அதன் தரம் எவ்வளவு இருக்கும் என்பதை அரசு கருத்தில்கொண்டு ஆவன செய்ய வேண்டும். காமராஜர் காலத்தில் 'கல்வி வரி' என்று ஒன்று போட்டார்கள். Education Cess என்று உள்ளாட்சி அமைப்புகளுக்கு, அந்த நிதிச் சுமையிலே பங்கேற்பு இருந்தது.

இப்போது அது இல்லை. மொத்தத்தையுமே நாமே தாங்க வேண்டுமென்ற நிலைமை இருப்பதால், அதையும் கன்சிடர் பண்ணவேண்டுமென்று கேட்டு, இந்த கவர்னர் உரையை வரவேற்று அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-55*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதிதிராவிடர் இனப் பெருமக்களுக்கு, பதவி உயர்வில் நியாயமான தீர்ப்பு வழங்கப்பெற வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு இதயதெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்றென்றைக்கும் ஆதிதிராவிட இனப் பெருமக்களுக்கு ஆதரவான நிலையை எடுப்பார்கள் என்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துக்காட்டாக, ஜி.ஓ. 44-ஐ மீண்டும் அமல்படுத்தி, ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் குழு அமைக்கப்பெற்று, அந்தக் குழு அனைத்துத் துறைகளிலும் இருக்கின்ற பணியிடங்களைக் கண்டறிந்து கொண்டிருக்கின்றது. அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, நெடுஞ்சாலைத் துறையில் பொறியாளர்களுக்குரிய பதவி உயர்வு தரப்பட வேண்டும் என்று என்னுடைய கவனத்திற்கு இன்று கொண்டு வந்திருக்கிறார்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். அவர்களுடைய நியாயங்கள் உறுதியாக—மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்—நியாயமான கோரிக்கை—ஏற்கப்படும் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2002 மார்ச் 14]

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் பேசுகிறபோது குறுக்கிடக் கூடாது என்று இருந்தேன். சாபம் எல்லாம் இட்டார். ஆனால், அவருக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். யாரோ ஒரு இன்ஜினியருக்குப் ப்ரமோஷன் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். எனக்கு என்னவென்று தெரியாது. ஆனால், அதற்காக, 'அவர்களுக்கு—அரிஜனங்களுக்கு—நீங்கள் செய்தது எல்லாம் நாசமாகப் போக' என்றார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான், அதாவது தலைமைச் செயலாளராக முத்துசாமி என்கின்ற ஒரு தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகனை நியமித்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் அவருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நானும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோதுகூட பத்மநாபன் அவர்களைத் தலைமைச் செயலாளராக நியமித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெயருக்கு ஒரு சீஃப் செகரட்டரியைப் போட்டுவிட்டு, சீஃப் மினிஸ்டரே கையிலே மொத்தப் பொறுப்புகளையும் வைத்துக்கொண்டு, அவர் சொல்வதற்கு எல்லாம் கையெழுத்துப் போடுகிற மாதிரி ஒரு நிலைமை இருந்தது என்றுகூடப் பொதுமக்கள் பரவலாக வெளியிலே பேசிக்கொண்டார்கள். அதனாலே இந்த மாதிரி கீழேயிருந்து மேலே வாருங்கள். மேலே கொடுத்து, எங்களுக்குக் கண்துடைப்பு வேலை வேண்டாம் என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[2002 மார்ச் 14

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32 ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 15-3-2002 ஆம் நாளன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். (குறுக்கீடு)

நாளைக்கு டைம் போதாது அல்லவா? (குறுக்கீடு) We are going to waive only the Question Hour tomorrow, for want of time.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்ததை நான் மறுக்கவில்லை. ஆனால் எங்களுடைய குறை என்னவென்றால், you have to consult us.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** This is just to enable (Interruption) No, no. Hon. Deputy Speaker Sir, this is only to enable Hon. Duraimurugan to have more time for his speech. உங்களுக்கு நாளைக்கு நிறையப் பேசுவதற்கு வாய்ப்புத் தரவேண்டும் என்ற நோக்கோடு . . .

**திரு. துரைமுருகன்:** நான் உங்களுடைய தீர்மானத்திற்குக் குறுக்கே நிற்கவில்லை. ஆனால், மரபு என்னவென்று கேட்டால், கேள்வி நேரத்தை ஒதுக்கி வைப்பதிலே இப்படித் தீர்மானம் கொண்டு வரலாமா என்று un-official-ஆகக் கேட்பார்கள். அதைத்தான் நான் தெரிவித்தேன், எங்களுக்குத் தெரிவிக்கவில்லை என்று. நீங்கள் தீர்மானம் கொண்டு வருவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2002 மார்ச் 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை. (குறுக்கீடு)

திரு. ஜி.கே. மணி, நீங்கள் நாளைக்குப் பேசுங்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (15-3-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-58 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2002 மார்ச் 14

# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*39. 27-03-1998* ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட பின்னர் மாற்றப்பட்ட வணிக வரித் துறையின் II(1)/CTRE/41 (C-2)/98 ஆம் எண் அறிவிக்கையில் வேறுபாடு செய்தது குறித்தும், *5-3-1997* ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II(1)/CTRE/22(a- )/97 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்தது குறித்தும், *2-6-2000* ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் துறையின் II(1)/CT/45(b-1)/2000 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்தது குறித்தும் மற்றும் *1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், ஒரு வணிகர் பருத்தி நூல் கொள்முதல் செய்து, மேற்சொன்ன பருத்தி நூல் உள்ளாடை பொருட்கள் தயாரிப்பில் பயன்படுத்துகிற பருத்திமீது நேரடியாக செலுத்தவேண்டிய வரி அளவிற்கு பருத்தி உள்ளாடை பொருட்களின் விற்பனை மீது செலுத்தத்தக்க வரியைக் குறைப்பது குறித்தும் வணிக வரிகள் துறையின் *30-11-2001* ஆம் நாளிட்ட *110* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*40.* வணிக வரிகள்-அறநிலையத் துறையில் உருவாகி, *10-4-1991* ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்ட II(1)/CTRE/73/91 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து விட்டு அதற்குப் பதிலாகவும், சென்னை-*41*, கொட்டிவாக்கம், *144/7*, பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள திருவாளர்கள் ரினௌண்ட் ஆட்டோ புராடெக்ட்ஸ் மானுபாக்சரிங் லிமிடெட் நிறுவனம், *1-4-1990* முதல் *31-3-1995* வரையிலான *5* ஆண்டு கால அளவிற்கு செலுத்தத்தக்க வரியை சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு தள்ளி வைப்பது குறித்து வணிக வரித் துறையின் *9-11-2001* ஆம் நாளிட்ட *103* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*41. 2000-2001* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு



2002 மார்ச் 14]

நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619-ஏ* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

*42. 1999-2000* ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619-ஏ* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

*43. 1999-2000* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முதலாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619-ஏ* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

*44. 2000-2001* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619-ஏ* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

*45. 2000-2001* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619-ஏ* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*19.* பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை *(2001-2002)*.

*20.* பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை *(2001-2002)*.

*21.* பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை *(2001-2002)*.

*22.* பொது நிறுவனங்கள் குழுவின் பத்தாவது அறிக்கை *(2001-2002)*.

223756
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.